Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 30.00

ஜூலை 31 - ஓகஸ்ட் 06, 2014


# வாரமலர் தினமுரசு




THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1077

## தவறாக மொழிபெயர்க்கப்பட்டது


# இந்தியாவின் மௌனம்





சேருவிலவில் புனித பூமி!

# தமிழர்களின் தேசியத்தலைவர் சுடப்பட்டு 25 ஆண்டுகள்...



# கறுப்பு ஜுலை



நெஞ்சம் மறப்பதில்லை

## தொன்மையான சூரிய வழிபாடு

சூரிய வழிபாடு மிகத் தொன்மையானது. பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சூரிய வழிபாடு இருந்து வந்திருப்பது ஆய்வுகள் வாயிலாக அறியப்படுகின்றன. சூரியன் மெய்ப்பொருள் என்பது சௌர மதத்தின் அடிப்படைத் தத்துவமாகும்.

ஆதிசங்கரர் வகுத்தளித்த ஆறு வழிபாட்டு முறைகளில் சூரிய வழிபாடு தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. அது மட்டுமின்றி நாம் கண்ணால் பார்க்கக்கூடிய ஒரே தெய்வம் சூரியன். இத்தகைய சிறப்புகளை கொண்ட சூரியன் உலகம் முழுவதும் வியாபித்திருக்கின்றான்.

மூல தத்துவத்தின் பிரதிநிதியாக இருப்பதால் சூரிய நாராயணன் என்றும், பகலில் உதிப்பதன் காரணமாக பகலவன் என்றும், கதிர்களைவீசி உயிர்களை இன்புறச் செய்வதால் கதிரவன் என்றும் போற்றப்படுகிறான். சூரியனில் உள்ள ஹைட்ரஜன் ஹீலியமாக மாறிக்கொண்டே இருப்பதால், அதற்கு அதிக சக்தி உண்டாகிறது.

சூரியனுக்கு ஈர்ப்பு சக்தி அதிகம். இந்த சூரிய சக்தியைத் தான் விஞ்ஞானிகள் உலகிற்குப் பயன்படும் சக்தியாக மாற்றி, பல வெற்றிகளை அடைந்துள்ளனர். சூரிய சக்தியில் இருந்து எரிசக்தி, மின்சக்தி போன்றவற்றை இந்த பூவுலகம் பெற்று பயன்படுத்தி வருகிறது என்பது இன்றைய நடைமுறையில் நாம் காணும் நிகழ்வாகும்.

## இயேசு காட்டும் அடையாளம்!

ஆன்மீகம்

அடையாளங்கள் மனித வாழ்வுக்கு மிக அவசியமானவை. அவையின்றி உறவோ, தொடர்போ அமையாது. இறைவன் நம் வாழ்வில் அவரது அன்புக்குப் பல அடையாளங்களைத் தந்துள்ளார். நமது வாழ்வு, கொடைகள், திறமைகள், ஆற்றல்கள், வாய்ப்புகள், நமது வெற்றிகள், சாதனைகள்... அனைத்துமே ஆண்டவரின் அருளின் அடையாளங்கள்தான்.

அவற்றை அடையாளம் கண்டுகொள்ள விசுவாசப் பார்வை தேவை. நம்பிக்கைப் பார்வையின்றி இருப்போருக்கு எத்தனை அடையாளங்கள் தரப்பட்டாலும், அவற்றைக் காண இயலாது. இயேசுவின் காலத்தில் வாழ்ந்த மறைநூல் அறிஞரும், பரிசேயரும் இத்தகையோராக இருந்தனர். எனவேதான், இயேசுவின் வாழ்வையும், பணிகளையும், குறிப்பாக அவரது அருங்குறிகளையும் கண்டபின்னும் வேறு அடையாளங்களைத் தேடினர்.

நமது வாழ்வைக் கொஞ்சம் ஆய்வு செய்து இறைவன் நமக்குத் தந்துள்ள அடையாளங்களை இனம் கண்டுகொள்வோம். அவற்றுக்காக நன்றி கூறுவோம். எண்ணிப் பார்த்தால், ஏராளமான அடையாளங்களை நாம் எளிதில் கண்டுகொள்ளலாம்.

## நபிகள் கூறிய நயவஞ்சகன் யார்?

நயவஞ்சகம் இஸ்லாம் வெறுக்கின்ற மிகமோசமான ஓர் பண்பாகும். ஒரு மனிதனின் வாழ்க்கை உள்ளும், புறமும் சொல்லும், செயலும் ஒன்றாக இருக்கவேண்டும். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். பின்வரும் நான்கு விடயங்கள் யாரிடம் உள்ளதோ அவனே நயவஞ்சகன்.

01.பேசினால் பொய் பேசுவான்.
02.வாக்களித்தால் மாறு செய்வான்.
03.நம்பினால் துரோகம் செய்வான்.
04.விவாதம் புரிந்தால் விதண்டாவாதம் செய்வான்.

இத்தகைய குணங்களைக் கொண்டவனின் மறு பெயர்தான் முனாபிக். இந் நயவஞ்சகக் குணமுடைய முனாபிக் அவனது பேராசை காரணமாக பொறாமை கொண்டவனாகவும் இருப்பான். இறைமறை கூறுகிறது. இங்கே அவதானியுங்கள்.

நிச்சயமாக நயவஞ்சகர்கள்(முனாபிக்குகள்) பாவிகளே ஆவர். அல்குர் ஆன் 9:67

நிச்சயமாக நயவஞ்சகர்கள் நரகத்தில் மிகவும் கீழான அடித்தளத்தில் இருப்பார்கள். அல்குர் ஆன் 4:145

நாம் இப்போது நபிகள் கூறிய நயவஞ்சகன் யார்? என்பதை அறிந்துகொண்டோம் அல்லவா.

-எம்.சீ.கலீல், கல்முனை - 05

## கவிதைப்போட்டி 1074



● பாராட்டுக்குரியது ●

### சுகமான சுமை

வயிற்றில் சுமந்தவளும்
வானில் வாழப்போனதால்
உன்னை என் முதுகில்
சுமக்கின்றேன்
வாழ்க்கையே நமக்கு
சுமை என்பதால் - நீ
எனக்கு என்ன சுமை - உன்
சுமையிலே நான்
சுகம் காணும் போது?

இளம்பிறை யோகன்.
புத்தளம்.

### உபத்திரம்

கட்டிளம் காளை முதுகில்
கனிவுறு மழலை தன்னை
ஒட்டியே உறக்கம் கொள்ளும்
உள உபத்திரம் அதுதான் என்ன?

K.M.A.அஸீஸ்.
சாய்ந்தமருது -1.

## கவிதைப் போட்டி இல 1077



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல்,
தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 11.08.2014

கவிதைப் போட்டி இல. 1077 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### சரித்திரம் படைக்க!!

தந்தை போல்
நீயும் துயில் கொண்டால்
நாளைய விடியலை
யார் எதிர்கொள்வது?
எழுந்திரு கண்ணா!
நீயும் சரித்திரம் படைக்க
தந்தையையும் தட்டி
எழுப்பிக் கொண்டு...!!

எம்.யூ.அல்சாத். ஓட்டமாவடி.

### சுடுகாடு வரைக்கும்

தலைவனே விழித்தெழு
சுட்டிப் பையனின் சுகமான தூக்கமிங்கு
பாசப் பிணைப்பா? பராமரிப்பு முறையா?
தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்
மனதில் கொள் மாற்றிக்கொள்.

எம்.சி.கலீல், கல்முனை–05.

### தூங்குகின்றீர்களோ!

உலகை மறந்து, இருவரும்
ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும்
காரணமென்னவோ?
காத்திருப்பதில், ஏற்பட்ட களைப்போ
ஒரு பயணத்தை தவறவிட்டாலும்
அடுத்த பயணம் வரும்வரை
செய்வதறியாமல் தூங்குகின்றீர்களோ!

யே.ஒகஸ்ரா, கண்டி.

### எதனால்...?

இவர்களின் ஆழ்ந்த சயனம்
வெறும் களைப்பால் அல்ல
மனைவியா யின்றி -துணைவியாய்
வந்தவள் விட்டுப்போகுமுன்
கொட்டிக் கொடுத்த
போதை கலந்த மதுவால்...?

அ.சந்தியாகோ. கண்டி.

### முதுகிலா சுமக்கிறாய்...!

பிள்ளைகளை முதுகிலா சுமக்கிறாய்?
எனக்கடிந்து கொள்வர் சிலபேர்
இங்கு ஒருபடி மேலே போய்...
பிள்ளையோ தந்தையின்
முதுகுத் தொட்டிலில் தூங்க...
தந்தையிவரும் தூங்குகிறார்
ஒரு கட்டிலில், மெய்மறந்தே...!

ஏ.எம்.கமால். புத்தளம்.

### வேறுவழி தெரியவில்லையே

பிரயாணத்தில் ஏற்பட்ட கஷ்டமோ?
நாடுவிட்டு, நாடுவந்த...
தேசகுண வித்தியாசமோ?
உங்கள் இருவருக்கும்...
இந்தச் சோர்வு...
காத்திருக்க வேண்டிய நிலைமையே
எதுவானாலும், தூங்குவதைவிட,
வேறு வழி தெரியவில்லையே!

P.Y.ஜேசுமணி. கண்டி.

## உங்கள் பக்கம்

### வீதி திருத்தப்படுமா?

வட்டுக்கோட்டை மேற்கு சுப்பிரமணிய வித்தியாசாலை வீதி மற்றும் இந்த வீதியோடு இணைந்த உவவில் வீதியும் பல வருடங்களாக திருத்தப்படாமல் சேதமடைந்து காணப்படுகின்றது.

சுப்பிரமணிய வித்தியாசாலை வீதி குன்றும்குழியுமாகக் காணப்படுவதால் மழை காலங்களில் இவ்வீதியால் செல்ல முடியாமல் சேறும் சகதியுமாக இருப்பதால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

இவ்வீதி புனரமைக்கப்படாது காணப்படுவதால் பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், மக்கள் ஆகியோர் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும் சுப்பிரமணிய வித்தியாசாலை வீதியோடு இணைந்துள்ள உவவில் வீதியும் சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால் அப்பாதையால் விவசாய நிலங்களுக்குச் செல்வோர் மற்றும் பலதரப்பட்ட மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்கின்றபோதிலும் சில கிராமங்கள் இன்றும் கண்டுகொள்ளப்படாமல் - பாராமுகமாக காணப்படுவது கவலைக்குரியதே.

எனவே இக்கிராம மக்களாகிய எமக்கு இவ்வீதியை புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென 'உங்கள் பக்கம்' ஊடாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

எஸ்.எஸ்.ரட்ணம்,
வட்டுக்கோட்டை.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com


### அமைதியின் சொற்கள்

நிம்மதி தேவை என்பதை உங்களால் ஏற்றுக்கொள்ள முடிந்தால் அன்றுதான் நிம்மதியை நோக்கிய உங்கள் பயணம் ஆரம்பமாகும்.

- பிரேம் ராவத்




## வாசகர்சாலை

### வேண்டுகோள்!

மனம் சிந்தனை வெளிப்பட கவியின் சிறப்பை வெளிப்படுத்த நீ 2ஆம் பக்கத்தில் பிரசுரமாகும் படங்கள் சூப்பர். என சிந்தனைக்கு புடம்போட் வழிவகுக்கின்றாய். முரசின் வடிவமைப்பு மனதை ஈர்க்கக் கூடியதாக இருந்தாலும் பக்கம் பக்கம் கட்டுரைகள் வருவதால் அதன் வடிவமைப்பு அடிபட்டுப் போகின்றது. சிறிய துணுக்குகள் போடலாமே. இந்த வாசக நெஞ்சத்தின் விமர்சனத்தை முரசு ஏற்றுக்கொள்ளவேண்டும்.

எம்.தாமீரன், கிாலி.

### நல்வழிகாட்டி

முரசு தொடங்கிய நாள் தொடக்கம் உனது வாசகனாய் ஆகிவிட்டேன். எனது பிரதேசத்திற்கு முரசு ஆரம்பித்த நாள் தொடக்கம் இன்றுவரை வந்து கொண்டிருக்கின்றது. பல உண்மைகள், அறிவு சார்பானவை, சிந்தனைக்கு விருந்தாகுபவை, மனதை நெருடவைப்பவை, மகிழ்ச்சி என எல்லாவற்றையும் உள்ளடக்கி நீ உலகம் சுற்றுகின்றாய். அரசியல்ரீதியான கட்டுரைகள் மக்களை நல்வழி காட்டி, வழிப்படுத்தி வரு கின்றது. அதை நான் வரவேற்கின்றேன்.

எஸ்.சாய்சரண்,அக்கரைப்பற்று.

### தூற்றுவார் தூற்றட்டும்

முரசே! தூற்றுவார் தூற்றட்டும். போற்றுவார் போற்றட்டும். நாம் செல்லும் வழி நேர்வழியாகட்டும் என்று தினமுரசுக்குப் தமிழ்ப் பத்திரிகை உலகில் புதுவழி அமைத்த முரசின் ஸ்தாபக ஆசிரியர் 13ஆவது நினைவுநாளில் இம்மடலை வரைவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

முரசின் அற்புதன் காலத்தில் வீச்சிற்கும் தற்போதைய மலர்ச்சிக்கும் வித்தியாசங்கள் பல கண்டு வியாக்கியானங்கள் செய்வோர் நம்மத்தியில் இருக்கின்றனர். எனினும் முரசு தொடர்ந்தும் தமிழ் மக்களுக்குச் சுபீட்சமான எதிர்காலம் என்ற இலக்கு நோக்கி தன்னிலை மாறாது சூழலை உணர்ந்து சூட்சுமமாய் பயணிக்கிறது என்பது முரசோடு உறவாடும் வாசகர்களாகிய எமக்கு நன்றாகவே புரிகின்றது.

ம.பல்லவி, கொக்குவில்.

# ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை எவரும் மறுக்க முடியாது

## நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார்


**கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வித்துறையில் ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சி குறிப்பாக கடந்த நான்கு ஆண்டுகளுக்குமுன் இருந்த கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி நிலைமையினை இன்று ஒரு கணம் நினைத்துப் பார்த்தால் ஏற்பட்டுள்ள மாற்றத்தை மனச்சாட்சியுள்ள எவராலும் தவிர்க்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

கொரிய அரசின் உதவியுடன் கிளிநொச்சி தருமபுரம் மத்திய கல்லூரியில் 450 இலட்சம் ரூபா பெறுமதியான கட்டடத் தொகுதியை திறந்துவைத்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்குப் பின்னால் கடினமான உழைப்பு இருந்திருக்கின்றது என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளவேண்டும். இவை வெறுமனே இலவசமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் அல்ல. இதனை நாம் ஒவ்வொருவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.




கடந்த காலங்களில் அதிகாரத்தில் இருந்தவர்கள் இப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் அக்கறையின்றி இருந்துள்ளனர். அதன்விளைவாகவே இங்கு பெரும் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றது. நகரங்கள், கிராமங்கள் என்ற வேறுபாடுகளற்ற கல்விச் செயற்பாடுகள் முன்கொண்டு செல்லப்படவேண்டும் என்பதே தற்போதைய வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியமானது. குறிப்பாக ஒவ்வொரு பெற்றோரினதும் தங்களின் பிள்ளைகளுக்கு பாரபட்சமற்ற தரமான கல்வி கிடைக்கின்றதா என்பதனைத் தட்டிக்கேட்க வேண்டும் என்பதில் விழிப்பாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.



மட்டக்களப்பு -ஏறாவூர் தௌஹீத் ஜமாஅத்தினர் ஏற்பாடு செய்த புனித நோன்புப் பெருநாள் தொழுகையில் பெருந்திரளானோர் கூடி தொழுகையை நிறைவேற்றினர். ஏறாவூர் அலிகார் தேசியக் கல்லூரியின் திடலில் இந்த தொழுகை நிறைவேற்றப்பட்டது. ஆண்களும் பெண்களுமாக பெருந்திரளான தௌஹீத் ஜமாஅத்தினர் இந்த தொழுகையிலும் அதன்பின்னர் இடம்பெற்ற சன்மார்க்கப் பிரசங்கத்திலும் கலந்துகொண்டனர்.

---


# கறுப்பு ஜூலை

## நெஞ்சம் மறப்பதில்லை

ப.ராஜு

இலங்கை வரலாற்றில் தமிழ் மக்களுக்கு எதிராக பல கலவரங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. அவற்றில் 58ஆம் ஆண்டுக் கலவரமும், 77ஆம் ஆண்டுக் கலவரமும், 83ஆம் ஆண்டு இறுதியாக நடைபெற்ற கலவரமும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மோசமான பதிவுகளாகும்.

இவற்றில் 83ஆம் ஆண்டு, ஜூலை 23 ஆம திகதி ஆரம்பிக்கப்பட்ட கலவரமானது இலங்கை என்ற நாடு இருக்கும்வரையில் மறக்கமுடியாத அருவருப்பான நிகழ்வாக சர்வதேச அரங்கில் பதிந்துவைக்கப்பட்டு உள்ளது.



31 ஆண்டுகள் கடந்துவிட்டபோதிலும் அந்தக் கலவரம் பெற்றுக்கொடுத்த அவலங்களை ஜீரணிக்க முடியாதவர்களாகவும் அழிவுகளில் இருந்து இன்னும் மீள முடியாதவர்களாகவும் தமிழ் மக்கள் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இலங்கைக்கு சர்வதேச அரங்கில் அவப்பெயரை ஏற்படுத்திக்கொடுத்த கறுப்பு நாட்களாக ஜூலை 23 தொடக்கம் ஜூலை 28 வரை நாட்டில் நடந்த சம்பவங்கள் அமைந்திருந்தன.

இச்சம்பவங்களே தமிழர்களின் போராட்ட சிந்தனைக்கு கூடுதல் உரமேற்றியிருந்தன என்றால் அது மிகையாகாது.

குறித்த கலவரங்கள் நடப்பதற்குக் காரணமாக அமைந்த சம்பவமானது 13 இராணுவத்தினர் புலிகளால் கொல்லப்பட்டமையே என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் அந்தச் சம்பவத்தை தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடுவதற்கான ஒரு சந்தர்ப்பமாக அப்போதைய அரச தலைமை பயன்படுத்தியது என்ற குற்றச்சாட்டு அப்போதைய பல தரப்பினாலும் முன்வைக்கப்பட்டிருந்தது.

83ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி திருநெல்வேலி தபால்பெட்டி சந்தியில் இரவு 11.30 மணியளவில் இராணுவத்தினரின் வாகனம்மீது புலிகள் கண்ணிவெடித் தாக்குதலை நடத்தினர். அதனைத் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டனர். இதில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலானது புலிகளின் மூத்த உறுப்பினர் என்று சொல்லப்பட்ட சாள்ஸ் அன்ரனி என்பவரை இராணுவம் சுட்டுக்கொன்றதற்கு பழிதீர்க்கும்முகமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் எனப் புலிகள் கூறினர்.

அது ஒருமுறமிருக்க, இத்தாக்குதலில் பலியான இராணுவ வீரர்களின் உடல்களை அமைதியான இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யாமல் சிங்கள மக்களே கொதிப்படையச் செய்யும்வகையில் இறுதி நிகழ்வு திட்டமிடப்பட்டது என்ற குற்றச்சாட்டு பின்னர் எதிர்க் கட்சிகளினால் முன்வைக்கப்பட்டன.

அதாவது இராணுவ வீரர்களின் உடல்கள் பொலித்தீன் பைகளில் கட்டப்பட்டு இரத்மலானை விமான நிலையம்மூலம் அவை கொண்டுவரப்பட்டது. அப்போதைய இராணுவத் தலைமைப்பீடம் நினைத்திருந்தால் அவர்களது உடல்களை பெட்டிகளில் வைத்து கௌரவமான முறையில் நடத்தியிருக்க முடியும்.

பொலித்தீன் பைகளில் இராணுவ வீரர்களின் உடல்கள் வருகின்றன என்ற செய்தி இலங்கையின் வரலாற்றில் முதல் சம்பவமாக அமைந்தது. ஒரே தடவையில் அதிகமான இராணுவ வீரர்கள் பலியாகிய சம்பவம் அதுவாகவே இருந்தது.

இந்தச் செய்தியினால் நாடு எதிர்கொள்ளப் போகும் பாதிப்புக்கள் தொடர்பில் எவ்வித அக்கறையும் இல்லாமல் பெரும்பாலான ஊடகங்கள் வெளியிட்டிருந்தன. நாடுபூராகவும் நாள்முழுவதும் பரவிய இச்செய்தியினால் சிறுபான்மை மக்கள் மத்தியில் பதற்றமும் பெரும்பான்மை மக்கள் மத்தியில் கோபஆவேசமும் உண்டானது.

ஜூலை 24 ஆம் திகதி 9.30 மணிக்கு உடல்கள் கொண்டுவரப்பட்டன. மாலை நான்கு மணிக்கு வருமெனச் சொல்லப்பட்ட உடல்கள் 9.30 வரை தாமதமாகியதால் சிங்கள மக்களின் மத்தியில் உணர்வலைகளைத் தூண்டிவிடக் காரணமாக இருந்தது. பொரளை கனத்த மைதானத்தில் உடல்கள் வந்து இறுதிக் கிரியைகள் நடைபெற்று முடிந்ததும் பொரளைச் சந்தியில் இருந்த தமிழர் ஒருவருக்குச் சொந்தமான உணவு விடுதி தாக்கி நொறுக்கப்பட்டது.

அந்தச் செய்தி தீபோல் பரவியது. அடுத்தடுத்த விநாடிகளிலேயே திம்பிரிக்கசாய, நாரஹேன்பிட்டிய, கிருலப்பனை ஆகிய இடங்களில் பரவ ஆரம்பித்த கலவரம் நாடுபூராகவும் வியாபித்தது.

ஜூலை 25ஆம் திகதி அதிகாலை கிருலப்பனைச் சந்தியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த தமிழர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இதுவே குறித்த கலவரத்தின் முதற் கொலைச் சம்பவமாகும்.

(21ஆம் பக்கம் பார்க்க...)





வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## கோமாவில் ஐ.நா. மனித உரிமைப் பேரவை!!

பலஸ்தீனத்தில் இஸ்ரேல் நடத்தும் மனிதாபிமானமற்ற தாக்குதல்கள் கடுமையான கண்டனத்துக்குரியதாகும். ஒரு இஸ்ரேலியரை ஹமாஸ் இயக்கம் கடத்திக் கொலை செய்தது என்பதற்காக பலஸ்தீன் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தி ஆயிரம் பலஸ்தீனியர்களை படுகொலை செய்வது கண்டனத்துக்கு உரியதாகும்.

ஹமாஸ் இயக்கத்தினர் ஒரு ஏவுகணையை இஸ்ரேல் மீது ஏவியதற்காக பலஸ்தீனத்தின்மீது ஒரு வாரத்துக்கு ஏவுகணைத் தாக்குதல்களை இஸ்ரேல் நடத்துவது கண்டனத்துக்குரியதாகும்.

இஸ்ரேலின் இவ்வாறான தாக்குதல்களில் ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் பலியாகியுள்ளார்கள். போர்க்குற்றம், மனித உரிமைகள் மீறல்கள் பற்றிப் பேசும் அமெரிக்காவும், பிரிட்டனும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் பலஸ்தீனத்தில் நடப்பவை பற்றி வாய் திறக்காமல் மௌனமாகவே இருக்கின்றன.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் கடந்தவாரம் இஸ்ரேலைக் கண்டித்து உறுப்பு நாடுகள் பிரேரணை கொண்டுவந்தபோது ஐரோப்பிய ஒன்றியம் உட்பட்ட பதினேழு நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. அமெரிக்கா அந்தப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தது.

இதுதான் அமெரிக்காவினதும், உலக நாடுகளினதும் மனிதாபிமானம் தொடர்பான யோக்கியதையாக உள்ளது.

ஐ.நாவின் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இஸ்ரேலில் நடப்பதை கண்டுகொள்ளாமல் கோமாவில் இருக்கின்றார். இப்படியானவர் இலங்கை விடயத்தில் மட்டும் அக்கறை காட்டுவதை இலங்கை அரசு பழிவாங்கும் முயற்சி என்றுகூறி நிராகரிப்பதை நவிப்பிள்ளையின் தற்போதைய கோமா நாடகம் நிதர்சனமாக்குகின்றது.


இஸ்ரேல்மீது குற்றஞ்சுமத்தும் இதே வேளை ஹமாஸ் இயக்கத்தினரை விடுதலைப் போராளிகளாகவும் பாராட்ட முடியாது. விடுதலையின் பெயரால் இலங்கையில் தமிழ் மக்கள் பாரிய இழப்புக்களையும், அழிவுகளையும் சந்தித்துள்ளார்கள். மக்களை பாதுகாக்கத்தவறிய போராட்டங்கள் விடுதலை போராட்ட அடையாளங்களை தொலைத்து பயங்கரவாத அடையாளங்களையே பெற்றுள்ளது.

ஹமாஸின் போராட்டமும் அப்பாவி மக்களை பலிகொடுப்பதாகவே உள்ளது. எமது அனுபவத்தில் இருந்து பார்க்கும்போது மக்களை பலியிட்டு சர்வதேசக் கவனத்தை ஈர்ப்பது அழிவுகளைக் கொடுக்கும் முட்டாள் தனமேயன்றி, போராட்ட தந்திரோபாயமல்லை. தந்திரோபாயமற்ற ஹமாஸின் தாக்குதல்களும் கண்டனத்துக்குரியவை ஆகும்.

எனவே பாலஸ்தீன மண்ணில் ஓடுகின்ற இரத்த ஆறு தடுத்துநிறுத்தப்பட வேண்டும். உலகெங்குமுள்ள மனித உரிமைப் போராளிகள் தமது குரலை ஓங்கி ஒலிக்கவேண்டும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

## தவறாக மொழிபெயர்க்கப்பட்டது
# இந்தியாவின் மௌனம்



**தமிழ் மக்களின் அழிவுகளை தொடரச் செய்து அதில் அரசியல் இலாபம் காணுகின்ற தமிழ் அரசியல் தலைமைகளோ காங்கிரஸ் ஆட்சியாளர்கள் மீதும், அதை தலையேற்று நடத்திய மன்மோகன் சிங் மற்றும் சோனியா காந்தி மீது பழி சுமத்தினார்கள். அவர்களை தமிழ் மக்களின் எதிரிகளாக சித்தரித்தார்கள். ராஜிவ் காந்தியை புலிகள் படுகொலை செய்ததற்காக யுத்தத்தில் இலங்கைப் படைகளுக்கு உதவி, புலிகளையும் அழித்து, தமிழ் மக்களையும் அழிப்பதற்கு துணைபோய் இருக்கிறார்கள் என்று கூறினார்கள்.**

இலங்கையின் தமிழர் இனப்பிரச்சினை தொடர்பில் இந்திய அரசு மிகுந்த நிதானத்தோடும், பிராந்திய அரசியல் முக்கியத்துவத்தோடும் தனது முடிவுகளை எடுத்து வந்துள்ளது.

ஆனால், தமிழ் மக்களின் பிரச்சினையை தமது கைகளில் எடுத்துக்கொண்டு அதற்கு இந்தியாவின் நிலைப்பாடுகளை ஒப்பிட்டுப்பார்ப்பவர்கள் அவர்களுக்கு ஏற்றவகையில் பொருளுறைகளை கொடுத்து வந்துள்ளனர்.

முன்னாள் இந்திய பிரதமர்களான இந்திரா காந்தி, ராஜிவ் காந்தி ஆகியோர் தமது பதவிக்காலத்தில் இலங்கை தொடர்பான முடிவுகளை வெளிப்படையாகவும், துணிச்சலோடும் எடுத்துள்ளார்கள்.

ராஜிவ் காந்தியை புலிகள் படுகொலை செய்ததன் பின்னர் அதிகாரத்துக்கு வந்த இந்திய பிரதமர்களும், அதிகார மையங்களும் இலங்கை தொடர்பாகவும் இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் தொடர்பாகவும் அவ்வளவுக்கு துணிச்சலான முடிவுகளை எடுக்கவில்லை என்பதை புரிந்துகொள்ள முடியும்.

அதன்பின்னரான இந்திய அரசுகளின் இலங்கை தொடர்பான அணுகுமுறைகளும், தமிழ் மக்கள் தொடர்பான முடிவுகளும் இந்தியாவின் பிராந்திய நலன் மற்றும் இராஜிய உறவுகள் என்பவற்றை முக்கியத்துவப் படுத்தியதாகவே பெரும்பாலும் அமைந்துள்ளன.

இதற்குக் காரணம், இலங்கைமீது செல்வாக்குச் செலுத்துவதில் இருந்துவந்த நெருக்கத்தை இலங்கை அரசுகள் தந்திரமாக வலுவிழக்கச் செய்துவிட்டதாகும். இலங்கை, இந்தியாவின் விருப்பு, வெறுப்புக்களுக்கு தனது பிராந்திய பாதுகாப்பை நம்பியிராமல் இந்தியாவின் கவனத்தை திசை திருப்புவதில் வெற்றியும் கண்டுள்ளது.

முக்கியமாக பாகிஸ்தான், சீனாவுடன் நெருக்கத்தை அதிகரித்துக் கொண்டு இந்தியாவின் பிராந்திய கவலைகளை அதிகரிக்கச் செய்தது. இதனால் தற்போது இலங்கை தொடர்பாக இந்திய முடிவுகளை எடுக்கும்போது முன்னரைப்போல் எடுத்தோம், கவுத்தோம் என்று முடிவுகளை எடுக்கமுடியாது. பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளுடன் இலங்கை கொண்டிருக்கும் உறவுகள், ஒப்பந்தங்கள் என்பவற்றை கவனத்தில் கொண்டே முடிவுகளை எடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள இச்சூழலில் இந்திய அரசு தமிழ் மக்கள் தொடர்பாக அக்கறை காட்டுவதை விடவும் இந்திய தேசத்தின் பாதுகாப்பு, பிராந்தியத்தில் இந்தியாவின் வல்லமை என்பவற்றை கவனத்தில் எடுத்துக்கொள்வதிலேயே அக்கறை காட்டும்.

முன்னர் காங்கிரஸ் கட்சி மத்திய ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது இலங்கையில் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் பங்களிப்புச் செய்ததும், தமிழ் மக்கள் தொடர்பாக எடுத்துக்கொண்ட நிலைப்பாடும் காங்கிரஸ் கட்சியின் முடிவுகள் அல்ல. அது இந்திய மத்திய அரசொன்றின் முடிவாகவே பார்க்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் தமிழ் மக்களின் அழிவுகளை தொடரச் செய்து அதில் அரசியல் இலாபம் காணுகின்ற தமிழ் அரசியல் தலைமைகளோ காங்கிரஸ் ஆட்சியாளர்கள் மீதும், அதை தலையேற்று நடத்திய மன்மோகன் சிங் மற்றும் சோனியா காந்தி மீது பழி சுமத்தினார்கள். அவர்களை தமிழ் மக்களின் எதிரிகளாக சித்தரித்தார்கள்.

ராஜிவ் காந்தியை புலிகள் படுகொலை செய்ததற்காக யுத்தத்தில் இலங்கைப் படைகளுக்கு உதவி, புலிகளையும் அழித்து, தமிழ் மக்களையும் அழிப்பதற்கு துணை போயிருக்கிறார்கள் என்று கூறினார்கள்.

அவர்கள் தேர்தலில் தோற்கடிக்கப்பட வேண்டும் என்று விரும்பினார்கள். காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்து பா.ஜ.க வினர் ஆட்சி பீடம் ஏறினால், மோடி பதிய பிரதமர் ஆனால் இலங்கையில் தமிழ் மக்களுக்கு தனிநாட்டைப் பெற்றுக் கொடுப்பார்கள் என்றும் கூறினார்கள்.

ஆனால் இப்போது பா.ஜ.க வினர் ஆட்சிக்கு வந்துள்ளனர். மோடி பிரதமராகி அறுபது நாட்களும் கடந்துவிட்டது. இப்போது மோடியையும் இலங்கை தமிழ் மக்களின் துரோகியாக காட்டுவதற்கு முற்படுகின்றார்கள்.

அப்போது மன்மோகன் சிங் துரோகி, இப்போது மோடி துரோகி. நாளை இன்னொருவர் பிரதமரானாலும் அவரும் துரோகியாகவே ஆகிவிடுவார் என்றால் பிரச்சினை யார்? பக்கம் உள்ளது என்பதை மக்கள் சிந்திக்கவேண்டும். இலங்கை தமிழர்களின் அரசியல் உரிமைப் பிரச்சினையை உலகப் போக்கோடும், யதார்த்தத்தோடும் சாத்தியப்பாடுகளோடும் முன்னெடுத்துச் செல்லத் தெரியாதவர்கள் மறுபக்கத்தில் எல்லோரையும் துரோகியாக்கிக் கொண்டு இருக்கின்றார்கள்.

முன்னர் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணை முன்மொழிந்தபோது, மன்மோகன் சிங் தலைமையிலான இந்திய மத்திய அரசு மௌனமாகவே இருந்தது. அப்போது இந்தியாவின் மௌனத்தையிட்டு விளக்கமளித்த தமிழ்க் கூட்டமைப்பினர் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையில் இலங்கைக்கு எதிராகவே வாக்களிக்கும் என்றார்கள். ஆனால் இந்தியா சில திருத்தங்களுடன் முன்னர் ஆதரவாகவும், எதிராகவும் வாக்களித்து இந்தியா தொடர்பில் கூறப்பட்ட எதிர்வுகூறல்களை பொய்யாக்கினார்கள்.

தற்போது மோடி தலைமையிலான இந்திய அரசு இலங்கை தொடர்பாக எவ்விதமான வெளிப்பாட்டைக் கொண்டிருக்கின்றது என்பது தொடர்பில் தமிழ்க் கூட்டமைப்பினர் தமிழ் மக்களிடம் கருத்துக் கூறுகையில், இந்தியா மௌனமாக இருக்கின்றது. அந்த மௌனம் தமிழ் மக்களுக்கு சாதகமான வெளிப்பாட்டின் உட்கருத்தையே உணர்த்துகின்றது என்றும் பிரதமர் மோடியை சந்திக்க நாம் கோரிக்கை விடுத்திருக்கின்றோம். அவரைச் சந்திக்கும்போது இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தெளிவுபடுத்துவோம் என்றும் கூறினார்கள்.

ஆனால் நீண்ட மௌனத்தின் பின்னர் மோடி அரசின் கொள்கை வகுப்பாளர்கள் இலங்கைக்கு வருகைதந்து இலங்கை தொடர்பில் தற்போதைய இந்தியாவின் முடிவுகளை அறிவித்தபோது அதே விளக்கக் கூட்டத்தில் அமர்ந்திருந்த கூட்டமைப்பின் தலைவர்களான சம்மந்தன், சுமந்திரன் ஆகியோர் தொண்டை அடைக்க உறைந்து போனார்கள்.

அந்த கொள்கை விளக்கம் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு இந்திய தேசத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கே முன்னுரிமை கொடுத்து செயலாற்றுகின்றது. அதேவேளை பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் இந்தியா முழுமையான பங்களிப்பைச் செய்யும்.

வெளிப்படையாக இலங்கை மீது எந்த நடவடிக்கைகளையும் இந்தியா எடுக்கப்போவதில்லை. இராஜதந்திர ரீதியில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்

குறிப்பாக ஜெனிவா பிரேரணைகள் என்பதில், இலங்கைக்கு தண்டனை கொடுக்கும் செயற்பாடுகளுக்கோ, இலங்கையின் உள்ளக விடயங்களில் அநாவசியத் தலையீடுகள் செய்வதற்கோ இந்தியா ஒரு போதும் ஆதரவாக இருக்காது.

இலங்கையில் இன அழிப்பு என்று ஒன்று நடக்கவில்லை. அதற்கு உதாரணமாக ஐக்கிய நாடுகள் பிரேரணையிலேயே இலங்கையில் இன அழிப்பு ஒன்று இடம்பெற்றதாக எங்கும் குறிப்பிடப்படவில்லை. அவ்வாறு இருக்கையில் எவ்வாறு இலங்கைக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

இவ்வாறு இந்தியத் தரப்பால் கூறப்பட்டதை ஆராயும்போது வாய்ப்புக்களை தொடர்ந்தும் தவறவிடுகின்ற கூட்டமைப்பின் செயற்பாடுகள்மீது அவநம்பிக்கையுடனேயே இந்திய மத்திய அ[illegible] இருப்பதையும் புரிந்து கொள்ளக் கூடியாதாக உள்ளது. ஆகவே இந்தியாவின் மௌனமானது சம்மந்தரோ, கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களோ அர்த்தப்படுத்துவதுபோல் இல்லை.

இந்திய பிரதமர் மோடியை சந்திக்க கிடைத்த அரிய வாய்ப்பை கூட்டமைப்பு புத்தி சாதுரியம் எனக்கருதி உதாசீனம் செய்தது. மோடியின் பதவியேற்பு வைபவத்துக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் குழுவுடன் வருகை தருமாறு வடக்கின் முதலமைச்சருக்கு ஜனாதிபதி செயலகம் அழைப்புவிடுத்தது. அந்த வாய்ப்பை பயன்படுத்தி மோடி அவர்களை நேரடியாக சந்தித்து தமிழர் பிரச்சினையை எடுத்துக்கூறியிருக்கலாம். அதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் தடுத்திருக்கப் போவதில்லை. வரலாற்றில் பல நல்ல வாய்ப்புக்களை தவறவிட்டதைப் போலவே இதுவும் தவறவிடப்பட்டது.



# முதலாவது பிரமாண்ட ரயில் கொள்ளை



இவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, எல்லாம் திருப்திகரமாக இருக்கின்றதா என்று சரிபார்க்கப்பட்ட பின்னரே, ட்ரெயின் கிளம்பும்.

தங்கம் இருக்கும் இரும்புப்பெட்டி பயணிக்கும ட்ரெயினின் கடைசிக் கம்பார்ட்மென்ட்டில் கார்டு ஒருவர் எப்போதும் கடமையில் இருப்பார். (கடந்த அத்தியாயத்தில் இளைஞன் சண்டையிட்டது இந்த கார்டுவுடன்தான்)

இப்படி பக்காவாக பாதுகாக்கப்பட்டு அனுப்பும் தங்கத்தை கொள்ளை அடிப்பதுதான் எட்வேர்ட் பியார்சின் திட்டம்!

எட்வேர்ட். கிரின்சூட் வீதியில் இறங்கி நடந்தார். நடைபாதையில் அந்தப் பகல்வேளையிலும் பளபளப்பான ஆடைகள் அணிந்து, வீதியில் போகும் கனவான்களைக் கவர முயலும் பெண்களை கவனிக்காமல் நடந்தார்.

கிரின்சூட் வீதி, குற்றவாளிகள், விபச்சாரிகள் ஆகியோரின் நடமாட்டம் அதிகமுடைய பகுதி. இதனால் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் சாதாரண ஆடைகளில் வீதியில் எங்காவது உலாவியபடி நோட்டம் விட்டு கொண்டு இருப்பார்கள். அவர்களது கண்களில்தான் ரோபேர்ட்டுடன் பேசுவதை எட்வேர்ட் விரும்பவில்லை.

Train-20140609-2 ரோபேர்ட், "நீங்கள் என்னைத் தேடிவந்திருக்கிறீர்கள் என்றால் உங்களுக்கு ஏதோ வேலை ஆகவேண்டும். அந்தவேலை, சாவி பற்றியது... இல்லையா"

"ஆம். சாவிகள்தான்"

"ஓடஓட தயாரிக்கவேண்டுமா அல்லது கைவசம் போதுமான அளவு நேரம் இருக்குமா"

"எதற்கு?"

"சாவி த்யாரிக்க"

"முட்டாள். ஓடஓட தயாரிக்க வேண்டும். ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு விநாடியும் எண்ணப்பட வேண்டும்"

இந்த கடைசி வார்த்தைகள் சும்மா சொல்லப்படவில்லை. நிஜமான திட்டமே அதுதான்! ஓட ஓட சாவி தயாரிக்கவேண்டும்!!

எட்வேர்ட் பியார்ஸின் மாளிகையில் நடந்த விருந்தில் கனவான்கள் பேசிக்கொண்டது:

"சமீபத்தில் ட்ரெயினில் வைத்து ஏதோ தங்கப்பாளங்களை யாரோ கொள்ளையடிக்க முயன்றதாக ஒரு பேச்சு வெளியே பேசப்படுகிறதே" என்று ஆரம்பித்தார் எட்வேர்ட். இந்தப் பேச்சைத் தொடங்கும்போது ஹென்ட்ரியை கடைக்கண்ணால் பார்த்தபடி தொடங்கினார்.

விஷயம் தங்கப்பாளங்களின் கொள்ளை முயற்சி என்றவுடன் ஹென்ரியின் முகத்தில் அலாதியான புன்னகை ஒன்று தோன்றியது. "அறைக்குள் இருக்கும் மற்றையவர்களைவிட எனக்கு அதிக விஷயம் தெரியும்" என்று சொல்லாமல் சொல்லும் புன்னகை அது.

ஹென்ரி வாயைத் திறந்தார்.

"இந்த விஷயம் வெளியே விடப்படவில்லை. ஆனால், இங்கே கூடியிருப்பவர்கள் எல்லோருமே சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள். பிரபுக்கள். அதனால் உங்களிடம் சொல்லுவது தவறில்லை என்று நான் நினைக்கின்றேன்"

"சொல்லுங்கள். உங்களைப்போல உள்விவகாரம் தெரிந்தவர்களுக்கு நண்பர்களாக இருப்பதாலே நிறையவே புது விஷயங்களைத் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது" என்று எண்ணை ஊற்றிவிட்டார் எட்வேர்ட்.

"தங்கத்தை கொள்ளையடிக்க ஒரு முயற்சி நடைபெற்றது உண்மைதான். ஆனால் முயற்சி வெற்றியடையவில்லை. முயற்சி வெற்றியடைவதற்கு மிகச் சிறிய சந்தர்ப்பம்கூட இல்லை. கதை வெளியே தெரியவந்தால் வங்கியின் பெயர் பத்திரிகைகளில் அடிபடும் என்பதால் நாங்கள்தான் இது வெளியே தெரிய வராதபடி செய்துவிட்டோம்"

"அப்படியானால், கொள்ளையடிக்க முயன்ற ஆளைக் கைது செய்து விட்டீர்களா?"

"இல்லை. ஓடும் ட்ரெயினில் இருந்தே அந்த ஆளை ரெயில்வே கார்டு தூக்கி வெளியே வீசியெறிந்துவிட்டார். ஆள் இறந்துவிட்டார்"

"கனவில்கூட கொள்ளையடிக்க முடியாது. முன்னேற்பாடுகள் அப்படி இருக்கின்றன. தங்கம் வைக்கப்பட்டிருக்கும் இரும்புப் பெட்டியைத் திறப்பதற்கு நான்கு சாவிகள் தேவை. அவை எல்லாமே ஒரு ஆளின் கைகளில் கிடைப்பது கனவில்கூட நடக்கமுடியாது."

"அதை எப்படி அடித்துக் கூறுகிறீர்கள்"

"ஒருவேளை ஒவ்வொன்றாக எடுத்து மூன்று சாவிகளை கைப்பற்றினாலும், நான்காவது சாவி திருடர்களின் கைகளில் கிடைக்கவே கிடைக்காது" "நான்காவது சாவி! அது எங்கே இருக்கிறது."

(தொடரும்...)



# புலிகளின் வதை முகாமில்

## வதை 124

## மணியம்

அத்துடன் புதிய ஜனநாயகக் கட்சியினர் மார்க்சிச - லெனினிசக் கொள்கைகளுக்குப் பதிலாகத் தமிழ் தேசியவாதக் கொள்கைகளை நாடத் தொடங்கினர். அதுவரை காலமும் இலங்கையின் பிரதான முரண்பாடுகளைப் பற்றி சகல கம்யூனிஸ்ட் கட்சிப் பிரிவுகளும் கொண்டிருந்த சர்வதேசரீதியாக இலங்கைக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் உள்ள முரண்பாடு பிரதானமெனவும். உள்நாட்டு ரீதியாக ஒரு பக்கத்தில் சகலவிதமான உழைக்கும் மக்களுக்கும் மறுபக்கத்தில் ஏகாதிபத்தியத்துக்குச் சார்பான உள்நாட்டுத் தரகு முதலாளித்துவ மற்றும் நிலப்பிரபுத்துவ சக்திகளுக்கும் (ஐ.தே.கவினாலும் தமிழ் தலைமையாலும் பிரதிநிதித்துவம் செய்யப்படுபவை) இடையிலான முரண்பாடே பிரதான முரண்பாடு என்னும் நிலைப்பாட்டை புதிய ஜனநாயகக் கட்சியினர் கைகழுவி விட்டார்கள்.

அதற்குப் பதிலாக, இலங்கையில் இனங்களுக்கிடையில் நிலவும் சிநேக முரண்பாடே பிரதான முரண்பாடு என்ற, மிகவும் தவறான மார்க்சிச விரோத நிலையை எடுத்ததுடன். அதன் அடிப்படையில் 'தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் பிரதான சக்தியான புலிகளை' நேசசக்தியாகவும் ஆக்கிக் கொண்டார்கள்.

இடதுபக்கத்தில் இருந்துகொண்டு, புலிப் பாசிசவாதிகளுக்கு சி.கா.செந்திவேல் குழுவினர் செய்த சேவகத்துக்காக. வட பகுதியில் செயற்பட்ட அனைத்து மாற்று இயக்கங்களை மட்டுமின்றி. அரசியல் கட்சிகளையும் தடைசெய்து. அவற்றின் பல உறுப்பினர்களைக் கொலை செய்த புலிகள். சி.கா.செந்திவேல் குழுவினரை மட்டும் புலிகள் தடைசெய்யாததுடன். அவர்கள் யாழ்ப்பாணத்தில் கட்சிக் காரியாலயம். புத்தகக் கடை நடாத்தவும் அனுமதித்து. கொழும்புக்கு கூட்டங்களுக்குச் சென்றுவர அனுமதியும் (பாஸ்) வழங்கிவந்தனர்.

இந்தக் குழுவினர் எம்மைத் தமது பரமவிரோதிகளாகக் கருதி வந்ததினால் (தோழர் மு.கார்த்திகேசன் உட்படப் பலர்மீது தாக்குதலுக்கும் முயன்றதுடன். வேறு சிலர்மீது தாக்குதலும் நடாத்தினர்) என்னைப் புலிகள் கடத்தியதின் பின்னணியில் இந்தக் குழுவினர்களும் ஒரு காரணியாக இருந்திருக்கலாம் என்ற சந்தேகமும் எனக்கு ஏற்பட்டிருந்தது.

இதோ இப்பொழுது அவர்களில் அடுத்ததாக தோழர் கதிர்காமநாதன் இழுத்து வரப்பட்டிருக்கிறார்.

**எழுத்தில் வடிக்க முடியாத வதை முகாம் வாழ்வு ஏற்படுத்தும் அகப்புறத் தாக்கங்கள்!**

என்மீதான விசாரணைகள் முற்றுப்பெறுவதற்கான அறிகுறிகள் எதனையும் காணவில்லை. சிலவேளைகளில் முடிவுக்கு வருவது போலத் தோன்றும். ஆனால் திரும்பவும் புதிதாக ஏதாவது விடயங்கள் குறித்து விசாரணைகள் தொடங்கும். அல்லது விசாரித்து முடித்த விடயங்கள் மீண்டும் கிளறப்படும். எம்முடன் தொடர்புள்ள சிலர் புதிதாகக் கடத்தப்பட்டு எமது வதை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதால். ஏதோ ஒரு திட்டத்தின் அடிப்படையில் கைது நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என்பது புரிந்தது. எனவே இவர்களும் தொடர்ந்து கைது செய்யப்படுபவர்களும் விசாரித்து முடிக்கப்படும் வரை எனது விசாரணையும் முடிவுக்கு வரப்போவதில்லை.

நான் கடத்தப்பட்டு பல வாரங்கள் கடந்துவிட்டபடியால் எனது மனதிலும் உடலிலும் சோர்வு தொற்றிக்கொண்டது. எனது மனைவி பிள்ளையையும், வெளி உலகத் தொடர்பையும் பிரிந்தது மனதில் பெரும் சோகத்தையும் தளர்ச்சியையும் உண்டாக்கியது. கடத்தப்படும் ஒருவரை அடித்துத் துன்புறுத்தத் தேவையில்லை. அவரை வெளித்தொடர்புகள் ஏதுமின்றி அடைத்து வைத்தாலே அவர் துவண்டு சுருண்டுவிடுவார். எமது நிலை இவ்வாறென்றால் தனிச் சிறைகளில் அடைக்கப்படுபவர்களின் நிலையை நினைத்துப் பார்க்கவே முடியாது.

தனிமை என்பது மிகவும் கொடுமையானது. அதை வார்த்தைகளில் வர்ணிப்பதென்பது. மிகத் திறமை வாய்ந்த எழுத்தாளனால் கூட முடியாது. செக்கொஸ்சிலோவாக்கிய கம்யூனிஸ்ட் தலைவர் யூலியஸ் பூசிக்கும் அவரது மனைவியும் ஹிட்லரின் கெஸ்டாபோ உளவுப் படையால் கைதுசெய்யப்பட்டு. நாஜி சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்படுவதற்குமுன், அவர் சில சிறைக் காவலர்களின் உதவியுடன் எழுதும் தாளும் பேனாவும் பெற்று எழுதிய குறிப்புகள், தூக்குமேடைக் குறிப்புகள் என்றபெயரில் பின்னர் நூலாக வெளிவந்து உலகம் முழுவதும் பெரும் தாக்கத்தை உருவாக்கியது. என்னைப் பொறுத்தவரையில் அவர் மட்டுமே ஹிட்லரின் சிறையில் தனக்கு நேர்ந்த அவலங்களையும், அதனால் தனக்கு ஏற்பட்ட உணர்வுகளையும் வாசிப்பவரின் இதயத்தைத் தொடும் வகையில் எழுதியுள்ளார்.

அவரது அந்த அமரகாவியம் தமிழ் உட்பட உலகிலுள்ள பெரும்பாலான மொழிகளில் வெளிவந்து பல கோடி பிரதிகள் விற்பனையானது. இந்தியாவில் அதைத் தமிழில் வெளியிட்ட கண.முத்தையா அவர்களின் தமிழ் புத்தகாலயம் இன்றும் அதன் புதிய பதிப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றது. அவரது சிறைக் குறிப்புகள் திரைப்படமாகவும் வெளியிடப்பட்டது. அந்தத் திரைப்படத்தை 1970களில் நண்பர்கள் ஏ.ஜே.கனகரத்தினா, சசி.கிருஸ்ணமூர்த்தி (புலிகள் சுட்டு வீழ்த்திய லயன் எயார் விமானத்தில் பயணிக்கையில் மரணத்தைத் தழுவியவர்). அ.யேசுராசா. எம்.ஏ.நு:.மான். சி.மௌனகுரு உட்பட நாம் யாழ்ப்பாணத்தில் சில காலம் செயற்படுத்திய யாழ்.திரைப்பட வட்டத்தின் மூலம் யாழ்.றிம்மர் மண்டபத்தில் திரையிட்ட ஞாபகம் எனக்கு இன்னமும் பசுமையாக இருக்கின்றது.

1950கள். 60களில் கம்யூனிஸ்ட் கட்சியில் சேரும் ஒருவருக்கு வாசிக்க கொடுக்கப்படும் நூல்களில் ஒன்றாக தோழர் யூலியஸ் பூசிக் எழுதிய தூக்குமேடைக் குறிப்புகளும் இருந்தது. மற்றைய நூல்கள் தோழர் ஸ்டாலின் காலத்தில் தொகுக்கப்பட்ட சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு. மாபெரும் ருஸ்ய எழுத்தாளர் மார்க்சிம் கார்க்கி எழுதிய பிரசித்தி பெற்ற தாய் நாவல். இன்னொரு புகழ் பெற்ற சோவியத் எழுத்தாளர் ஒஸ்ரோவோஸ்க்கி எழுதிய வீரம் விளைந்தது (இரண்டு பாகங்கள்) என்பவையாகும். என்போன்றவர்களும் இந்த நூல்களையும், இன்னும் எண்ணற்ற மார்க்சிய தத்துவ நூல்களையும், முற்போக்கு இலக்கியங்களையும் ஆரம்ப காலங்களில் கற்றே எமது பாட்டாளி வர்க்க உலகக் கண்ணோட்டத்தை வளர்த்துக் கொண்டோம்.

யூலியஸ் பூசிக் போன்றே இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கேரளாவைச் சேர்ந்த சி.ஏ.பாலன் என்ற மலையாளத் தோழருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அவரை விடுதலை செய்யக்கோரி இந்தியா முழுவதும் மாபெரும் இயக்கங்கள் நடாத்தப்பட்டன. தமிழகம் கட்சி வேறுபாடின்றி முன்னணியில் நின்று போராடியது.

கம்யூனிஸ்ட்டுகளுடன் ஈ.வே.ரா. பெரியாரின் திராவிடர் கழகமும் களத்தில் குதித்துப் போராடியது. நடிகர் எம்.ஆர்.ராதா தலைமையில் திராவிட இயக்க ஊர்வலங்கள் நடந்தன. மக்கள் போராட்டத்துக்கு அடிபணிந்த பிரிட்டிஷ் இந்திய அரசு இறுதியில் அவரை விடுதலை செய்தது.

(தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம்

113

பா.ராகவன்

உலகமே திரண்டு இஸ்ரேலை எதிர்க்கலாம். மீண்டும் அவர்கள் ஊர் ஊராக ஓட வேண்டி நேரலாம். என்ன ஆனாலும் இஸ்ரேல் மக்களை முற்றிலுமாக அழித்துவிடவே முடியாது. இன்னும் ஆயிரம் ஹிட்டலர்கள் தோன்றினாலும் முடியாது.

காரணம். யூதர்களின் ஒற்றுமை அப்படிப் பட்டது. எந்தக் காரணத்துக்காகவும் விட்டுக் கொடுக்கவேமாட்டார்கள். எத்தனை கஷ்டம் வந்தாலும் தாங்கிக்கொண்டு சந்தர்ப்பம் பார்த்துத் திருப்பியடிக்க தெரியும் அவர்களுக்கு. இதுதான் இது ஒன்றுதான்.

இந்த ஒற்றுமை அராபியர்களிடம் இல்லாதது தான் பாலஸ்தீனின் அவலநிலைக்கு ஆதாரக் காரணம்.

பாலஸ்தீன் அராபியர்களுக்காகப் பரிதாபப் படலாம். கண்ணீர் சிந்தலாம். கவலை தெரி விக்கலாமே தவிர. யாராலும் உருப்படியாக எந்த உதவியும் செய்யமுடியாமல் இருப்பதற்குக் காரணம் இதுதான். அராபியர்களிடையே ஒற்றுமை கிடையாது.



இது இஸ்ரேலுக்கு மிக நன்றாகத் தெரியும். அவர்களின் ஒற்றுமைக் குறைபாடு உயிருடன் இருக்கும்வரை தன்னை ஒன்றும் செய்துவிட முடியாது என்பதை யூதர்கள் அறிவார்கள். யூதர்களின் இந்த மனோபாவத்தை. அராபியர்களின் இந்த இழிநிலையை உணர்வு பூர்வமாக அறிந்து. அறிவுபூர்வமாகச் சிந்தித்து. உருப்படியான ஒரு வழியைக் காட்ட 1948இல் ஒரேயொரு நபர்தான் இருந்தார். அவர் அப்போது தலைவரெல்லாம் இல்லை. பதினெட்டு. பத்தொன்பது வயது இளைஞர். எகிப்தில் பிறந்த பாலஸ்தீன்காரர். கெய்ரோவில் படித்துக்கொண்டிருந்த கல்லூரி மாணவர்.

அவர் பெயர் முகம்மது அப்துல் ரெஹ்மான் அப்துல் ரவூ.:.ப் அர.:.பாத் அல் குதா அல் ஹுஸைனி.

சுருக்கமாக அர.:.பாத். பின்னால் ஒரு நட்சத்திரமானபோது யசீர் அர.:.பாத் என்று அழைக்கப்பட்டவர்.

நல்ல குளிர் மிகுந்த இரவு வீட்டில் அத்தனை பேரும் இழுத்துப் போர்த்திக்கொண்டு தூங்கிக் கொண்டிருந்தார்கள். துளி சப்தம் இல்லாத சாலையில் எங்கோ தொலைவில் ஒரேயொரு நாய் மட்டும் ஒரு முறை குலைத்தது. குலைக்கத் தொடங்கிய அந்த நாயின் குரல். ஆரம்பத்திலேயே அடங்கிப்போனது. அரை உறக்கத்தில் இருந்த அந்தச் சிறுவனுக்கு வியப்பளித்தது. நாய் குலைக்கத் தொடங்கினால் ஒரு நிமிடமாவது நீடிக்காதோ? இதென்ன. ஆரம்பத்திலேயே ஓய்ந்துவிட்டது?

அவன் ஒரு முறை புரண்டுபடுத்தான். வீதியில் யாரோ நடப்பதுபோல் இருந்தது. ஒருவரா?. இரண்டுபேரா? இல்லை. நிறைய காலடிச் சத்தங்கள் கேட்கின்றன. எப்படியும் பத்துப் பேராவது இருக்கலாம். அவன் நேரம் பார்த்தான். மணி நள்ளிரவைத் தாண்டி நாற்பது நிமிடங்கள் கடந்திருந்தன.

இந்த இரவில். இத்தனை குளிரில் யார் வீதியில் போகிறார்கள்? ஒரே மாதிரி பூட்ஸ் சத்தம். அதுவும் இந்த பூட்ஸ் சத்தம் சாதாரண மக்கள் அணிந்து நடக்கும்போது கேட்கும் சத்தமல்ல. இது இராணுவ பூட்ஸ். அப்படி என்றால்?

கடவுளே! இன்றைக்கு எந்த வீட்டைக் குறிவைத்திருக்கிறார்கள்?

அந்த ஐந்து வயதுச் சிறுவனுக்கு அச்சம் மிகுந்தது. போர்வைக்குள் மேலும் ஒடுங்கிப் படுத்து இழுத்து தலைவரை போர்த்திக் கொண்டான். சில விநாடிகள் கழித்து. பூட்ஸ் சத்தம் நின்றுவிட்டது. மிகவும் அமைதியாக இருந்தது.

இல்லையே. இப்படி இருக்கக்கூடாதே? பூட்ஸ் சத்தம் நின்ற கணத்தில் அழுகைச் சத்தமும் ஓலச்சத்தமும் அல்லவா கேட்கும்? அதுதானே வழக்கம்? என்ன நடக்கிறது இன்றைக்கு?

அதற்குமேல் அவனால் படுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. பூனைபோல் சத்தமின்றி எழுந்து பின்புறப் படிக்கட்டுக் கதவைத் திறந்து வீட்டின்மேல் கட்டுக்குப் போனான். ஓசைப்படாமல் ஜன்னலைப் பாதி திறந்துவெளியே பார்த்தான். முதலில் தவறாக ஏதும் தெரியவில்லை. இருளில் சாலையும் உறங்கித்தான் கிடந்தது. கொஞ்சம் கூர்ந்து பார்த்தபோது. வீதியின் முனையில். நடுச் சாலையில் ஒரு நாய் வினோதமாகக் கால் களைப் பரப்பிப் கிடப்பதைக் கண்டான். சற்றுமுன் குலைக்கத் தொடங்கிய நாய். இன்னும் கவனித்துப் பார்த்ததில் அந்த நாயைச் சுற்றிலும் ஈரம் படர்ந்திருந்ததும் அவனுக்குப் புலப்பட்டது.

அப்படியென்றால்? நாய் குலைக்கத் தொடங்கியதும் கொண்டுவிட்டார்களா?

அதிர்ச்சியில் அவனுக்கு தொண்டை உலர்ந்துவிட்டது. அப்படியே பார்வையை நகர்த்தி வீதி முழுவதையும் பார்த்தான். ஒரு கணம்தான் அவனுக்கு உயிரே போய்விடும் போலிருந்தது.

இராணுவப் படையினர் அன்றைக்கு அவனது வீட்டைத்தான் தேர்ந்தெடுத் திருந்தனர். வீட்டுவாசலில் சுவரோடு சுவராக அணி வகுத்திருந்த கால்களைப் பார்த்துத் திடுக்கிட்டான் அந்தச் சிறுவன். உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அப்படியே சுவரோடு சரிந்துவிழுந்தான்.

சில விநாடிகளில் இராணுவத்தினரின் வேட்டை தொடங்கிவிட்டது.

முதலில் கதவை இடித்தார்கள். திறக்கப்படாத கதவைப் பிறகு துப்பாக்கிகளின் பின் பகுதியால் தட்டி உடைத்து உள்ளே நுழைந்தார்கள். விளக்கைக்கூட அவர்கள் போடவில்லை. படுத்துக் கிடந்தவர்களைக் காலால் எட்டி உதைத்து எழுப்பினார்கள். அலறிக் கொண்டு எழுந்தவர்களை அறைந்து வீழ்த்தினார்கள்.

மேசை கவிழ்க்கப்பட்டது. கண்ணாடி சாமான்கள் தூக்கி எறியப்பட்டன. நாற்காலிகள் உடைக்கப்பட்டன. அந்த வீட்டில் நூற்று நாற்பது வருடப் பழைய கடிகாரம் ஒன்று இருந்தது. சுவருக்கு அழகு தரும் மிகப்பெரிய கடிகாரம் அதை ஒரு வீரன் பார்த்தான். உடனே பிடுங்கி எடுத்து வீதியில் வீசி உடைத்தான். பாத்திரங் களைத் தூக்கி அடித்தார்கள். தடுக்கவந்த பெண்களையும் தூக்கி வீதியில் வீசினார்கள். பெட்டிகள். படுக்கைகள். அனைத்தையும் உடைத்துக் கிழித்து வீசியெறிந்தார்கள்.

மாடி அறையில் பதுங்கியிருந்த சிறுவன் சத்தங்கள் மூலமே இவை அனைத்தையும் உணர்ந்தான். உரக்க அழக்கூட முடியவில்லை. அவனால் அவர்கள்தம் வேலையை முடித்து விட்டுத் திரும்பும்போது வீட்டில் எத்தனை உயிர்கள் மிச்சம் இருக்கும் என்பதே அவனது கவலையாக இருந்தது. மாமாவை விட்டு வைப்பார்களா?. அத்தை உயிர் பிழைப்பாளா?. அவர்களது குழந்தைகள்?

ம்ஹூம். எதுவும் நிச்சயமில்லை. இன்றைக்கு இந்த வீடு என்று குறிவைத்தவர்கள். முழுக்க அழித்தொழிக்காமல் திரும்பமாட்டர்கள். சத்தம்கேட்டு அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் அவசியம் கண்விழித்திருப்பார்கள். ஆனால் எழுந்துவந்து உதவிசெய்ய யாருக்கும் துணிச்சல் இல்லை. துப்பாக்கி வைத்திருக்கும் இராணுவத்தினர். அவர்களிடம் என்ன செய்துவிட முடியும்?


முக்கால் மணிநேரம் அந்தக் கலவரம் அங்கே நடந்தேறியது. வீட்டில் இருந்த அத்தனை பேரும் - அந்த ஒரு சிறுவனைத் தவிர தாக்கப்பட்டிருந்தார்கள். உயிர் இருக்கிறதா?. இல்லையா? என்பதுகூடத் தெரியவில்லை. இறந்திருப்பார்கள் என்று நினைத்து வந்த படை ஒரு வழியாகத் திரும்பிப்போனதும் அவன் மெல்ல படியிறங்கிக் கீழே வந்தான்.

மாமாவின் மூக்கருகே கைவைத்துப் பார்த்தான். நல்லவேளை சுவாசம் இருக்கிறது. அவனுக்கு நிம்மதி பிறந்தது. திருப்பி வீட்டைப் பார்த்தான். அது சீரடைய எப்படியும் பலமாதங்கள் பிடிக்கும் என்று தோன்றியது. உட்கார்ந்து ஓவென்று அழத் தொடங்கினான்.

( தொடரும்...)

# காதல் ஊழல்

1



இரவோடு இணையமுடியாமல் அங்குமிங்குமாய் புரண்டாள் புஸ்பா...!

இறைவன் இரவைப் படைத்தது உயிர்களின் உறங்கும் மெத்தையாக. ஆனால் புஸ்பாவுக் காக மட்டும் தைக்கும் முட்களாக...! கிழிக்கும் கத்தியாக...!

சித்திரைவதைக்கூடமாக இரவையும் பகலையும் ஒரே மாதிரியே படைத்திருந்தான். மொத்தத்தில் அவள் வாழ்வு அவஸ்தையோடுதான் ஆரம்பமானது.

எல்லா இராப்பொழுதைப்போலவே அன்றைய இராப்பொழுதும் புஸ்பாவை ஆட்கொண்டது.

அழுது அழுது தலையணையில் இருந்து மெதுவாக தலையை உயர்த்தினாள். தலையணை கண்ணீர் மழையில் நனைந்து ஈரமாக கிடந்தது. எழுந்ததும் அப்படியே சுவரில் சாய்ந்துகொண்டாள். மேலும் அவள் இதயத்தை கவலை கட்டியணைத்தது. இதயத்தில் இடி மின்னல்வெடிக்க இரண்டாம் அடைமழை ஆரம்பமானது... அழுதாள் கண்ணீர் காலியாகும்வரை அழுதாள்.

அழுது விழிகள் வறண்டுபோனதால் உறக்கம் இறங்கி வந்திருக்கவேண்டும். அவள் உட்கார்ந்தவாறே தூக்கத்தோடு உறவாடினால்... இல்லை இல்லை!! தூக்கம் அவளோடு உறவாடியது! தூக்கத்திற்கு சொல்லமுடியாத சந்தோசம்.

பல நாட்களுக்குப் பிறகு புஸ்பாவை தாலாட்டும் குதூகலமும்தான். காதல் வலியில்லாமல் துடித்த புஸ்பாவின் இதயத்தில் காதலை திணித்து வலியை அதிகரித்தான் விடுதலை! அவள் இதயம் அப்படி துடித்தாலும் அவன் இதயம் ஆனந்தமாகவே துடித்தது காதலியை மறந்து கவிஞன் எனும் களிப்புடன்.

கவிஞர்கள் என்றாலும் எழுத்தாளர் என்றாலும் ஏழைகளாகவே பலர் இருப்பார்கள். பலர் என்பதைவிட எல்லோரும் ஏழைகள்தான்.

ஆமாம்..! விடுதலை பேசப்படும் எழுத்தாளருக்குள் ஒரு பரபரப்பான எழுத்தாளன். அவன் பெரிதாக படிக்காவிட்டாலும் அனுபவம் அவனை உச்சத்தில் வைத்தது. பெயரில் இருக்கும் புரட்சி வரிகளைப்போல் அவன் எழுத்திலும் இருந்தது வளர்ச்சி!

விடுதலை என்று பெயர் இருந்ததாலோ, என்னமோ எந்த ஆணிடமும் சிக்காத புஸ்பா விடுதலையின் காதல் வலையில் சிக்கி திக்கு முக்காடினாள்!

விடுதலை எனும் பெயர் அவன் இயற்பெயரோ... புனைபெயரோ எனக்கும் தெரியாது. அவளுக்கும் தெரியாது! உங்களுக்கு தெரியுமோ எனக்கு அது தெரியவே தெரியாது.

விடுதலை என்றதும் ஏழை களுக்கெல்லாம் விடுதலை கொடுப்பவன் என்று நினைத்தேன். அவன் எழுத்துக்கள் என்னை அப்படி கணிக்க வைத்தது.



அவனில் எனக்கிருந்த பிடிப்பால் ஒரு நாள் காதல் கடிதமும் அவனுக்கு எழுதி அஞ்சலிட்ட அனுபவமும் உண்டு...

என் காதல் உணர்வை பகிர்ந்துகொண்ட காலத்தில் அவன் குரல் கேட்டதில்லை!

பெயர் மட்டும் பத்திரிகையில் பார்த்தேன். அதனால் எனக்குள் வந்த காதல் ஏக்கம் அது ஒரு பெரும் கதை...! பிறகு பார்க்கலாம் இப்பொழுது வெட்கமாக இருக்கிறது.

எழுத்தாளர்கள், கவிஞர்கள் என்றால் எல்லோரும் ஏழைகளாகவே இருப்பார்கள் என்று நான் முன்னம் கூறியதுபோல் விடுதலையும் ஏழையாகவே பிறந்தான். அந்த ஏழ்மைதான் அவனை எழுத்தாளனாய் மாற்றியது.

பணக்காரன் பணத்தோடு பறப்பான் எழுத்தாளன் ஏழைகளோடு இருப்பான். கொடுமை ஏதும் நிகழ்ந்தால் எழுத்துரு கொடுப்பான். ஏழைகளின் இதயத்தில் துடிப்பான், குடியிருப்பான்.



(ஊழல் தொடரும்...)

மிஹிந்தலை A.பாரிஸ்



**வே. அர்ச்சுனன்**

# யாழில் இருந்து 03 முள்ளிவாய்க்கால் வரை

## புதிய தொடர்

**பொங்குதமிழ்** தொடர்பான விளக்கக் கூட்டமொன்று புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் கூட்டப்பட்டது. புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான் மற்றும் புலிகளின் கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை, புலிகளின் அனைத்துலக தொடர்பகப் பொறுப்பாளர் கஸ்ரோ மற்றும் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன், புலிகளின் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங் குமரன், உள்ளிட்ட தலைவர் களை ஒன்றுகூட்டிய பிரபாகரன் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனை அன்று காலை திடீரென உடனடி யாக தாங்கள் வழமையாக சந்திக்கின்ற வட்டக்கச்சி அலு வலகத்திற்கு வருமாறு பிரபா கரனிடமிருந்து தமிழ்ச்செல்வனிற்கு தொடர்பு அனுப்பப்பட்டது.

ஏற்கனவே புலிகளின் பொறுப் பாளர்கள் தளபதிகளை ஒன்று கூட்டிய பிரபாகரன் பொங்கு தமிழ் தொடர்பில் இவர்களது அபிப்பிராயங்களை கேட்டறிந்து கொண்டார். இதன்போது பொங்குதமிழ் நிகழ்வை கடற் புலிகளின் தளபதி கேணல் சூசையும், புலிகளின் புலனாய்வுத் துறை பொறுப்பாளர் பொட்டம் மானும் வெளிப்படையாகவே எதிர்த்து நின்றனர்.

உந்த வேலைத்திட்டங்களை கைவிட்டுவிட்டு சண்டையைத் தொடர்ந்து முழுமூச்சுடன் நடத்துவதே நல்லது என்றும் அரசியல் தீர்வு, பேச்சு வார்த்தை என்பன ஒரு போதும் பலன் அளிக்காது என்றும், இவர்கள் இருவரும் சிரித்தவாறு பிரபாகரனிடம் கூறியபோது, பிரபாகரன் எனக்கும் நீங்கள் சொல்வதில்தான் உடன்பாடு உள்ளது. ஆனால் தமிழ்ச்செல்வன் ஏதோ திட்டம் வைத்திருக்கிறான், நான் அழைத்திருக்கிறேன் இப்பொழுது வருவார், என்ன சொல்லி எங்களை சமாளிக்கப்போகிறார் பார்ப்போம் என்று கூறிவிட்டு எல்லோரும் ஒன்றாக அமர்ந்து காலை உணவை உட்கொண்டு இருந்த வேளையில் தமிழ்ச்செல்வன் சிரித்த முகத்துடன் அனைவருக்கும் சலாம் போட்டவாறு (வணக்கம்) வந்து இறங்குகிறார்.

இதன்போது பிரபாகரன் தமிழ்ச் செல்வனை தனது ஆசனத்திற்கு அருகில் அழைத்து இருத்திவிட்டு கூடியிருந்த தலைவர்களிடம் இன்றைய கூட்டத்தில் நானும் உங்களைப் போன்று ஒருவனாகவே இருப்பேன். இன்றைய கூட்டத்தின் தலைவர் தமிழ்ச்செல்வன்தான் என்று தலைவர் சொல்ல தமிழ்ச்செல்வன் குழைந்த புன்னகையுடன் நெளிந்தவாறு தலைவருக்கு அருகில் இருந்து காலை உணவின்பின் கூட்டத்தை நடத்துவோம் என்றுகூறி காலை உணவை அனைவரும் முடித்தபின்னர் கூட்டத்தை தமிழ்ச்செல்வன் கூட்டினார். இதன்போது பொங்குதமிழ் தொடர்பில் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இதன்போது எல்லா வாதப்பிரதிவாதங் களையும், செவிமடுத்த பிரபாகரன் தமிழ்ச் செல்வனிற்கும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கிப் பாருங்கள். இந்த நடவடிக்கை சிலவேளை களில் சாதகமாக அமைவதற்கு வாய்ப்பு களும் உள்ளன. என்றுகூறியபோது புலிகளின் அனைத்துலக தொடர்பகப் பொறுப்பாளர் கஸ்ரோ, மற்றும் புலிகளின் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங் குமரன் உள்ளிட்டோர் தமிழ்ச்செல்வனின் திட்டம் வெற்றி அளித்தால் அது பல சாதகமான சூழ்நிலைகளை உலக அரங்கில் ஏற்படுத்துவதுடன் உள்நாட்டிலும், பல சாதகமான சூழல்கள் நிலவுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

எனவே தமிழ்ச்செல்வனின் எண்ணப்படி பொங்குதமிழ் நிகழ்வை நடத்துவதற்கு அனுமதிப்பதே சிறந்தது என்று முடிவு எடுக்கப்பட்டது. இதனிடையே இடையில் குறுக்கீடு செய்த பொட்டம்மான் பொங்கு தமிழ் நிகழ்வில் யார் யார் எல்லாம் கலந்துகொள்வார்கள் அதில் என்னென்ன தீர்மானங்கள் எடுக்கப்படும் என்பவை தொடர்பாக தனக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் தெரியப்படுத்தப்படவேண்டும் எனவும், அவ்வாறு தெரியப்படுத்தினால் தான் பொங்குதமிழ் நிகழ்வை குழப்பமின்றி நடத்த எனது பிரிவு உறுப்பினர்களும் இதில் ஊக்கமுடன் செயற்படுவார்கள்.

இதன்மூலம் வில்லங்கமானவர்கள் எமது போராட்டத்திற்கு எதிரானவர்கள் போன்றவர்களை இனங்காணுவதற்கும், போராட்டத்திற்கு எதிரான சக்திகள் கரம் கோர்ப்பதை தடுப்பதற்கும் உதவியாக இருக்கும் என்று கூறியபோது இதனை ஏற்றுக்கொண்ட பிரபாகரன் பொட்டம்மான் சொன்னால் என்ன சொல்லாமல்விட்டால் என்ன தமிழ்ச்செல்வன் பொட்டம்மானுக்கு தெரியப்படுத்தித்தான் எல்லாவற்றையும் செய்வார். இதை நான் சொல்லத் தேவை யில்லை என்று சொன்னபோது மீண்டும் சிரித்தவாறு நெளிந்துகொண்ட தமிழ்ச் செல்வனை பார்த்து பிரபாகரன் தமிழ்ச் செல்வனிற்கு முழுமையான பவரையும், எமது மத்திய குழு தந்துள்ளது.

நீர் உமது எண்ணம்போல் பொங்குதமிழ் நிகழ்வை நடத்தலாம் என்று கூறிவிட்டு அனைவரையும் வழியனுப்பிய பிரபாகரன் இறுதியில் தமிழ்ச்செல்வனை மட்டும் இருக்கச் சொல்லிவிட்டு ஏனையோரை அனுப்பிவிட்டு தமிழ்ச்செல்வனிடம் எல்லோரும் பொங்கு தமிழ் தொடர்பில் நல்ல அபிப்பிராயத்தில் இல்லை. குறிப்பாக சூசையும், பொட்டம்மானும் இதை விரும்பவே இல்லை.

எனவே பொங்குதமிழ் நிகழ்வை ஒரு குழப்பமுமின்றி வெற்றிகரமாக நடத்தினால் தான் உமக்கு காத்து ஏறும். இதில் கவனமாக நீர் செயற்படவேண்டும், என்று பிரபாகரன் ஆலோசனை வழங்கிவிட்டு பிரபாகரன் தனது வாகனத்தில் ஏறி புறப்படத் தொடங்கினார்.

இதன்பின்னர் தமிழ்ச்செல்வனும் தனது கிளிநொச்சியில் உள்ள அரசியல்துறை அலுவலகத்திற்கு வந்துசேர்ந்தார். தனது அலுவலகத்திற்கு வந்துசேர்ந்த தமிழ்ச் செல்வன் உடனடியாக சுதனுடன் தொடர்பை ஏற்படுத்தி பொங்குதமிழுக்குரிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக விளக்கம் அளித்ததுடன் பின்னர் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் கஜந்திரன் திவ்வியன் போன்றவர்களுக்கு விளக்கம் அளிப்பதற்காக இரண்டு அரசியல் துறைப் போராளிகளை தெரிவுசெய்து அவர்களை உடனடியாகவே குருநகர் கடற்பகுதி ஊடாக யாழ். நகரிற்கு அனுப்பிவைத்தார். குருந-கர் பகுதியை வந்தடைந்த குறித்த இரண்டு புலிகள் இயக்க அரசியல்துறை உறுப்பினர்கள் இருவரும் படை யினரின் கண்களில் மண்ணைத் தூவியவாறு தங்களது உயிர் களை கைகளில் பிடித்தவாறு இரவோடு இரவாக குறுக்குப் பாதைகள் ஊடாக நகர்ந்து சாவகச்சேரி மீசாலை மந்துவில் பகுதியை வந்தடைகின்றனர். மீசாலை மந்துவில் பகுதி என்பது அன்றைய நாட்களில் புலிகளின் ஒரு கோட்டையாக விளங்கியது.

எந்தப் படைச் சுற்றிவளைப்புக் கள் சோதனைக் கெடுபிடிகள் இருந்தபோதிலும், இந்தப் பகுதி யில் உள்ள சிலர் புலிகளை மறைத்து வைத்திருப்பதில் வல்லவர்களாக இருந்தனர். இதன்காரணமாக மீசாலை, மந்துவில் பகுதி இக்காலகட்டங் களில் புலிகளுக்கு முண்டு கொடுக்கும் ஒரு இடமாக விளங்கியது. அதாவது இந்தப் பகுதியின் இயற்கை வளமும் இயற்கைச் சூழலும் ஒருவிதத்தில் புலிகளுக்கு ஒத்துழைத்தது என்றே சொல்லலாம்.

இதைவிட யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய செயலாளர் திவ்வியன் பல ஏற்பாடுகளை புலிகளுக்கு இப்பகுதியில் ஏற்படுத்தியும் கொடுத்திருந்தார். இதைவிட பிரத்தியேகமாக திவ்வியன் தனது உறவினர்கள் சிலரின் வீடுகளில் புலிகள் மறைந்திருப்பதற்கும் அங்கு தங்கிநின்று செயற்படுவதற்கும் ஏற்பாடுகளை செய்து கொடுத்திருந்தார். இதன்காரணமாக யாழ். நகரம் மற்றும் வடமராட்சிப் பகுதி தீவகப் பகுதிகளில் உள்ள புலிகள் ஏதாவது ஒன்றுகூடும் வேலைத்திட்டங்கள் இருந்தால் சாவ்கச்சேரி மந்துவிலையே தேர்ந்தெடுப்பார்கள்.

இவ்வாறு சகல விதத்திலும் புலிகளுக்கு சாதகமாக இருந்த பிரதேசமான மந்துவில் பகுதிக்கு குறித்த அரசியல்துறைப் போராளி கள் இருவரும் வந்துசேர்ந்தனர். இவ்வாறு வந்துசேர்ந்த போராளி கள் இருவரும் தங்களது வந்த களைப்பு ஆறுவதற்கு முன்னரே யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவரையும், செயலா-ளரையும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் திவ்வியனின் தம்பி சியாம் ஊடாக தொடர்புகொண்டு அவர்களை பல்கலைக்கழக விடுதியில் இருந்து ஏனைய மாணவர்களுக்கு தெரியாமல் கனகச்சிதமாக இருவரையும் மீசாலை, மந்துவில் கிராமத்திற்கு சியாம் அழைத்து வந்து புலிகளுடன் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை செய்துகொடுத்தார்.

இதன்போது பொங்குதமிழ் தொடர்பான அனுமதியை தமிழ்ச் செல்வன் வழங்கியமை தொடர் பிலும் ஏனைய நிதி உள்ளிட்ட நடவடிக்கைகளை பொங்குதமிழ் நிகழ்விற்கு எந்தவகையில் செயற்படுத்துவது உள்ளிட்ட விட யங்கள் தொடர்பிலும் விளக்கம் அளிக்கப்பட்டதுடன் அடுத்தகட்ட நடவடிக்கைகளும் ஆரம்பமாகின. இவ்வாறு அடுத்த கட்ட நடவடிக்கை கள் எவ்வாறு ஆரம்பமாகின? அது யாழிலிருந்து முள்ளிவாய்க் கால் வரை எவ்வாறு கொண்டு போய்விட்டது என்பது தொடர்பில் தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)



# ஈராக் மீது அமெரிக்கா ஏவிவிட்ட பூதம்

**பலவீனமான நிலையில் உள்ள ஈராக்கின் மாலிக் அரசுக்கு, ஈரானிய இராணுவ உதவி கிடைக்குமாக இருந்தால், ஷியா அரேபியர் வாழும் தெற்குப் பகுதி தனியாக பிரிந்துவிடும். ஆகவே, ISIS கட்டுப்பாட்டில் உள்ள சுன்னி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் மத்திய ஈராக், சிரியாவின் சில பகுதிகளை உள்ளடக்கிய தனிநாடாக மாறிவிடும். தற்போதைய நிலைமையும், ஏறக்குறைய அப்படித்தான் உள்ளது.**



தொகுப்பு: வேணு கிருஷ்ணா

ஈராக் என்ற தேசம் உருவான காலத்தில் இருந்து, குவைத் ஈராக்குக்கு சொந்தமான பிரதேசம் என்று பக்தாத் ஆட்சியாளர்கள் உரிமைகோரி வந்தார்கள். அந்த உரிமைகோரலை அடிப்படையாக கொண்டு, சதாம் உத்தரவின் பேரில் ஈராக் இராணுவம் குவைத்மீது படையெடுத்தது.

வளைகுடாவில் ஒரு துறைமுகத்திற்கான தேவையும், பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சினையும் பிற காரணங்கள். குவைத் படையெடுப்பு குறித்து அமெரிக்க நண்பனுக்கு ஈராக் அறிவித்திருந்தது. அமெரிக்கா சம்மதிக்காவிட்டாலும், வாஷிங்டனில் இருந்து கிடைத்த சமிக்ஞை ஒன்றை தவறாக புரிந்துகொண்ட ஈராக் படையெடுப்பில் இறங்கியது. ஆனால் ஈராக்கை பொறியில் மாட்டிவிடும் திட்டம் அது என்பது பின்னர் தெரியவந்தது.

குவைத்தை சேர்த்துக்கொண்டால் தனது வல்லரசு அந்தஸ்து உயரும் என்று ஈராக் கருதியது. அமெரிக்கா மனதில் வேறொரு திட்டம் இருந்தது. எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் இருந்து குவைத்தில் பிரிட்டிஷ் எண்ணெய் நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்தின. ஈராக்கை ஆக்கிரமிக்க வைத்து, போருக்குள் இழுத்துவிட்டு, அமெரிக்க இராணுவ உதவியைக் காட்டி, விடுதலையான குவைத்தை தனது செல்வாக்குக்கு உட்படுத்தியது.

சதாம் அன்று குவைத் யுத்தத்தை வரப்போகும் போர்களின் தாய் என்று வர்ணித்தார். அது எவ்வளவு தீர்க்க தரிசனத்துடன் சொல்லப்பட்ட கூற்று என்பது பின்னர் நிரூபணமானது. குவைத் யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட ஈராக்மீது பொருளாதாரத் தடைகள் கொண்டுவரப்பட்டன. நாட்டின் பொருளாதாரம் உடைந்தது. ஒரு காலத்தில் வசதியாக வாழ்ந்த மக்கள், ஓரிரு வருடங்களில் உணவுக்கே வழியற்ற ஏழைகளானார்கள். பத்து வருடங்கள் கழித்து, மிகவும் பலவீனமடைந்த ஈராக் மீது இன்னொரு போர் திணிக்கப்பட்டது. இம்முறை சதாம் ஹுசைன் அரசைக் கவிழ்க்கும் நோக்குடன் பன்னாட்டுப் படைகள் நுழைந்தன. சதாமும், பிற முக்கியஸ்தர்களும் தூக்கிலிடப்பட்டனர். நாடு நீண்டதொரு அந்நிய ஆக்கிரமிப்புக்கு உள்ளானது. பின்னர் வெளிநாட்டுப்படைகள் வெளியேறிச் சென்றபின்பு இப்பொழுது ஐ.எஸ்.ஐ.எஸ் எனும் சனி முஸ்லிம் ஆயுத இயக்கம் ஈராக்மீது படையெடுத்து பல பகுதிகளைக் கைப்பற்றியதுடன் இஸ்லாமிய அரசையும் பிரகடனம் செய்தது. இதன் பின்னணி என்ன?

### ஈராக்கிய அல்கொய்தா (ISIS), இன்றுவரையில் இஸ்ரேல்மீது தாக்குதல் நடத்தாத காரணம் என்ன?

சி.ஐ.ஏ., ஆப்கானிஸ்தானில் தலிபான் என்ற பூதத்தை உருவாக்கிவிட்டதைப் போன்று, சிரியா மற்றும் ஈராக்கில் ISIS (அல்லது ISIL) என்ற இன்னொரு பூதத்தை உருவாக்கிவிட்டுள்ளது. அல்கொய்தாகூட சி.ஐ.ஏ. உருவாக்கிய இயக்கம் தான் என்பதும், ஒசாமா பின்லேடன் முன்னொரு காலத்தில் ஒரு சி.ஐ.ஏ. உளவாளி என்பதும், ஏற்கனவே நிரூபிக்கப்பட்ட உண்மைகள். அமெரிக்கர்கள், ஆரம்பகாலங்களில் ISIS இயக்கத்தினை AQI (ஈராக்கிய அல்கொய்தா) என்று குறிப்பிட்டுவந்தனர்.

ஈராக்கில் அமெரிக்கப் படையெடுப்பு நடந்த சில மாதங்களின் பின்னர், பதவியிறக்கப்பட்ட சதாம் விசுவாசிகளும், பாத் தேசியவாதிகளும் ஒரு நீண்ட விடுதலைப் போராட்டத்தை நடத்திவந்தனர். அந்தப் போராட்டத்தை முறியடிப்பதற்காக, AQI களத்தில் இறக்கிவிடப்பட்டது.

கடும்போக்கு சுன்னி இஸ்லாமிய மதவாதிகளாக காட்டிக்கொண்ட ISIS, ஷியா இஸ்லாத்தை பின்பற்றும் மக்களை கொன்று குவித்தது. சமாரா நகரில் ஷியா நம்பிக்கையாளர்களின் புனிதஸ்தலமான தங்க மசூதியை குண்டுவைத்து தகர்த்தது. இதன்மூலம், ஈராக்கில் சுன்னி - ஷியா மதக் கலவரங்களை தூண்டிவிட்டது. இவை எல்லாம் சி.ஐ.ஏ.யின் பிரித்தாளும் சூழ்ச்சியுடன் ஒத்துப்போகின்றது.

ஈராக்கிய அல்கொய்தாவில் இருந்து பிரிந்ததாக கூறிக்கொள்ளும் ISIS, சிரிய உள்நாட்டுப் போர் வெடித்ததும், சிரியாவுக்கு நகர்ந்துசென்றது. ஈராக் எல்லையோரம் இருக்கும், எண்ணெய் வளம் உள்ள ஒரேயொரு சிரியப் பகுதியை கைப்பற்றிக் கொண்டது. "ISIS அங்கிருந்து கிடைக்கும் எண்ணெய்யை கடத்திச் சென்று விற்று இயக்கத்திற்கு நிதிசேகரித்ததாக," சி.ஐ.ஏ. அறிக்கை கூறுகின்றது.

உண்மையில், சிரியாவில் அசாத் அரசை கவிழ்க்கவேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன், பணத்தை தாராளமாக வாரியிறைத்த சவூதி அரேபியா, கட்டார் மற்றும் மேற்குலக நாடுகளின் நிதியில் பெருமளவு பங்கு, ISIS வசம் சென்றுள்ளது. அவர்கள் அந்தப் பணத்தை மிகத் திறமை யாக ஊடக பிரசாரங்களில் செலவிட்டு, உலகம் முழுவதும் இருந்து இளம் ஜிகா தியர்களை கவர்ந்திழுத்தனர்.

இன்று, ISIS அமைப்பின் முக்கால்வாசி உறுப்பினர்கள் வெளிநாட்டு தொண்டர்கள் என்றால் அது மிகையாகாது. முப்பது வருடங்களுக்கு முன்னர் ஆப்கானிஸ்தானில் நடந்த அதே வரலாறு, இன்று மீண்டும் சிரியா அல்லது ஈராக்கில் நடந்துகொண்டிருக்கிறது. அல்கொய்தாவுக்கும், அமெரிக்காவுக்கும் சம்பந்தம் இல்லை என்பதுபோல, மேற்கத்திய ஊடகங்கள் செய்யும் பரப்புரைகளை நம்பும் மக்கள் இருக்கும்வரையில், ஒரே வரலாறு மீண்டும் மீண்டும் திரும்பி வந்துகொண்டே இருக்கும்.

இன்றைய ஈராக்கிய பிரச்சினை, மீண்டும் சுன்னி - ஷியா பிரச்சினையாக மாறிவிட்டது. ISIL இயக்கம் முழுக்கமுழுக்க சுன்னி முஸ்லிம்களை மட்டும்கொண்ட மதவாத இயக்கம். அது வெளிப்படையாகவே ஷியாக்களுக்கு எதிரான துவேஷத்தை காட்டி வருகின்றது.

இன்றுவரையில் ISIL கைப்பற்றிய ஈராக்கிய பிரதேசங்களில் சுன்னி முஸ்லிம் பிரிவினர் மட்டுமே பெரும்பான்மையாக வாழ்கின்றனர். அந்த மக்கள், ISIS இயக்கத்தினரை, விடுதலை வீரர்களாக வரவேற்றுள்ளனர். உள்ளூர் மக்களின் ஆதரவின்றி, ISIS அந்தளவு விரைவாக முன்னேறி இருக்க முடியாது. ISIS கைப்பற்றியுள்ள பகுதிகளில், தலிபான் பாணி ஆட்சி நடப்பது வேறு விடயம்.

ISIS கைப்பற்றிய மொசுல் போன்ற நகரங்களில் இருந்த ஈராக்கிய படையினர், பெரும்பாலும் ஷியா முஸ்லிம்கள். அதனால், ஏற்கனவே ஈராக்கிய படையினர், பொது மக்களின் ஆதரவை இழந்துவிட்டிருந்தனர். ISIS முன்னேறிக் கொண்டிருந்த நேரம், ஈராக்கிய அரச படையினர் முகாம்களுக்குள் முடங்கிக் கிடந்தனர். பொது மக்களின் இலக்குகள் என்றும் பாராமல் கண்மூடித்தனமாக எறிகணைத் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதனால், பெரும்பான்மையான பொதுமக்கள் போர் நடந்த பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து சென்றனர்.

அண்மைக் காலத்தில் விரைவாக மாறிக் கொண்டிருக்கும் அரசியல் களநிலைமை காரணமாக, எதிர்காலத்தில் ஈராக் மூன்று துண்டுகளாக பிரிக்கப்பட்டாலும் ஆச்சரியப்பட எதுவுமில்லை. ஏற்கனவே பத்து வருடங்களுக்கு முன்னர், அமெரிக்க இராணுவத் தலைமை மட்டத்தில் அத்தகைய திட்டம் ஒன்று ஆராயப்பட்டது. வடக்கு ஈராக்கில் குர்து இனமக்கள் பெரும்பான்மையாக வாழும் குர்திஸ்தான் தனிநாடாகி விடும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. இன்றைய குழப்பகரமான சூழ்நிலையை பயன்படுத்தி, எண்ணெய் வளம் நிறைந்த கிர்குக் நகரத்தை, குர்து பிராந்திய இராணுவம் கைப்பற்றியுள்ளது.

பலவீனமான நிலையில் உள்ள ஈராக்கின் மாலிக் அரசுக்கு, ஈரானிய இராணுவ உதவி கிடைக்குமாக இருந்தால், ஷியா அரேபியர் வாழும் தெற்குப் பகுதி தனி யாக பிரிந்துவிடும். ஆகவே, ISIS கட்டுப்பாட்டில் உள்ள சுன்னி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் மத்திய ஈராக், சிரியாவின் சில பகுதிகளை உள்ளடக்கிய தனிநாடாக மாறிவிடும். தற்போதைய நிலைமையும், ஏறக்குறைய அப்படித்தான் உள்ளது.

தற்போது ஈராக்கில் நிலவும் பதற்ற நிலை காரணமாக, உலகச் சந்தையில் எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது. இதனால், அமெரிக்கா, சவூதி அரேபியா, கட்டார் ஆகிய வளைகுடா நாடுகளின் காட்டில் நல்ல மழை பெய்கிறது. பெற்றோலின் விலை அதிகரிப்பினால் கிடைக்கும் இலாபம், அவர்களது கஜானாவை நிரப்பும் என்பதால், அந்த நாடுகளில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்.

ஈராக்கில் ISIS இயக்கத்தின் முன்னேற்றம், எதிர்பாராத விதமாக திடீரென நடந்ததுபோன்று, அமெரிக்கா பாசாங்கு செய்கின்றது. சிரியாவில் போரிட்டுக் கொண்டிருந்த பெரும்பாலான ISIS போராளிகள், ஈராக் எல்லையோரம் நகர்த்தப்பட்டுவருவதாக, லெபனான் பத்திரிகைகளில் தகவல் வந்திருந்தது. ஒரு ஊடகத்தில் வெளிப்படையாக வந்த தகவலை, சி.ஐ.ஏ. கவனிக்காமல்விட்டது என்று சொல்லமுடியாது. அமெரிக்கர்களுக்கு எல்லாம் தெரியும். தெரிந்தாலும் கண்ணை மூடிக்கொண்டிருந்தார்கள்.

அது சரி, யார் அந்த ஈராக்கிய அல்கொய்தா? சிரியா, ஈராக்கில் கண்ணிமைக்கும் நேரத்தில் முன்னேறி, உலகில் யாராலும் வெல்லமுடியாத இயக்கம் என்று மார்தட்டிக் கொள்கிறது. மொசுல் நகர மத்திய வங்கியை சூறையாடிய பின்னர், உலகிலேயே பணக்கார இயக்கமாகி உள்ளது. அங்கிருந்த அமெரிக்க ஆயுத தளபாடங்களை அபகரித்த பின்னர், உலகிலேயே மிகவும் பலமான இராணுவக் கட்டமைப்பு கொண்ட இயக்கம் அது. இஸ்ரேல் காஸாவை அழித்துக் கொண்டிருக்கின்றபோதும் இன்றைய உலகில் மிகவும் பலமான இயக்கமான ஈராக்கிய அல்கொய்தா, இன்றுவரையில் இஸ்ரேல்மீது தாக்குதல் நடத்தாத காரணம் என்ன? யாருக்காவது விடை தெரியுமா?

### காஸாவின் பிந்திய நிலைமை

இஸ்ரேல் அரசு அறிவித்த 24 மணிநேர போர் நிறுத்தத்தை ஹமாஸ் இயக்கத்தினர் ஏற்க மறுத்து ஞாயிற்றுக்கிழமை (27.07.2014) ரொக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர் என இஸ்ரேல் அறிவித்தது. இதற்கு பதிலடியாக இஸ்ரேல் இராணுவமும் காஸாவை குறிவைத்து மீண்டும் தாக்குதல் நடத்தத் தொடங்கியுள்ளது. காஸாவின்மீது இஸ்ரேல் போர்தொடுத்த 2014 ஜூலை 8-ம் திகதி முதல் சென்ற வாரம்வரை சுமார் 1,200 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 8,000-க்கும் அதிகமான மக்கள் காயமடைந்துள்ளனர். இதில் 99 சதவீதத்துக்கும் அதிகமான வர்கள் பொதுமக்கள் ஆவர். சுமார் 1,40,000 பாலஸ் தீனர்கள் வெளியேற்றப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்தப் போரில் 192 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளதாக யுனிசெப் நிறுவனம் தெரிவித்துள்ளது. இஸ்ரேல் தரப்பில் இதுவரை 43 பேர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் சனிக்கிழமை(26.07.2014) 12 மணிநேர போர் நிறுத்தத்தை இஸ்ரேலும் ஹமாஸ் இயக்கமும் மேற்கொண்டன. அப்போதும் ஹமாஸ் இயக்கத்தினர் பயன்படுத்திய பாதாள சுரங்கங்களை இஸ்ரேல் இராணுவம் அழிக்கத் தொடங்கியது. இந்நிலையில் ஐ.நா. சபை கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து போர் நிறுத்தத்தை மேலும் 24 மணிநேரம் இஸ்ரேல் நீட்டித்தது. இதை ஹமாஸ் இயக்கத்தினர் ஏற்க மறுத்து ரொக்கெட் குண்டுகளைவீசி தாக்குதல் நடத்தினர். இதற்குப் பதிலடியாக இஸ்ரேல் இராணுவமும் பதில் தாக்குதல் நடத்தியது. இதில் 2 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிக்கையில், ஹமாஸ் இயக்கத்தினர் 5 ரொக்கெட் குண்டுகளை வீசினர். இதில் 2 ரொக்கெட் குண்டுகள் நடுவானில் அழிக்கப்பட்டன, 3 குண்டுகள் இஸ்ரேல் பகுதியில் விழுந்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மட்டுமல்ல அமெரிக்காவினால் ஆட்டுவிக்கப்படும் ஈராக்கிய அல் கொய்தாகூட இஸ்ரேலை மறைமுகமாக ஆதரிக்கின்றது. உலகின் இஸ்லாமி யரின் பலத்தை முறியடிக்க சனி மற்றும் ஷியா முஸ்லிம்கள் மத்தியிலான பிளவு அமெரிக்காவால் நன்கு பயன்படுத்தப்படுகிறது.

நன்றி - தேனீ

# தமிழர்களின் தேசியத்தலைவர் சுடப்பட்டு 25 ஆண்டுகள்

அமிர்தலிங்கம் ஒரு காலத்தில் தமிழ் இளைஞர்களிடையே மிகவும் பிரபலமானவராக இருந்ததுடன், தமிழ் அரசியலில் கடும் போக்காளராகவும் கருதப்பட்டார். அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் மற்றும் முருகேசு சிவசிதம்பரம் ஆகியோரின் இணைத் தலைமையின்கீழ் 1977 பாராளுமன்ற தேர்தலில், ரி.யு.எல்.எப் 18 ஆசனங்களை வென்றது. ஐ.தே.க 141 ஆசனத்தை வென்றபோது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிபெற்ற ஆசனங்களின் தொகை 8 ஆக குறைவடைந்தது. இதனால் 168 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் ரி.யு.எல்.எப் பிரதான எதிர்க்கட்சியாக மாறியது. எதிர்க்கட்சி தலைவர் பதவியை பெறும் முதலாவது இலங்கை தமிழர் என்கிற பெருமையை அமிர்தலிங்கம் பெற்றார்.

**ஜூலை** 13, 1989 அன்றுதான், புகழ்பெற்ற இலங்கை தமிழ் தலைவர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம், புலிகளினால் படுகொலை செய்யப்பட்டார். முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரான அவர் கொழும்பில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டபோது, தமிழர் விடுதலைக் கூட்டணியின் (ரி.யு.எல்.எப்) ஒரு தேசிய பட்டியல் பாரளுமன்ற உறுப்பினராக இருந்தார்.

அமிர்தலிங்கம், முன்னாள் ரி.யு.எல்.எப் பாராளுமன்ற உறுப்பினர் வெற்றி வேலு யோகேஸ்வரனுடன் சேர்த்து 25 வருடங்களுக்கு முன்பு கொல்லப்பட்டார். புலிகளின் கொலையாளிகள் அமிர்தலிங்கம் மற்றும் யோகேஸ்வரன் ஆகியோரைச் சுட்டுக்கொன்றபோதுகூட, புலிகளின் உத்தியோகபூர்வ தூதுக் குழுவுக்கும் மற்றும் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் அரசாங்கத்துக்கும் கொழும்பில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. புலிகளின் சுயரூபம் என்ன என்பதை அமிர்தலிங்கத்தின் படுகொலை உலகத்துக்கு பெருமளவு தெளிவாக எடுத்துக் காட்டியிருந்தது.

கொலை நடைபெற்ற சூழ்நிலையை விளங்கிக் கொள்வதற்கு, அந்த நேரத்தில் நிலவிய அரசியல் பின்னணி பற்றிய சில விபரங்களை அறிய வேண்டியது அவசியம். ஜூலை 29,1987ல் முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜூனியஸ் ரிச்சட் ஜெயவர்தன ஆகியோரால் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதின் விளைவாக, வடக்கு மற்றும் கிழக்கில் அமைதி காப்பவர்களாக இந்திய இராணுவத்தினர் அறிமுகப்படுத்தப்பட்டார்கள். இந்திய அமைதிகாக்கும் படையாக (ஐ.பி.கே.எப்) நியமிக்கப்பட்டவர்களுக்கும் மற்றும் புலிகளுக்கும் இடையில் போர் மூண்டது.

இராணுவ ஆய்வுகள் தெரிவிப்பதன் படி, அதிக அழுத்தத்துக்கு ஆளான புலிகள் சுவாசிப்பதற்கு பிராணவாயு வேண்டி அந்த சமயத்தில் திணறினார்கள். ஸ்ரீலங்காவில் இந்திய இராணுவத்தின் பிரசன்னம் சிங்கள தேசியவாதிகள் மத்தியில் பெரிய சீற்றத்தை ஏற்படுத்தியிருந்தது, அது ஒரு இறையாண்மை மீறல் என அவர்கள் கருதினார்கள். ஐக்கிய தேச-ியக் கட்சியின் பிரேமதாஸ, மிக்க் குறுகிய பெரும்பான்மையுடன் ஜனாதிபதியாக தெரிவாகியிருந்தார். தான் தெரிவு செய்யப்பட்டால் இந்திய இராணுவத்தை திருப்பி அனுப்புவதாக அவர் வாக்குறுதி வழங்கியிருந்தார்.

ஜனதா விமுக்தி பெரமுனவினால் (ஜே.வி.பி) ஒரு வன்முறைப் பிரசாரமும் தலை தூக்கி யிருந்தது. இந்தக் கட்டத்தில்தான் மரபு வழி களை பின்பற்றாதவரான பிரேமதாஸ ஜே.வி.பி மற்றும் புலிகள் ஆகிய இருபகுதியினரை யும் நோக்கி நேசக் கரம் நீட்டினார். அந்த வாய்ப்பினை ஜே.வி.பி. அலட்சியம் செய்த அதேவேளை, திணறிக் கொண்டிருந்த புலிகள் அதை பற்றிக் கொண்டது. வடக்கிலும் மற்றும் கிழக்கிலும், இந்திய இராணுவம் புலிகளுடன் யுத்தம்செய்து கொண்டிருந்தவேளையில், கொழும்பில் அரசாங்கத்துக்கும் மற்றும் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பமாகின, மற்றும் ஜனாதிபதி பிரேமதாஸ மற்றும் புலிகள் ஆகிய இருபகுதியினருக்கும் பொதுவான ஒரு நோக்கமே இருந்தது. வித்தியாசமான காரணங்களுக்காக இரு பகுதியினரும் இந்திய இராணுவத்தை வெளியேற்ற விரும்பினார்கள்.

புலிகளுடன் அரசியல் பேச்சு வார்த்தைகள் ஆரம்பமானதை தொடர்ந்து ஜனாதிபதி பிரேமதாஸ, இந்திய இராணுவம் ஸ்ரீலங்காவை விட்டு வெளியேற ஒரு காலக்கெடுவை நியமிக்கும்படி கோரிக்கை விடுக்க ஆரம்பித்தார். இந்த காரியத்தை கெடுக்கக்கூடிய ஒருவராக இருபகுதியினரும் மனத்தால் உணர்ந்த நபர், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் ஆவார். ரி.யு.எல்.எப் இன் செயலாளா நாயகம், இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கும் மற்றும் இந்திய இராணுவம் இலங்கையில் இருப்பதையும் உறுதியாக ஆதரித்தவராவார். தனது வன்முறை மற்றும் அழிக்கும் திறன் என்ப னவற்றால் எல்.ரீ.ரீ.ஈ ஒரு குறிப்பிட்ட அந்தஸ்தை பெற்றிருந்தாலும், வன்முறைத் தன்மை யற்ற அரசியல் தலைவரான அமிர்தலிங்கம் தனது அரசியல் நல்லெண்ணம் மற்றும் அந்தஸ்து காரணமாக சர்வதேச ரீதியாக நற்சான்றுகளைப் பெற்றுள்ளார் என்கிற கருத்து நிலவி வந்தது.

1989ல், இந்தக் கட்டத்தில் இந்திய இராணுவத்தை இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பக்கூடாது என்று அமிர்தலிங்கம் நாவன்மையுடன் வாதிட்டதால், அரசாங்கம் மற்றும் புலிகள் ஆகியோர் அடைந்துள்ள அச்சத்தின் ஒரு பகுதியை உணரக் கூடியதாக இருந்தது.

யாழ்ப்பாணம் பண்ணாகத்தை சேர்ந்த அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் ஓகஸ்ட் 26,1927ல் பிறந்தார். அவர் வசீகரத் தன்மையும் துடிப்பான இயக்கமும் கொண்ட அரசியல்வாதி, ஈழத்து காந்தி என அழைக்கப்படும் மதிப்புக்குரிய தமிழ் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் தலைமைத் தளபதியாக பல வருடங்கள் பணியாற்றியுள்ளார். தொழிலால் ஒரு வழக்கறிஞரான அமிர்தலிங்கம் 1956 முதல்1970 வரை வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினராகவும் 1977 முதல் 1983 வரை காங்கேசன் துறை பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளார். 1989 தேர்தலின் பின்னர் அவர் ரி.யு.எல்.எப் இனது தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

## எதிர்க்கட்சித் தலைவர்

அமிர்தலிங்கம் ஒரு காலத்தில் தமிழ் இளைஞர்களிடையே மிகவும் பிரபலமான வராக அமிர்தலிங்கம் இருந்ததுடன், தமிழ் அரசியலில் கடும் போக்காளராகவும் கருதப்பட்டார். அப்பாபிள்ளை அமிர்த லிங்கம் மற்றும் முருகேசு சிவசிதம்பரம் ஆகியோரின் இணைத் தலைமையின்கீழ் 1977 பாராளுமன்ற தேர்தலில், ரி.யு.எல்.எப் 18 ஆசனங்களை வென்றது, ஐ.தே.க 141 ஆசனத்தை வென்றபோது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பெற்ற ஆசனங்களின் தொகை 8 ஆக குறைவடைந்தது. இதனால் 168 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட பாராளுமன்றத்தில் ரி.யு.எல். எப்பிரதான எதிர்க்கட்சியாக மாறியது. எதிர்க்கட்சி தலைவர் பதவியை பெறும் முதலாவது இலங்கை தமிழர் என்கிற பெருமையை அமிர்தலிங்கம் பெற்றார்.

1983-ம் ஆண்டின் தமிழர் விரோத படு கொலைகள் மற்றும் பிரிவினை வாதத்தை அனுமதிக்க மறுக்கும் அரசியலமைப்பின் ஆறாவது சட்டத் திருத்தம் என்பனவற்றின் விளைவாக ரி.யு.எல்.எப் பாராளுமன்றத்தை புறக்கணித்ததால் அவர்களது ஆசனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அமிர்தலிங்கம் மற்றும் சில ரி.யு.எல்.எப் தலைவர்களும் சேர்ந்து சுயமாக நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவுக்கு சென்றார்கள். பல தமிழ் போராளிக் குழுக்களால் முன் னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் உந்துதல் பெற்றது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டதன் காரணமாக ஒரு யுத்த நிறுத்தம் கொண்டுவரப்பட்டாலும் அது அதிக காலத்துக்கு நீடிக்கவில்லை. அதேவேளை ரி.யு.எல்.எப் மற்றும் ஏனைய போராளிக் குழுக்கள் அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டதுடன் தமிமீழம் என்கிற இலக்கையும் கைவிட்டன. ஆனால் புலிகள் மட்டும் தொடர்ந்து போராட்டம் நடத்தியது. இப்போது புலிகளின் பிரதான இராணுவவிரோதி இந்திய இராணுவமே தவிர இலங்கை இராணுவம் அல்ல.

இதேவேளை தற்காலிகமாக இணைக் கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைக்கு மிகவும் அதிருப்தியான முறை யில் தேர்தல் நடத்தப்பட்டது. ரி.யு.எல்.எப் போட்டியிட மறுத்துவிட்டதால், இந்ியா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை (ஈ.பி.ஆர்.எல்.எப்) சேர்ந்த, அண்ணாமலை வரதராஜப்பெருமாளை வடக்கு - கிழக்கு மாகாணசபையின் முதலாவது முதலமைச்சராக நியமித்தது. 1989ல் பாராளுமன்ற தேர்தல்கள் நடை பெற்றபோது இந்தியாவின் கட்டாயத் தால் ரி.யு.எல்.எப்பும் போட்டியிட்டது. ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ மற்றும் ஈ.என்.டி.எல்.எப் போன்ற போராளிக் குழுக்களை ஒன்றுதிரட்டி மிதவாத ரி.யு.எல்.எப் உடன்சேர்ந்து ரி.யு.எல். எப் கட்சியின்கீழ் அதன் சின்னமான சூரியனின்கீழ் போட்டியிட வைத்தது.

அமிர்தலிங்கம், மற்றும் அவரது சொந்த வழியில் அரசியலில் நன்கு பிரபலமான அவர் மனைவி மங்கையர்க்கரசி ஆகியோர் சென்னையில் லிருந்து கொழும்புக்கு வந்தார்கள். இந்தியாவிற்கு சுயம் மேற்கொண்ட நாடுகடத்தலில் இருந்து முதலில் திரும்ப வந்தவர் முன்னாள் யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிவேலு யோகேஸ்வரன் ஆவார். இநதியாவ-ில் தனது மனைவி சரோஜினியுடன் (பின்னர் யாழ்ப்பாண மேயராக பதவியேற்ற இவரும்கூட புலிகளினால் கொல்லப்பட்டார்) வசித்து வந்த பிரபலமான யோகேஸ்வரன் இந்தோ - லங்கா ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு பல மாதங்களுக்கு முன்பே தனியாக யாழ்ப்பாணத்துக்கு திரும்பிவிட்டார். அப்படிச் செய்வதற்கு முன்பு சென்னை யில் இருந்த புலிகள் உயர்மட்டத் தலைவரிடம் அதற்கான உத்தரவை அவர் கேட்டுப் பெற்றிருந்தார்.

## யோககேஸ்வரன்

எனினும், யோகேஸ்வரன் யாழ்ப்பா ணத்துக்கு திரும்பியபிறகு கிட்டத்தட்ட புலிகளினால் வீட்டுக்காவலில் வைக் கப்பட்டதை போன்ற நிலையிலேயே இருந்தார். அவரது நகர்வுகள் கட்டுப் படுத்தப்பட்டன. குறிப்பிட்ட சில வருகை யாளர்களுக்கு மாத்திரம் அவரை பார்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்திய இராணுவத்தின் வருகை வரைக் கும் யோகேஸ்வரன் ஒரு சூழ்நிலை கைதியை போலவே அடைபட்டுக் கிடந்தார். அதன் பின் அவர் கொழும்புக்குச் சென்று பம்பலப்பிட்டி,கொத்தலாவல டெரசில் உள்ள ஒரு உறவினரின் வீட்டில் வசித்து வந்தார். அதைத் தொடர்ந்து அவரது மனைவி சரோஜினியும் அவருடன் இணைந்து கொண்டார்.

அமிர்தலிங்கம் மற்றும் யோகேஸ்வரன் தம்பதியினர்கள் கொழும்புக்கு திரும்பி யதுடன், அவர்களுக்கும் மற்றம் எனைய ரி.யு.எல்.எப் அங்கத்தவர்களும் தங்குவதற்கு பாதுகாப்பான ஒரு வீடு தேவைப்பட்டது. புலிகள் பகைமையை காட்டுவதால் அவர்களில் யாருக்கும் யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பாக தங்க முடியவில்லை. எனவே பாதுகாப்பான ஒரு வீடு அவசியமாக இருந்தது. முன்னாள் மன்னார் பாராளுமன்ற உறுப்பினரான பி. சூசைதாசன் அவர்களும் மற்றும் முன் னாள் வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினரான கலாநிதி.

(தொடரும்...)






# நெஞ்சை நிமிர்த்தி நட!

நெஞ்சை நிமிர்த்தி நட!
நேர்மை கடைப்பிடி!
கொஞ்சமும் அஞ்சாதே நீ!
குன்றென நிமிர்ந்து நில்!

அஞ்சும் நிலை ஒழி!
அறிவை வளர்த்திடு!
மிஞ்சிடும் அன்பினால் நீ
மேதினியில் சிறப்பாய்!

எட்டயபுரம் பாரதி
எடுத்துச் சொன்ன வழி
சற்றுமே மறந்திடாதே
சழக்குகள் அகற்றுவாய்!

கூனல் இல்லாத சேவல்
கூவி அழைப்பது கேள்!
நானிலம் போற்றும் உன்னை!
நாளும் நீ வாழ்க தம்பி!





# சிலேடை

கம்பரும் சோழமன்னரும் வழக்கம்போல் மாலை நேரத்தில் உலாவிக்கொண்டிருந்தனர்.

ஆற்றுநீர் காலில் படும்படியாக ஆற்றங்கரையோரமாக இருவரும் நடந்து சென்றுகொண்டிருந்தனர்.

நீர் வேட்கை கொண்ட கம்பர், அந்த ஆற்றின் தெள்ளிய நீரை அள்ளிக்குடித்தார்.

இதை வைத்து கம்பரை மட்டம் தட்ட விரும்பிய மன்னர், "கம்பரே, என் காலில் விழுந்த நீரைத்தானே குடித்தீர்?" என்று கிண்டலாகக் கேட்டார்.

அதற்குக் கம்பர், "நீரே காலில் விழுந்தால் நான் என்ன செய்வது?" என்று பதிலடி தந்தார்.

# கோடுகள் விழுந்த பாலைவனம்!

தென் அமெரிக்காவில் பெருவைச் சார்ந்த பாலைவனம் ஒன்றிருக்கிறது. அதில் ஒரு வியப்பான சேதி உள்ளது. இப்பாலைவனம் சஹாரா பாலைவனம் அளவிற்குப் பரந்துள்ளது என்றாலும், இந்தப் பாலைவனத்தில் மணலைப் பார்க்கமுடியாது. செம்மண் தரையாகவும் பழுப்புநிற நிலமாகவும்தான் காட்சியளிக்கும்.

அதுமட்டுமா? சில இடங்களில் சதுர சதுரமாயும் சில இடங்களில் முக்கோண



வடிவிலும், சில இடங்களில் இரு முக்கோணங்களை இணைத்து, நட்சத்திர வடிவமாகவும் கோடுகள் காணப்படும். அத்தனையும் இராட்சத அளவில்! காற்றிலோ, மழையிலோ இந்த உருவக் கோடுகள், இத்தனை காலமாக அழியாமலிருப்பது தான் மிகப்பெரிய விந்தை!

ஆராய்ச்சியாளர்களின் கணக்குப்படி, இவை இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட கோடுகளாகும். அக்காலத்தில் பெருவில் வாழ்ந்த நாஸ்கா என்னும் வம்சத்தினர்தான் இந்த விந்தையான கோடுகளை வரைந்திருப்பர் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். நாஸ்கா மக்கள் இத்தகைய வடிவங் களை ஏன் வரைந்தனர்? அதனால் அவர்களுக்கு என்ன பயன்?





மகிழ்ச்சி பொங்கிடச் சேர்ந்து பழகுவதும், பிரிந்திட நேரும் போது மனங்கலங்குவதும் அறிவிற் சிறந்தோர் செயலாகும்.

## பொன்மொழிகள்

## கல்வி


- கல்வி மனிதனை உருவாக்குகிறது. - இங்கிலாந்து
- கல்வியின் வேர்கள் கசப்பானவை. கனி இனியது. - கிரீஸ்
- கற்றவர்களே சுதந்திரமுடையவர்கள். - கிரீஸ்
- மாணவர்களே பிற்கால ஆசிரியர்கள். - இந்தியா
- படிப்பில்லாதவர்கள், உடையை அணிந்த கால்நடைகள். - சீனா
- கவிழ்ந்துள்ள கிண்ணத்துள் கதிரொளி பிரகாசிக்காது. - சீனா
- எழுதப்படிக்கத் தெரிந்தவருக்கு நாலு கண்கள் உண்டு. - அல்பேனியா
- செல்வத்தை உபயோகித்தால் தீர்ந்துவிடும். கல்வியை உபயோகித்தால் அதிகரிக்கும். - ஆபிரிக்கா
- குழந்தைகளுக்கு பள்ளிகள் அமைப்பது நலம். - இங்கிலாந்து
- அறிவாளர் கூட்டம், உயிருள்ள நூல் நிலையம். - அரேபியா
- கல்வி செல்வத்திற்கு அணிகலன் வறுமைக்கு அடைக்கலம். - கிரீஸ்

# நூலகம் செல்வோம்



- முதன்முதலில் பம்பாய் நூலகம் 1830-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1931-ஆம் ஆண்டு பொறியாளர் கனகசபை என்பவர்தான் முதன்முதலில் மன்னார்குடியில் நடமாடும் நூலகப் பணியைத் தொடங்கி வைத்தார்.
- 1903-ஆம் ஆண்டு தென்னிந்திய தேசிய நூலகம் இம்பீரியல் நூலகமாக ஆரம்பிக்கப்பட்டது.
- அகில இந்திய பொதுநூலாக மாநாடு 1919 நவம்பர் 14-ஆம் திகதி சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்றது.
- கவிஞர் அமீர் குஸ்ரு, கி.பி.1290-இல் கில்ஜி வம்சத்தின் ஸ்தாபகரான ஜலாலுதீன் கில்ஜியின் நூலகத்தில் நூலகராகப் பணிபுரிந்தார்.
- 1939-ஆம் ஆண்டு ஜூன் மாதம் இரண்டாம் திகதி கல்வி ஆணை 1421-இன்படி பள்ளி நூலகம் பொதுமக்களுக்கும் திறந்துவிடப்பட்டது.
- 1856-ஆம் ஆண்டு டிசம்பர் 5-ஆம் திகதி திறக்கப்பட்ட கன்னிமாரா நூலகம்தான் தமிழகத்தில் முதன்முதலில் திறக்கப்பட்ட கட்டணமில்லா நூலகமாகும்.
- தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் 1820-ஆம் ஆண்டு சரபோஜி மன்னரால் கட்டப்பட்டது.
- சென்னை - பொது நூலகச் சட்டம் 1948-ஆம் ஆண்டுதான் நிறைவேற்றப்பட்டது.
- பொது நூலகங்களுக்கு நூல் ஒப்படைக்கும் சட்டம் 1954-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது.
- தேசிய புத்தகக் கருவூலம் 1957-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது 1988-ஆம் ஆண்டிற்கான பிரிட்டிஷ் வடிவமைப்பு பரிசைப் பெற்றது.
- அக்பரின் தந்தை ஹுமாயூன் நூலகத்தின் படிக்கட்டில் தடுக்கி விழுந்துதான் மரணம் அடைந்தாராம்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.

சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 11.08.2014

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1055**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 1053

ரொ.ரிகாஷா,
மிரிஸ்வத்த, பலாங்கொடை.

பரிசுக்குரியவர்: 1053


பாராட்டுக்குரியவர்கள்

01. ம.பபிதன், 11ஆம் வட்டாரம், நெடுந்தீவு மத்தி.
02. ஈ.யாழரசி, கிருஸ்ணபுரம், வித்தியாலயம்.
03. B.நேத்தன், பேராதெனிய வீதி, கண்டி.
04. சு.யாழினி, கண்டி வீதி, சாவகச்சேரி.
05. த.சுமணன், வாகரை, மட்டக்களப்பு.
07. எம்.சாமிலி, பிரதான வீதி, பதுளை.
08. ஆர்.பிரோஸ்கான், ஜின்னாநகர், திருகோணமலை.

அதிர் இடி 49


அமைச்சராக இருந்து என்ன கிழிக்கிறீர்?, பாரம் தூக்குகிறீரா? அல்லது பாறாங்கல் உடைக்கிறீரா? என்று கேட்டான். இல்லை சுலபமான பணிதான் என்றார் அமைச்சர்.

இனி...



அற்புதன் எழுதிய

# இடி அமீன்



அடுத்த சில நிமிடங்களில் அங்கு ஒரு விபரீதம் உருவாக விருந்தது. ஏனைய அமைச்சர்களை அனுப்பி வைத்து விட்டு. பதவி விலக விரும்பிய அமைச்சரை மட்டும் நிற்குமாறு கூறியிருந்தான் அமீன்.

பதவி விலக நீர் விருப்பம் தெரிவித்த காரணம் என்ன?' என்று கேட்டான் அமீன். கேட்டுக்கொண்டே தன் நாற்காலியில் இருந்து எழுந்து குறுக்கும் நெடுக்குமாக நடைபோட்டுக் கொண்டிருந்தான்.

பதவி விலக விருப்பம் தெரிவித்த அமைச்சருக்கு மெல்ல மெல்லப் பயம் பிடித்துக்கொண்டது.

சக அமைச்சர்கள் ஏன் மௌனமாக இருந்தனர் என்பது புரியத்தொடங்கியது.

அமீன் கேட்ட கேள்விக்கு என்ன பதில் கூறுவது என்று அவர் தடுமாறிக் கொண்டிருந்தார்.

அமீன் அவரை நெருங்கி நின்றான். என்ன பதிலையே காணோமே?' என்றான். அமைச்சருக்கு நாக்கு உலர்ந்துபோனது. ''உடல்.... உடல்நிலை சரியாக இல்லை'' என்று கலப்படமில்லாத பொய் ஒன்றை உதிர்த்தான்.

அப்படியா? என்று கேட்ட அமீனின் கையில் `அது' எப்படி வந்தது என்பது அமைச்சருக்குத் திகைப்பாக இருந்தது.

தன் கையில் உள்ள கத்தியைக் கண்டு அமைச் சரின் உடம்பு முழுக்க நடுங்குவதையும் அவர் நெற்றியில் வியர்வை அரும்புவதையும் ரசித்தபடியே மேலே அவரை நெருங்கிய அமீன் உபயோகம் இல்லாத உடம்பை வைத்து என்ன செய்யப்போகிறீர்?. அமைச்சராக இருந்து என்ன கிழிக்கிறீர்?. பாரம் தூக்குகிறீரா? அல்லது பாறாங்கல் உடைக்கிறீரா? என்று கேட்டான்.

இல்லை சுலபமான பணிதான் என்றார் அமைச்சர்.

அப்படியான பதிலைத்தான் எதிர்பார்த்தான் அமீன். அவன் செய்யப்போகும் காரியத்திற்கு அவ்வாறான பதில்தான் தேவை.

சுலபமான பணிக்கே ஒத்துழைக்காத இந்த உடல் ஏன்? இதற்கு ஒரு உயிர் ஏன்? நீர் செத்துப் போகலாம் தப்பே இல்லை.

அமைச்சர் மன்றாடமுன்னரே அமீனின் கத்தி அவரது அடிவயிற்றில் செருகப்பட்டது. குடல்வரை பாய்ந்தது போலிருந்தது.

மரண அலறலோடு மடங்கி விழுந்து உயிர்விட்டார் அமைச்சர். அப்படியே அவர் அருகே அமர்ந்து அவர் கைவிரல் ஒன்றை வெட்டி எடுத்து புசிக்கத் தொடங்கினான் அமீன்.

அந்த விரலில் இருந்து வழிந்த இரத்தத்தை சப்புக் கொட்டி ருசித்தான். அவன் கடைவாய் ஓரமாக இரத்தம் வழிந்தது.

காணாமல் போனோர் பட்டியலில் அந்த அமைச்சரின் பெயரையும் சேர்த்துவிட்டான்.

உகண்டாவில் காணாமல் போவோர் எண்ணிக்கை ஏறிக் கொண்டு போகிறது. மனித் உரிமைகள் காற்றில் பறக்கிறது. சர்வாதிகார ஆட்சி நடக்கிறது. உகண்டா மக்கள் அமீனால் சிறை வைக்கப்பட்டுள்ளனர் என்று உலகச் செய்திகளில் கூறப்பட்டன.

உடனடியாக அமீன் மறுப்பு வெளியிட்டான். உகண்டா வானொலி அமீனின் மறுப்பை அவனது குரலில் வெளியிட்டது.

காணாமல் போனோர் பற்றி விசாரிக்க பிரதம நீதியரசர் தலைமையில் விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்படும். கடந்த ஆட்சிக் காலத்தில் காணாமல்போனோரைப் பற்றி இப்போதுதான் தகவல்கள் வெளியாகின்றன. அதனை வைத்து என் ஆட்சியில் அநியாயம் நடப்பதாக கூறுவது அப்பட்டமான கட்டுக்கதை.

மனித நீதியை மதித்து ஆட்சி செய்துவருகிறேன். என் ஆட்சியில் தப்பித்தவறிதவறுகள் நடத்திருந்தால் கண்டுபிடிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தண்டிப்போம் என் ஆட்சியில் யாரும் காணாமல் போயிருந்தால் மக்கள் உடனடியாக தங்கள் சொந்த விவரங்களுடன் எனக்கு அறிவிக்கவேண்டும். நான் தக்க நடவடிக்கை எடுப்பேன் என்று தேனொழுகப் பேசினான்.

விசாரணைக் குழுத் தலைவராக நியமிக்கலாம் என்று தனது புலனாய்வு பிரிவுத் தலைவருடன் கலந்தாலோசித்தான் அமீன்.

நாம் என்ன நினைக்கிறோம் என்று தெரிந்து அதற்கேற்ப அறிக்கை தரக்கூடிய நீதிபதிகளும் இருக்கிறார்கள் என்றார் புலனாய்வுப் பிரிவு தலைவர்.

நியாயமாக விசாரிப்பது போல பாவ்லா காட்டவேண்டும். அரசுமீதும் ஒன்று. இரண்டு கண்டனத்தை ஒரு பெயருக்குக்கு கூறிவிட்டு. அமீனின் கை சுத்தமானது என்று உரத்துச் சொல்லிவிட வேண்டும். அப்படியான ஒருவர்தான் தேவை என்றான் அமீன்.

அவ்வறானான ஒருவரைத் தெரிவுசெய்து விசாரணைக் குழு அமைத்து விசாரிப்பு நடத்தினார்கள். சாட்சியங்கள் பதிவு செய்யப்படுவதாக செய்திகளில் இடம்பெறச் செய்தனர்.

அமீனோ. அவன் புலனாய்வுத் துறையோ எதிர்பாராத திருப்பம் ஒன்று ஏற்பட்டது.

விசாரணை நடத்திய பிரதம நீதியசரருக்கு சாட்சியங்களைக் கேட்கக் கேட்க மனம் நெகிழ்ந்து போய்விட்டது. நடந்திருப்பது மிகப்பெரிய அநியாயம். ஒருசில அதிகாரிகளையாவது தண்டிக்க வேண்டும். அதற்காக உத்தரவாதம் தந்தால்தான் உங்களுக்கு சார்பாக அறிக்கை தருவேன் என்று கூறிவிட்டார் பிரதம நீதியரசர்.

(தொடரும்)

---

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும்
வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே
ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 584

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | | 11 | |
| 13 | | 15 | 16 | 17 | 18 |
| | 20 | | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | | 30 |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 582 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இ 1 | ரு 2 | கோ 3 | டு 4 | க 5 | ள் 6 |
| ல 7 | ங் 8 | கா 9 | வி 10 | த் 11 | வு 12 |
| ண 13 | ம 14 | ம் 15 | | ன் 17 | க 18 |
| ச 19 | கு 20 | ன 21 | ம் 22 | | |
| ட் 25 | | | | தி 29 | பீ 30 |
| ம் 31 | ய 32 | னி 33 | டா 34 | ட் 35 | டை 36 |

### இடமிருந்து வலம்

01. மனிதனுக்குள் ஏற்கனவே மறைந்திருக்கும் ------ தன்மையை வெளிப்படுத்துவதே கல்வி.
07. கோரைப் புல் வகை. (குழம்பியுள்ளது)
15. 1000 காலடிகள் கொண்ட அளவு. (திரும்பியுள்ளது)
22. வீதம். தகுதி. (குழம்பியுள்ளது)
25. இன்னா நாற்பது என்னும் நூலை எழுதிய புலவர். (குழம்பியுள்ளது)
31. இது ஒரு மூலிகைச் செடி. இரவிலும் பகலிலும் ஒட்சிசன் வாயுவை வெளியேற்றும்.
35. ஒரு நிறம். யானை. (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01. தூய்மை. துணைமை. துணிவுடமை இம்மூன்றின் வாய்மை வழியுரைப்பான் ---- என்றார் வள்ளுவர்.
02. இராசதானி. (திரும்பியுள்ளது)
03. தடவுதல். பொருதல்.
05. ஆமணக்கு. சமயம் (குழம்பியுள்ளது)
16. அறியாமை. பைத்தியம்.(திரும்பியுள்ளது)
18. உயர்ச்சி. எழுச்சி. (குழம்பியுள்ளது)
20. உவர்த்தரை. (குழம்பியுள்ளது)
25. வெடிப்பு. மலைப்பிளப்பு.
27. குறைந்த பொருள். (திரும்பியுள்ளது)

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **11.08.2014** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 584
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 582 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி.**

யோ. சிந்து, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. கே.சாவ்லா, தும்பளை, பருத்தித்துறை.
02. சு.காந்தினி, பிரதான வீதி, எட்டியாந்தோட்டை.
03. த.சங்கவி, குருநகர், யாழ்ப்பாணம்.
04. எம்.கந்தசாமி, பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
05. எவ்.நு:மான், மத்திய வீதி, காத்தான்குடி -03.
06. எவ்.ஹமீம், வாகரை, மட்டக்களப்பு.
07. த.பவதாரணி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
08. அ.மயில்வாகனம், மாசார், பளை.
09. க.ஜெயபிரதாப், கண்டி வீதி, சாவகச்சேரி.

# மொட்டையடித்தார் சுரேஷ்கோபி...!

மொட்டை போட்டு நடிப்பதென்பது உலக சினிமாவிலிருந்து உள்ளூர் சினிமா வரை பிரபலமான ஒன்று. மொட்டை போட்டு நடிப்பதை நம்முடைய கதாநாயகர்கள் மிகப்பெரிய விடயமாகப் பேசுவார்கள். ரசிகர்களும் தம்முடைய மனங்கவர்ந்த நாயகர்கள் எப்படியெல்லாம் மொட்டைபோட்டு நடிப்பார்களோ அதுபோல மொட்டை போட்டுக்கொள்வதுண்டு. கதாநாயகர்கள் மொட்டை போடுவதாக இருந்தாலும்கூட அது பெரும்பாலும் இயல்பான பாத்திரமாக இல்லாமல், வில்லத்தனம் பொருந்திய பாத்திரமாகவே இருக்கிறது.

அல்லது மனநலம் பாதித்த பாத்திரத்துக்காக அவ்வாறு மொட்டைபோட்டு நடித்தார்கள். மொட்டை போட்டு நடித்ததை என்னதான் நாயகர்கள் பெருமையாக பேசினாலும் அவர்களுக்கு அது அடுத்தகட்ட முயற்சி களுக்கு அச்சாணியாக இருந்திருக்கிறது. தமிழில் ரஜினி, கமல் உட்பட உச்ச நட்சத்திரங்கள் தங்களது கேரக்டருக்காக மொட்டை அடித்து பார்த்திருப்பீர்கள். ஆனால் மலையாள முன்னணி நடிகர்களான மம்முட்டி, மோகன்லால், சுரேஷ்கோபி இவர்களில் யாராவது தங்களது படங்களில் மொட்டையடித்து நடித்ததாக பார்த்திருக்கிறீர்களா...? அதுதான் இல்லை.

இந்நிலையில் அக்சன் நாயகன் சுரேஷ் கோபி முதன்முறையாக மாலூட்டி சாபு என்கிற படத்திற்காக மொட்டை அடித்திருக்கிறார். இந்தப் படத்தை பிரசாந்த் மாம்புல்லி இயக்குகிறார். இதுவரை அக்சன் வேடங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த சுரேஷ் கோபி இதில் காமெடி வேடம் ஏற்றிருக்கிறார்.





புதியதோர் உலகம் செய்வோம்

தமிழ் மற்றும் தெ
திரையுலகை விட்டுவிட்டு தற்போது இந்த
முக்கியத்துவம் கொடுத்து நடித்துவருகிறார் இலியானா. இதற்காக அவர்
வீட்டை காலி செய்துவிட்டு மும்பையில் குடியேறியுள்ளார்.

இந்நிலையில் இலியானா, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த தொழில
ஆண்ட்ரூ நீபோன் என்பவரை காதலித்துவருவதாக சமீபகாலமாக கிசுகிசு
பரவி வருகின்றன. இருவரும் ஜோடிபோட்டு பொது இடங்களில் வலம்வரு
கூறப்படுகிறது. ஆனால் இலியானா இது குறித்து வெளிப்படையாக எது
கூறியது கிடையாது.

இந்நிலையில் இலியானா தனது பேஸ்புக் பக்கத்தில் இரகசி
காதலனுடன் இருக்கும் புகைப்படத்தை வெளியிட்டு பரபரப்பை
ஏற்படுத்தியிருக்கிறார். அண்மையில் ஆண்ட்ரூ நீபோன் தன
நாளை கொண்டாடி இருக்கிறார். இதையடுத்து அவருக்கு
நாள் வாழ்த்துக்கூறிய இலியானா, தான் ஆண்ட்ரூ
நெருக்கமாக இருக்கும் புகைப்படம்
தங்களது இரகசியக் காதலை அ டு

## சூர்யாவுக்கு த
## கதையில் க

சூர்யா நடிப்பில் உருவாகியுள்ள படம் 'அ
இப்படத்தில் இவருக்கு ஜோடியாக சமந்தா நடிக்க
பரோட்டா சூரி, வித்யூத் ஜாம்வால் உள்ளிட்ட பலர்
உள்ளனர். லிங்குசாமியின் திருப்பதி பிரதர்ஸ் நிறுவ
யு.டிவி நிறுவனம் வெளியிடுகிறது. மும்பையில் உள்ள
நடைபெறுவதுபோல இப்படத்தின் கதையினை வடிவமைத்
இயக்குனர் லிங்குசாமி. யுவன் இசையமைக்க, சந்தோஷ்
ஒளிப்பதிவை கவனிக்கிறார். இப்படத்தின் டிஸர் சமீபத்தி
பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

அஞ்சான் திரைப்படம் வரும் ஒகஸ்ட் மாதம் 15
வர இருக்கிறது. இந்நிலையில், இப்படத்தின் ப மற்ற
பத்திரிகையாளர்களுக்காக பிரத்தியேகமாக திரையிட்டு
அப்போது நடிகர் சூர்யாவிடம் ரசிகர்கள் சில கேள்விகளை
அதில் ஒன்று "லிங்குசாமி உருவாக்கிய நான்காவது கதை
நீங்கள் தேர்வு செய்தீர்களாமே? அப்படியானால் மத்த எ
சரியில்லையா?" எனக் கேட்கப்பட்டது. அதற்கு பதிலளி
"எல்லா கதையுமே நல்லாதான் இருந்துச்சு. ஆனால்,
த்னிப்பட்ட திறமைகளை வெளிப்படுவதற்கான ஸ்கோ
கதையாவும், எனக்கு செட்டாகிற மாதிரியும் 'அஞ்சா
இருந்ததாலதான் அதைத் தேர்வு செஞ்சேன். இன்னு
சொல்லப்போனால் அந்த மூன்று கதையில
ஒன்றான 'எண்ணி ஏழு நாள்'
படத்துல தான் இப்போ கார்த்தி
நடிக்கிறாரு"
என்று கூறினார்.







விலாசம்



மெட்ராஸ்

...தமிழ் மற்றும் தெலுங்கு ...டு தற்போது இந்திக்கு அதிக ... இதற்காக அவர் ஐதராபாத் ...ார்.

... சேர்ந்த தொழிலதிபர் ...காலமாக கிசுகிசுக்கள் ...ங்களில் வலம்வருவதாகவும் ...ளிப்படையாக எதுவும்

...பக்கத்தில் இரகசியக் ...ரியிட்டு பரபரப்பை ...ட்ரு நீபோன் தனது பிறந்த ...யடுத்து அவருக்கு பிறந்த ... தான் ஆண்ட்ரு நீபோனுடன் ...கப்படம் ... ...யிட்டு ...தலை ... ...டுத்... ...ள்ளார்.

## ...க்கு தயாரான ...யில் கார்த்தி!

...கியுள்ள படம் 'அஞ்சான'. ...க சமந்தா நடிக்கிறார். மற்றும் ... உள்ளிட்ட பலர் நடித்து ... பிரதர்ஸ் நிறுவனம் தயாரிக்க, ...பையில் உள்ள அந்தேரி பகுதியில் ...னை வடிவமைத்து இருக்கிறார் ...மக்க, சந்தோஷ் சிவன் ... டீஸர் சமீபத்தில் வெளியாகி

...ஸ்ட் மாதம் 15 திகதி திரைக்கு ...தின் ப... மற்றும் ...ரைலர் ...ாக திரையிட்டு கா...பிக்கப்பட்டது. ... சில கேள்விகளைக் கேட்டனர். ... நான்காவது கதையைத்தான் ...யானால் மத்த ஸ்கிரிப்ட்டுகள் ... அதற்கு பதிலளித்த சூர்யா, ...துச்சு. ஆனால், என்னுடைய ...யதற்கான ஸ்கோப் உள்ள ...திரியும் 'அஞ்சான்' ...செஞ்சேன். இன்னும் ... கதையில

...த்தி


# நாகேஷின் கல்கண்டு...!

மறைந்த பழம்பெரும் நடிகர் நாகேஷின் பேரனும், நடிகர் ஆனந்த் பாபுவின் மகனுமான கஜேஷ் நாயகனாக அறிமுகமாகிறார். ராஜரத்தினம் பிலிம்ஸ் நிறுவனம் அடுத்ததாக தயாரிக்கும் படம் 'கல்கண்டு'. இந்த படத்தில் தான் கஜேஷ் நாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக டிம்பிள் சோப்டே அறிமுகமாகிறார். இவர் மஹாராஷ்டிரா மாநிலத்தை சேர்ந்தவர். இவர் வீரசிவாஜியின் படைத்தளபதிகளாக பணியாற்றிய பரம்பரையை சேர்ந்தவராம்.

மற்றும் மனோபாலா, மயில்சாமி, சாமிநாதன், 'டாடி ஒரு டவுட்' செந்தில், முத்துராமன், டி.பி.கஜேந்திரன், ஸ்ரீரஞ்சனி, ஜெனிபர் ஆகியோர் நடிக்கிறார்கள். இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி ஏ.எம்.நந்தகுமார் இயக்குகிறார். இவர் விஜயகாந்த் நடித்த 'தென்னவன்', பிரஷாந்த் நடித்த 'ஜாம்பவான்' போன்ற படங்களை இயக்கியவர். அத்துடன் ஜப்பான் மொழியில் அங்குள்ள சூப்பர் ஸ்டாரான நம்ரா, நேகாதுபியா, சைனா கதாநாயகியாக கெட்டி ஆகியோர் நடித்து அமோக வெற்றிபெற்ற 'டான்சிங் வித் நிஞ்ஜா' என்ற படத்தையும் இயக்கி உள்ளார். கல்கண்டு படம் குறித்து பேசிய நந்தகுமார், "கல்கண்டு எந்த வடிவத்தில் இருந்தாலும் சுவையில் ஒரு சதவீதம்கூட மாற்றம் இருக்காது. அது மாதிரி திரைக்கதை வடிவத்தில் கல்கண்டு படமும் சுவையானதாக இருக்கும். படப்பிடிப்பு முடிவடையும் நிலையில் உள்ளது. சென்னை, நாகை, காரைக்குடி போன்ற இடங்களில் படப்பிடிப்பு நடைபெற்றிருக்கிறது. எல்லா தரப்பு மக்களும் கல்கண்டை ரசிப்பார்கள்." என்று கூறினார்.

# வேலையில்லா பட்டதாரி

விமர்சனம்



இன்ஜினீயரிங் படித்துவிட்டு அதிக சம்பளம் வந்தாலும் வேலைக்கு போகாமல் படித்த படிப்புக்கு ஏற்ற மாதிரி கட்டுமான வேலைக்காக காத்திருக்கிறார் தனுஷ் (ரகுவரன்). மாறாக அவரின் தம்பி கைநிறைய சம்பாதிக்கிறார். தனுஷோ தண்டச் சோறாக இருக்க, தந்தை சமுத்திரகனியிடம் திட்டுவாங்குவது அவரது அன்றாட வேலை. ஆனால் தாய் சரண்யாவோ, தனுஷ்மீது பாசம் காட்டிவருகிறார். இந்நிலையில் தனுஷின் பக்கத்து வீட்டில் குடியேறுகிறார் அமலாபால்(ஷாலினி). படித்த வேலைக்குத்தான் போவேன் என்ற இலட்சியத்துதோடு இருக்கும் தனுஷிற்கு நடக்கும் ஒரே நல்ல காரியம் எது என்றால் அது அமலாபால் நட்பு மட்டுமே. இந்த நட்புக்கூட நாளடைவில் காதலாக மாறுகிறது.

திடீரென ஒரு நாள் தனுஷின் அம்மா சரண்யா பொன்வண்ணன் மாரடைப்பில் இறந்துவிட, அவரின் உடலுறுப்புக்களைப் பொருத்தி வாழ்க்கை பெறுகிறார் சுரபி. அதனால் தனுஷிற்கு சுரபியின் அப்பா வைத்திருக்கும் கம்பெனியில் இன்ஜினியர் வேலை கிடைக்கிறது: கம்பெனியில் சேர்ந்து நல்ல பெயரெடுக்கும் தனுஷிடம் அரசாங்க சம்பந்தப்பட்ட புராஜெக்ட் ஒன்றை தனியாகப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது.

தன் அப்பாவிடமிருந்து பொறுப்பை வாங்கி கம்பெனியை நடத்த ஆரம்பித்த முதல் புராஜெக்ட்டிலேயே தனுீடம் தோல்வி அடைவதால், அவரை பழிவாங்க நினைக்கிறார் போட்டி கம்பெனியின் புது எம்.டி. அமிதேஷ். இறுதியில் இந்த அரசாங்க டெண்டரை முடித்துக் கொடுத்தாரா? என்பதை சுவாரஷ்யமாகவும், விறுவிறுப்பாகவும் கூறியிருப்பதே படத்தின் மீதிக்கதை.

படத்தின் முதல் பாதி முழுக்க முழுக்க சுவாரஷ்யமாகவும், விறுவிறுப்பாகவும் செல்கிறது. ஜாலியாக பயணித்துக்கொண்டிருந்த கதையில் திடீர் திருப்பமாக சரண்யா பொன்வண்ணனின் மரணத்தோடு முடிகிறது 'இடைவேளை'. வேலையில்லாமல் திரியும் நாயகனுக்கு ஒரு வேலை கிடைத்து அதில் எப்படி தன் சவாலை முடிக்கிறார் என்பதே படத்தின் இரண்டாம் பாதியாக கூறியிருக்கிறார் இயக்குனர் வேல்ராஜ்.

வேலை இல்லாமல் வீட்டில் தண்டச்சோறு சாப்பிடும்போது தந்தை திட்டுவதை பொருட்படுத்தாத இளைஞனாகவும், என்னதான் தம்பிமீது ஒருவித வெறுப்பு இருந்தாலும் மூன்றாவது நபர் கைவைத்ததும் பொங்கி எழும் அண்ணாகவும், கிடைத்த வேலையை நாசமாக்க நினைக்கும் வில்லனை எதிர்பதிலும் அசத்துகிறார் நடிப்பில் தேசிய விருது நாயகன்.

பக்கத்து வீட்டு பெண் கதாபாத்திரத்திற்கு பக்காவாக பொருந்தியிருக்கும் அமலாபால் அவரது கதாபாத்திரத்தில் அற்புதமாக நடித்துள்ளார், சின்ன கதாபாத்திரமாக இருந்தாலும் கதையில் மாற்றத்தை கொண்டு வரும் சுரபியின் கதாபாத்திரமும் கச்சிதம்.

ஒளிப்பதிவு இந்த படத்தின் இயக்குனரான வேல்ராஜ்தான். படத்தையும் இயக்கி அதே சமயத்தில் காட்சிகளையும் கண்ணில் கொண்டு அதை திரையில் காட்டுவது எளிதல்ல. வேலையில்லா பட்டதாரி தனுஷை ஒருபடி மேலே உயர்த்திக்காட்டுவது உறுதி. மொத்தத்தில் வேலையில்லா பட்டதாரி வெற்றிப் பட்டதாரி.



எங்க காட்டுல மழை

# தேன் கிண்ணம்

## ஈடாகுமோ இப்பயணமும்!!

பல இலட்சங்களை செலவு செய்து
புத்தம் புதிய காரிலே
சாளரங்கள் அடைத்து
இயற்கையை மறைத்து
செயற்கையை ரசித்து
மனதில் நிறைந்த கவலையோடு
செய்யும் பிரயாணம்!

ஐம்பது ரூபாய் நோட்டை கொடுத்து
அனுமதிச் சீட்டை பெற்று
ஜன்னலோரமாய் ஆசனம் அமர்ந்து
சாளரத்தினூடே
இயற்கையை ரசித்து
தென்றலில் மேனி பூரித்து
மனமும் மணம் கமழ்ந்திட
உள்ளக் கவலைகள் மறந்து
பேரூந்திலே புரியும்
பிரயாணத்திற்கு ஈடாகுமோ
இவ் வவனியிலே!!

எம்.யூ.அல்சாத்,
ஓட்டமாவடி.



## அவளும் நானும்

பேரூந்து பயணத்துக்காய் புறப்பட்டு போனேன்
சாலை ஓரமாய் மாலை நேரமது
பேரூந்து போகும் பெரும் வழி ஓரம்
நிழல் தரும் நாவல் மரத்தடியில்
நின்று கொண்டிருந்தாள்
என்னவளாகுமுன் அந்த பெண் இவள்.

எண்ணிப்போன பயணம் எழிலானது
என்றும் காணாத அவளை கண்டு
பொசுக்கென்று பூத்தது காதல்
பூவொன்று – என்னிதயத்தில்!
வண்டாக வந்தவள் என்னை
தீண்டத்தானோ – என்னவோ!

காந்த விழி பார்வையின் கள்ளத்தனம்
எப்போதும் எழிலை ஈர்த்து எடுப்பதுதான்.
என் எதிரேனின்ற அந்த பெண்ணவளை
போர் தொடுக்க எனது பார்வைகளும் – முனைந்தது.

கட்டறைக்குள் இருந்த என் இதயம்
கலவர பூமியானது அவளைக் கண்டபின் – ஆதலால்
நிகழ்ந்து முடிந்த பயணமோ நினைவில்லை
நெடுஞ்சாலையோரம் தென்பட்டவளின் நினைவுகள்
நிரம்பிக்கிடக்கிறது – நெஞ்சுக்குள்!

அன்று பார்த்தவளை இனியென்று பார்ப்பேனென்று
ஏப்பமிட்டு ஏங்கியது எனக்குள்ளான
எண்ணங்கள் – இருந்தும்
என் உணர்வுகளில் ஓர்
பிரளயம் புதிதானது
அந்த இளயவள் இந்த
இளையவனுக்கு அன்பானவள்
ஆவாளா என்று?

மீண்டும் அவளை காண முற்பட்ட[illegible]
எனது ஊருக்கு எதிர் ஊரில் – அ[illegible]தூரில்
தரித்திருப்பவளை என் திசை திரு[illegible]
திண்டாடினேன் – தினமும்
என் கருணைவேண்டுதல் கடவுளு[illegible]
காணிக்கையாகி போனதால்...

வைராக்கியம் கொண்ட வஞ்சி மனமு[illegible]
என் அன்புக் காதலியானாள் சகியவள்
சரித்திர காதலால் பிரிந்திரா காதலர்க[illegible]கிப்போனோம்...
அவளும்! நானும்!



M.A.நிஜாம், புல்மோட்டை – 03

## உயிர் உள்ளவரை



உன்னை திருடி என
சொல்ல இன்பமாக இருக்கிறது
ஏனென்றால் – நீ
திருடியது என் இதயத்தை
என்பதால்.
திருப்பி தந்துவிடாதே – அதை
இனியும் ஏற்கும் இதயம்
என்னிடம் இல்லை என்பதால்.
சுவாசிக்கக்கூட மூச்சில்லை
என்னிடம் என்றாலும்
பரவாயில்லை என்
இதயம் தான் உனக்குள்ளே
சுவாசிக்கின்றதே – அதனால்
நான் இறந்தாலும்
கவலை இல்லை எனக்கு
நான்தான் உனக்குள்ளே
வாழ்ந்து கொண்டு இருக்கின்றேன்
என்பதால் – ஆனால்
உன் உயிர் உன்னிடம்
உள்ளவரை மட்டும்தான்,
என் காதலியே.

இளம்பிறை யோகன்,
புத்தளம்.

## இன்றைய காதலின் தாகம்

இன்றைய காதல்
இச்சைத் தாகம்
பக்குவக் காதல்
பாரீலே ஏது?

விஞ்ஞான உலகில்
கஞ்சாக் காதல்
கண்டதும் காதலால்
கலங்குதே பூமி.

தென்றலும் கூட
தேகம் தொட
நாணம் கொள்கிறது
தெருவிலும் இன்று
காமம் கொள்ளும்
மோகக்காதல்!

கூடாத சேர்க்கையில்
கூடும் கூட்டம்
காதல் பந்தத்தின்
காலத்தின் கோலமிது.

காதல் எனும்
வெண்மைச் சொல்லால்
காட்டுக்குள்ளும்
களியாட்டக் கூட்டம்
வாடகை அறைகளில்
விபச்சார மாற்றம்.

இன்றைய காதலின்
இன்றைய நாற்றம்
நாளைய காதலின்
மாற்றத்தை நானறியேன்
நாற்றத்தை யாரறிவார்?



மிஹிந்தலை ஏ.பாரிஸ்
கட்டுக்கெலியாவ.

## விவேகம் இருக்குமிடத்தில்...



அறிவு தரும் விவேகம்.

வெள்ளம் வராது
வந்தால் பார்ப்போம்
என்று சொல்லி
காலத்தைக் காலால்
உதைப்பது எல்லாம்
காட்டாற்று வெள்ளத்தால்
காவு போன
முயற்கதைபோல்
மானுட ஜாதிக்கும்
சாலவும் பொருந்திடுமே.

வேண்டியதைச் செய்திடும்
சகலகலா வல்லவர்க்கும்
முடிந்ததைப் புரிந்துவிடும்
மேதை அறிவாளிக்கும்
முரண்பாடோ கிட்டடியில்
வெற்றியும் கூடும்
தோல்வியும் சேரும்
வெற்றியை அடக்குவதும்
தோல்வியைத் தளர்த்துவதும்
விவேகத்தின் நம்பிக்கையே.

விவேத்தின் குடியிருப்பில்
ஒரு நாளும்
எட்டிக்கூடப் பார்க்காது
வெட்கித்துத் தலைகுனிவு.

விவேகத்தின்
அங்குசங்களுக்கு
அண்மையில்
நம்பிக்கைக்கும்
அவற்றின் ஈனத்துக்கும்
நல்ல வெளிச்சம்.

சூழலின் நிலைமையை
தெளிவாய் ஊகித்தால்
யானையையும்
கட்டுப்படுத்தும்

'கல்வியூர்க் கவிராயர்'

# தொடர்கிறது கொண்டாட்டம்



6ஆவது சம்பியன்ஸ் லீக் இருபதுக்கு இருபது கிரிக்கெட் சுற்றுப்போட்டி செப்ரெம்பர் 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்திய நகரங்களான ஹைதராபாத், மொஹாலி, பெங்களூர், ராய்பூர் ஆகிய நகரங்களில் இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இரண்டு பிரிவாக போட்டிகளில் கலந்து கொள்ளும் அணிகள் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள தத்தமது அணிகளுடன் ஒரு முறை மோதும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடம்பிடிக்கும் அணிகள் அரையிறுதிப் போட்டிகளுக்கு முன்னேறும்.



**'A' பிரிவு**

சென்னை சுப்பர் கிங்ஸ்.
கொல்கொத்தா நைட்ரைடர்ஸ்.
டொல்பின்ஸ். (தெ.ஆ)
பேர்த் ஸ்கோச்சர்ஸ் (ஆஸி. பிக்.பேஸ்)
தகுதிச் சுற்றில் வெற்றிபெறும் அணி.

**'B' பிரிவு**

ஹோபாட் ஹரிகேன்ஸ்.
(பிக்பேஷ் 2ஆம் இட அணி)
மே.இந்திய இருபதுக்கு இருபது வென்ற அணி.
கிங்ஸ் லெவன் பஞ்சாப்.
கேப் கோப்ராஸ் (தெ.ஆபிரிக்கா)
தகுதிச் சுற்றில் வெற்றிபெறும் அணி.

**தகுதிச் சுற்றில் போட்டியிடும் அணிகள்**

மும்பை இன்டியன்ஸ்.
நோர்த் நைட்ஸ். (நியூசிலந்து)
சதேர்ண் எக்ஸ்பிரஸ். (இலங்கை)
லாஹூர் லயன்ஸ். (பாகிஸ்தான்)
(இவற்றுள் இரண்டு அணிகள் முன் குறிப்பிட்ட இரண்டு பிரிவுகளில் இணைந்துகொள்ளும்)

# நல்ல பதில் தேவை

இந்திய - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 95 ஓட்டங்களால் தோல்விகண்டது. மட்டுமன்றி இந்திய அணி 26 வருடங்களின் பின் பெற்ற மகத்தான வெற்றி என்றும் பதிவை ஏற்படுத்திவிட்டது. இதன் காரணமாக உடனடியாகத் தாக்குதலுக்கு உள்ளாகி இருப்பவர் இங்கிலாந்து டெஸ்ட் அணித் தலைவர் அலிஸ்ரர் குக்.

ஏற்கனவே முன்னாள் இங்கிலாந்து அணித் தலைவர்கள் நஸார் உசேன், மைக்கல் வோன் இருவரும் இவரது தலைமைக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். உண்மையில் அலிஸ்ரர் குக்குக்கு இதுபோதாத காலம்தான். ஏனெனில் இந்தியாவுடனான இரண்டாவது டெஸ்ட் தோல்வி இங்கிலாந்தின் பத்தாவது வெற்றியைப் பதிவு செய்யமுடியாது ஆட்டமாக அமைந்தது. அதோடு கடந்த இருபத்தொரு வருடத்தில் இத்தகைய நிலைமை இப்போதுதான்



ஏற்பட்டுள்ளது.

மேலும் 29 வயதாகும் அலிஸ்ரர் குக் கடந்த இருபத்தொன்பது இனிங்சுகளில் ஒரு சதம் கூடப்போடவில்லை. அதோடு கடந்த ஒன்பது டெஸ்ட் போட்டிகளில் இவர் பெற்ற மொத்த ஓட்டங்கள் 129 மட்டுமே.

இந்த நிலையில் இயன் மோர்கனை அணித் தலைவராக்க வேண்டும் என்ற ஒரு கருத்தும் முன்வைக்கப்படுகிறது. இதேவேளை அலிஸ்ரர் குக்குக்கு இனி சிறந்த கிரிக்கெட் தகைமை வரவே வராதென்று ஒரு கோடு போட்டுள்ளார். இங்கிலாந்து சார்ந்தவர்கள் குறைகளை முன்வைக்கும்போது அது தாயக நலன்சார்ந்ததென்று எடுத்துக்கொள்ளலாம். ஆனால் ரிக்கி பொன்ரிங்கின் கருத்து 'ஆஷஸ்' போட்டிகளால் ஏற்படும் கோபம் என்றே கருதத் தோன்றுகிறது. இந்திய - இங்கிலாந்து டெஸ்ட் தொடர் 5 போட்டிகளைக் கொண்டதாகும். எனவே அலிஸ்ரர் குறிப்பாக ரிக்கி பொன்ரிங்கின் அவலட்சணக் கருத்துக்கு பதிலடி கொடுப்பார் என எதிர்பார்க்கலாம்.

# மாற்றமே மாறாதது



**தினேஸ்** சந்திமாலுக்கு இது மிகவும் போதாத காலம் என்றே கூறவேண்டும். அணித்தலைமை என்ற பெரும் பதவியில் இருந்து விலக்கப்பட்ட சந்திமால், டெஸ்ட் அணியில் விக்கெட் காப்பாளராக்க களமிறக்கப்பட்டார். ஆனால் அவர் துடுப்பாட்டத்திலே விக்கெட் சார்பிலோ எந்த வகை வீச்சையும் காட்டவில்லை. இதன்காரணமாக தெரிவாளர்கள் மிகவும் அதிருப்தியடைந்துள்ளார்கள் போலத் தெரிகிறது.

குமார் சங்கக்காரவும் இன்றோ, நாளையோ ஓய்வு பெறும் நிலையில் பிரஸன்ன ஜயவர்த்தனவையும் உபாதைகளுக்கு உள்ளாகியுள்ள நிலையில் சந்திமாலை நம்பிப் பயனில்லை என்று நினைக்கிறார்கள் போலத் தெரிகிறது. இதனால் ஒரு அதிரடி நடவடிக்கையை எடுத்துள்ளார்.

பின் அதாவது இங்கிலாந்தில் சுற்றுப் பயணம்செய்யும் இலங்கை அணியின் வீரர் 21 வயதான நிரோஷன் டிக்வெல்ல உடனடியாக இலங்கை வரவழைக்கப்பட்டு டெஸ்ட் விக்கெட் காப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்கால இலங்கை அணியின் நிரந்தர விக்கெட் காப்பாளர் என்ற ஒரு எண்ணத்திலேயே இவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கண்டி திரித்துவக் கல்லூரிப் பழைய மாணவரான இவர் கல்லூரியின் அணித் தலைவராக இருந்தவர். அதன்பின்னர் கொழும்பு என்.சி.சி. கழகத்தில், அந்தக் கழக அணியின் நிரந்தர விக்கெட் காப்பாளராக இருந்துவருகிறார். இலங்கையின் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்கார கண்டி திரித்துவக் கல்லூரி பழைய மாணவர். என்.சி.சி கழக விளையாட்டு வீரர் அதேபோல நிரோஷனுக்கும் அமைந்துள்ளது.

சந்திமாலுக்கு ஏற்பட்ட நிலை கவலைக்குரியதுதான். இருந்தாலும் A அணியில் விளையாடிவருவதால் தேசிய அணி வாய்ப்பு அவருக்கு இன்னும் பிரகாசமாகவே இருக்கும். அதேவேளை சில மாற்றங்கள் தவிர்க்கப்பட முடியாதவையும்தான்.

# உயர்தர வர்த்தகம்


**உலகக்** கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் முடிவடைந்ததும் ஐரோப்பிய உதைபந்தாட்டக் கழகங்கள் என்ன செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டதே. அவை வேகமாக நடைபெற்றுவருகின்றன. லீவர்பூல் அணியில் இருந்து லூயிஸ் சுவாரெஸ் 128 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு பார்சலோனா அணிக்குக் கைமாறியுள்ளார்.

அதேபோல குறிப்பிடத்தக்க இன்னொரு மாற்றம் கொலம்பியாவின் ஜேம்ஸ் றொட்கிகஸ், மொனோகே அணிக்கு விளையாடிக் கொண்டிருந்த இவர் 108 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு றியல் மெட்ரிட் அணிக்கு மாறுகிறார். மொனோக்கோ அணி இதுபற்றிக் கூறுகையில், உதைபந்தாட்டத்தில் மிகப் பெரிய பரிமாற்றம் என்று கூறியுள்ளது. அதே வேளை உலகின் மிகப்



பிரபல்யமான அணிக்கு ஒப்பந்தமாவது எனது கனவு, அது நிறைவேறுகிறது என்று கூறியுள்ளார். இன்னொரு புறம் பிரான்ஸ் மற்றும் மென்செஸ்ரர் யுனைட்டட் அணி வீரர் பட்ரிஸ் ஈவ்ரா ஜுவான்டஸ் அணிக்கு மாறவுள்ளதாக செய்திகள் வருகின்றன.

இதேவேளை 2013-2014 உதைபந்தாட்டப் பருவ காலத்தில் மிகவும் நொந்துபோன அணி மென்செஸ்ரர் யுனைட்டட் அணி. ஆனால் இம்முறை அவர்கள் விட்டுக்கொடுப்பதாக இல்லை.



ஜேர்மனியின் ஹமல்ஸ், பெல்ஜியத்தின் வேர்மூலன், நெதர்லாந்தின் டேலி பிறைண்ட், ஸ்ரீபன் டீ விராஜ், கெவின் ஸ்ரூட்மன் ஆகியோரின் ஒரு சிலரைத் தம்மோடு இணைத்துக் கொள்ளலாம் என்று எதிர்பார்ப்பதாக மென்செஸ்ரர் யுனைட்டட் அணி கூறியுள்ளது.

வீரர் பரிமாற்றங்கள் (பணத்துக்காகத்தான்) இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.



# லேடிஸ் ஸ்பெஷல்

பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.







## சரும பிரச்சினைகளுக்கு தீர்வு தரும் மஞ்சள்

மஞ்சளில் அன்டி-ஒக்ஸிடன்ட் இருப்பதால், சரும சுருக்கத்தைப் போக்கி இளமையான தோற்றத்தைக் கொடுக்கும். இதுபோன்று சருமத்தில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளைத் தடுக்கும். எனவே இப்போது மஞ்சளை எப்படியெல்லாம் பயன்படுத்தினால், என்ன பிரச்சினை நீக்கும் என்பதை பார்க்கலாம்..

• முகத்தில் பருக்கள் அதிகம் இருந்தால், மஞ்சள் தூளுடன், சந்தனப்பொடியை சேர்த்து தண்ணீர் ஊற்றி பேஸ்ட் செய்து முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்த, பின் கழுவ வேண்டும்.

• மஞ்சள் தூளில் கடுகு எண்ணெய் மற்றும் எலுமிச்சை சாறு சேர்த்து கலந்து பேஸ்ட் செய்து முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, பின் ஸ்கரப் செய்து சுத்தமான நீரில் கழுவ வேண்டும். இப்படி வாரம் மூன்று முறை செய்துவந்தால், பருக்கள் படிப்படியாக மறைவதை காணலாம்.

• மஞ்சள் தூளில், வெள்ளரிக்காய் சாறு சேர்த்து கலந்து, முகத்தில் தடவி ஊறவைத்து கழுவவேண்டும். இப்படி தினமும் செய்துவந்தால் முகத்தில் உள்ள கருமை நீங்கும்.

• சருமம் சுருக்கங்களுடன் காணப்பட்டால், மஞ்சள் தூளில் கரும்புச்சாறு சேர்த்து கலந்து, பாதிக்கப்பட்ட இடத்தில் தடவி வந்தால் சரிசெய்யலாம். சென்சிடிவ் சருமம் உள்ளவர்கள். மஞ்சள் தூளில் மோர்சேர்த்து கலந்து, பாதிக்கப்பட்ட இடத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து குளிர்ந்த நீரில் கழுவவேண்டும்.

• குதிக்கால் வெடிப்பு உள்ளவர்கள் தினமும் காலையில் 3 கரண்டி மஞ்சள் தூளுடன், சில துளிகள் தேங்காய் எண்ணெய் சேர்த்து கலந்து, பாதிக்கப்பட்ட இடத்தில் தடவி 10 நிமிடம் ஊறவைத்து, கழுவவேண்டும். இதை ஒரு வாரம் தொடர்ந்து செய்துவந்தால் நல்ல பலன் கிடைப்பதைக் காணலாம்.



## பெண்களை ஏமாற்றும் இன்றைய ஆண்கள்

வயது மற்றும் ஹோர்மோன் அதிகரிப்பால் பெண்கள் ஏமாந்துபோய் தெருவில் நிற்பதை நாள்தோறும் நாம் செய்திகளில் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். இன்றைய காலகட்டத்தில் ஆண்களிடமிருந்து பெண்கள் எப்படித் தங்களைக் காத்துக் கொள்ளவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வது மிகவும் அவசியம்.

பெண்களைக் தங்கள் வலையில் விழவைப்பதற்காகவே ஆண்கள் பல்வேறு விதங்களில் முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். ஆண்களின் புத்திசாலித்தனத்தை எப்போதுமே பெண்கள் மதிப்பார்கள் அதில் மதிமயங்கவும் செய்வார்கள்.

இருவரும் நன்றாகப் பேசிக் கொண்டிருக்கும்போது, தன்னுடைய கருத்துக்கு அந்தப் பெண்ணின் பதில் என்ன என்பதை புத்திசாலியான ஆண் உன்னிப்பாகக் கவனிப்பான். அவளை சுதந்திரமாகப் பேச விட்டுக் கேட்பான். அவ்வப்போது நகைச்சுவையாகவும் பேசி, அவளைச் சிரிக்க வைப்பான். அவனுடன் இருப்பதால் அந்தப் பெண்ணுக்கு எப்போதுமே சலிப்பே ஏற்படாது.

இத்தகைய கவர்ச்சியாக பேச்சின்மூலம் பெண்களை மயக்குவதில் ஆண்கள் கில்லாடிகள். ஆண்கள் கதை, கவிதை, பேச்சு, பெயிண்ட்டிங் என்று தன்னுடைய படைப்பாற்றலை பெண்ணிடம் வெளிப்படுத்துவார்கள்.

ஆனாலும், இந்தப் படைப்பாற்றல் மிக்க ஆண்களின் வலையில் பெண் மீன்கள் சிக்குவது நடக்கத்தான் செய்கிறது. பெண்கள் எந்த அளவுக்கு ஆண்களைக் கவர்ந்து இழுக்க முயற்சிப்பார்களோ, அதே அளவுக்கு சில ஆண்களும் தங்கள் கவர்ச்சியால் பெண்களை விழவைப்பார்கள்.

அடிக்கடி அவளைக் கூப்பிட்டு 'ஐ லவ் யூ' சொல்வான். கண்ணோடு கண்நோக்கி, தன் காதலை அவளுக்குப் புரிய வைப்பான். அனைத்து விதமான காதல் அசைவு-களையும், அவளுக்காக செய்து காண்பிப்பான். ஒரு பெண்ணுக்கு இவ்வளவு போதாதா? அவள் அவன் வலையில் விழுவதற்கு. இப்படி பல விதமாக யுக்திகளை காண்பித்து பெண்களை ஆண்கள் மயங்குகிறார். ஆனால் இது புரியாமல் பெண்கள் ஆண்களில் வலையில் விழுந்து தங்கள் வாழ்க்கையை பாழாக்கிக் கொள்கின்றனர்.

## காய்ச்சல் குணமாக....

இரண்டு உள்ளங்கைகளையும் விரல்களையும் இதுபோல் கோர்த்து இறுக்கிக் கொள்ளவும். இடக்கைப் பெருவிரல் நிமிர்ந்து நிற்கவேண்டும். அந்த விரலை சுற்றி வலக்கை பெருவிரல் இருக்கவேண்டும். இதை லிங்க முத்திரை என அழைப்பார்கள்.



## லிப்ஸ்டிக் போட்டு கொள்வது எப்படி?

சிலருக்கு தங்கள் நிறத்துக்கு ஏற்ற லிப்ஸ்டிக் தேர்ந்தெடுப்பது மற்றும் அதை போட்டுக்கொள்வது எப்படி என்று தெரிவதில்லை. அவர்களுக்கான டிப்ஸ் இதோ:

• கறுப்பாக இருப்பவர்கள் மிகவும் லைட்டாகவோ அல்லது டார்க்காகவோ இல்லாமல், பொதுவான கலரில் லிப்ஸ்டிக் பயன்படுத்தலாம்.

• மாநிறமாக இருப்பவர்கள் இயற்கையான கலரில் லிப்ஸ்டிக் போட்டுக்கொண்டால், அழகாக இருக்கும்.

• சிவப்பாக இருப்பவர்களுக்கு எல்லா கலர் லிப்ஸ்டிக்கும் பொருத்தமாக இருக்கும்.

• வெயில் காலங்களில் இரண்டு கலர்களை சேர்த்து லிப்ஸ்டிக் போட்டுக்கொண்டால், எடுப்பாக இருக்கும்.

## கர்ப்பப்பை இறக்கம்: காரணம் – தீர்வுகள்

இப்போதைய மாறிவரும் பழக்க வழக்கங்களால், அடி இறக்கம் என்று பெண்களால் கூறப்படும் கர்ப்பப்பை தளர்வு பல பெண்களுக்கு ஏற்படுகிறது. கர்ப்பப்பை இறக்கம் ஏற்பட என்ன காரணங்கள், அதன் அறிகுறிகள், தீர்வுகள், தடுப்பு முறைகள் பற்றி பார்க்கலாம்.

சுகப்பிரசவத்தில் ஏற்படும் பெண்களுக்கு இந்தப் பிரச்சினை அதிகம் பாதிக்கிறது. பிரசவத்தின்போது தசைகள் தளர்ந்துபோயிருக்கும். போதுமான அளவு ஓய்வெடுக்காமல், வேலைசெய்வது, எடை அதிகமுள்ள பொருட்களைத் தூக்குவது போன்றவற்றால் இடுப்பெலும்புத் தசைப் பகுதிகள் பலமிழக்கும்.

பெரும்பாலும் மெனோபாஸ் வயதில்தான் இது தன் வேலையைக் காட்டத் தொடங்கும். அந்தரங்க உறுப்பின் வழியே சதைப்பகுதி வெளியே வருகிற உணர்வு இருக்கும். அடிக்கடி முதுகுவலியும் இருக்கும். கர்ப்பப்பை இறக்கத்தில் 3 நிலைகள் உள்ளன.

முதல் மற்றும் இரண்டாவது நிலைகளில், இறங்கிய கர்ப்பப்பை பகுதியை லேப்ராஸ்கோப்பி சிகிச்சை நிலையிலேயே அடுத்த சில வருடங்களுக்கு இருக்கும்.

3ஆவது நிலை இறக்கம் சற்றே சிக்கலானது. இந்நிலையில் கர்ப்பப்பையான்து வெளியே தொங்க ஆரம்பித்துவிடும். சிறுநீர்ப்பையும் மலப்பையும் சேர்ந்து அழுத்தப்பட்டு, அடிக்கடி சிறுநீர் கழிக்கிற உணர்வு, சிறுநீர் கழித்த பிறகும் மிச்சமிருக்கிற உணர்வு, தேங்கிப் போகிற சிறுநீரின்மூலம் கிருமித்தொற்று உண்டாகி, சிறுநீரகங்களே பழுதடைவது போன்றவையும், மலச்சிக்கலும், மலம் கழித்த பிறகும் அதிருப்தியான உணர்வு போன்றவையும் சேர்ந்துகொள்ளும்.

இதுதவிர சிலருக்கு பிறவியிலேயே திசுக்கள் பலவீனமாக இருந்து, குழந்தை பிறப்பதற்கு முன்பே கர்ப்பப்பை இறக்கம் ஏற்படலாம். இது பரம்பரையாகத் தொடர்ந்தால், மருத்துவரிடம் ஆலோசனை பெறவேண்டும்.

ஆரம்ப நிலையிலேயே மருத்துவரை அணுகுவது, முதல் நிலை பாதிப்பாக இருப்பின், 'ஸ்லிங்' எனப்படுகிற அறுவைச் சிகிச்சையின்மூலம் தீர்வுகாண்பது, எடை தூக்குவது, கடினமான வேலைகளைச் செய்வது போன்றவற்றைத் தவிர்ப்பது. இவையெல்லாம் பிரச்சினை தீவிரமாகாமல் தடுக்கும் வழிகள் ஆகும்.



**250/= பரிசு வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

பரிசுப் போட்டி இல :-430

**கேள்வி: காய்ச்சல் குணமாக செய்யவேண்டிய முத்திரையின் பெயர் என்ன?**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 11. 08. 2014

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 430
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

பரிசுப் போட்டி இல :- 428 இற்கான விடை :-
பேராபென்ஸ், ஈயம், பாதரசம், ஆர்சனிக்

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :-
A.G.நிஸாரா,
புதுக்குடியிருப்பு, மன்னார்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

430

| | |
|---|---|
| பெயர் | : |
| முகவரி | : |
| தே.அ. அட்டை இல | : |
| விடை | : |
| கையொப்பம் | : |




# இது தானா மெகா பிளாஸ்ட்!

**யாழ்ப்பாணத்தின் இன்றைய சமூகப்பிறழ்வுகள் எல்லாவற்றிற்கும் இவ்வாறான கேளிக்கைகள்தான் காரணமென்று ஒட்டுமொத்தமாக சொல்லவரவில்லை. இதைத்தாண்டிய இயந்திரங்களும் இயங்கிவருவது ஒருபுறமிருக்க நம்பிக்கைக்குரிய தளங்கள் இப்படித் தடம்மாறுவதுதான் வேதனைக்குரியது.**

"யாழ்ப்பாணத்திலும் நம்மவரின் தனித்துவமாய் சூரியன் FM" என்ற பெயரில் யாழ்ப்பாணத்தவரின் தனித்துவத்திற்கு எவ்வித சம்மந்தமும் இல்லாத வகையில் நடந்தேறியுள்ளது சூரியனின் 'மெகா பிளாஸ்ட்'

பிறிதொன்றை விமர்சிக்கும் தன்மையானது ஒரு ஊடகத்தின் தனித்தன்மையாக இருந்தாலும் அதே ஊடகத்தை சுதந்திர ஊடகவியலாளனாக நின்று விமர்சிப்பதில் எவ்வித சஞ்சலமும் இல்லை என்றவகையில் ஒரு பொறுப்பு வாய்ந்த ஊடகத்தின் பொறுப்பற்ற [illegible]த்தை என் சமூகத்திலுள்ள [illegible]றையின்பால் அலசுகிறேன்.

சமூகப் பொறுப்புடமை என்பது ஒரு ஊடகத்தின் தலையாய பண்பாகும். இந்நிலையினின்று மக்களின் குரலாக ஒலிக்கவேண்டிய ஊடகமானது அதே குரலைக் 'குரல்மாற்றி' ஒலிப்பதானது அம்மக்களுக்கு இழைக்கும் மாபெரும் துரோகமாகத்தான் கொள்ளமுடியும்.

இன்று இலங்கையில் ஏராளமான வானலை வானொலிகள் மற்றும் இணையத்தள வானொலிகள் என ஏட்டிக்குப்போட்டியாக குவிந்துள்ளன. எந்த வானொலியைக் கேட்கலாம் என்ற மக்களின் திண்டாட்டங்களின் நடுவே இலங்கையைப் பொறுத்தவரை தமிழ்பேசும் மக்களின் வெகுசன நாயகர்களாக வலம்வருபவர்கள் வானொலி அறிவிப்பாளர்களே. முன்னேற்றமடையாத ஈழத்தமிழ்ச் சினிமாவும் வானொலிகளுக்கான இந்த இடத்தினைக் கொ[illegible]துள்ளது என்றுதான் சொல்லமுடியும். [illegible]ந்தவகையில் "தமிழ்பேசும் ம[illegible]களின் முதல்தர வானொலி" என ஒவ்வொரு வானொலியும் தற்போது சுயதம்பட்டம் அடித்துவரும் நிலையி லும் ஒரு காலத்தில் ஓங்கியொலித்த பெருமை சூரியன் FM இற்கு உள்ளதை யாரும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

தகவல் பரப்புகை ரீதியில் அன்றிருந்த செய்தியாசிரியர்களும் அறிவிப்பாளர்கள் சிலரும் நடுநிலையின் பக்கம் நின்று செயற்பட்டதோடு தாம்சார்ந்த சமூகத்தின் குரலாகவும் ஒலித்தனர். தான்சார்ந்த சமூகத்தின் குரலாக ஒலிப்பதை சிலர் பக்கச்சார்பு எனக் கூறுகின்றனர். உண்மையில் அது ஒருபோதுமே பக்கச்சார்பானதாகாது.

இந்நிலையில் மதிக்கப்பட்ட சூரியன் FM இன் 'மெகா பிளாஸ்ட்' கடைசியாக 2010 ஆம் ஆண்டும் துரையப்பா ஆடுகளத்தில் நடந்தபோதும் விமர்சனங்களைப் பெரியளவில் சம்பாதிக்கவில்லை. ஆனால் இம்முறை நடந்தது என்ன?

உயர் பண்பாடுகளும் தனித்துவமிக்க நாகரிகமும் கட்டிக்காக்கப்பட்ட தமிழ் மண்ணில் அலங்கோல ஆட்டங்களை ஆடவைத்து துள்ளிக்குதிக்கும் துரைக் குஞ்சுகளை துரையப்பா மைதானத்தில் ஆசுவாசப்படுத்தி யாழ். மண்ணையே சகதியாக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

போர்க்காலத்தின்பின் இன்றளவும் அடிப்படை வசதிகளற்று அல்லோலப்படும் மக்களது குடிமனைகளை வன்னியின் மூலை முடுக்குகளில் சென்றுபார்த்தால் தெரியும். கல்விகற்பதற்கு பொருளாதார பலமின்றி இடைநிறுத்திவிட்டு சிறுவர் தொழிலாளர்களாக வேலைத்தளங்களில் சோபையிழந்து காணப்படும் சிறுவர்களின் முகங்களை ஒருமுறை சென்றுபாருங்கள் புரியும். பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் வரை ஏராளமான மாணவர்கள் சீரான கல்வியைத்தொடராது திண்டாடும் நிலைக்கு வறுமை குடிகொண்டுள்ளது.

இந்நிலையில் இந்தியப் பாடகர்களையும் உள்நாட்டுப் பாடகர்கள் மற்றும் ஆட்டக்காரர்களையும் அழைத்து கட்டுக்கட்டாக பணத்தை அள்ளியிறைப்பது அவசியம்தானா?

ஏற்கனவே தென்னிந்திய சினிமா மோகத்தாலும் இணையத்தள ஆபாசங்களாலும் தடம்மாறி உழலும் எமது இளைய சமுதாயத்திற்கு அந்த ஆட்டங்கள் தேவைதானா? தமிழ்த் தியாகிகளின் நினைவாலயங்களின் அருகே அமைந்திருக்கும் மைதானத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களை அழைத்து அரைவயிறு தெரியவும், தமிழின் உவமை, உருவகங்களே கூறாத அளவிற்கு இடுப்பினை அசைத்தும் எம்மண்ணிற்கு சம்மந்தமே இல்லாத உடையலங்காரம், தலையலங்காரம் என்பவற்றோடு ஆபாசத்தினை அள்ளியிறைக்கவேண்டியதன் தாற்பரியம் என்ன?

மேடையிலே புகைமூட்டத்தோடு ஆடலும் பாடலும் சென்றுகொண்டிருக்க பார்வையாளர்களிடையே புளுதிபொங்கியெழும் அளவிற்கு இளசுகளின் வெறியாட்டங்களும் என ஒரே அமர்க்களம்.

விரைவில் க.பொ.த உயர்தர பரீட்சைகள் நடைபெறவுள்ள நிலையில் உரியமுறையில் தம்மைத் தயார்ப்படுத்திக்கொள்ளவேண்டிய பல மாணவர்களே தம்மை மறந்து ஆடிக்கொண்டிருந்தனர். கல்வியில் எப்படியிருந்த யாழ்ப்பாணம் இப்படியானதற்கு இதுவும் ஒரு காரணம்தான்.

எங்கள் வானொலிகளை யார் கேட்கிறார்களோ? அவர் கோடீஸ்வரராக இருந்தாலும் அவருக்கு காசுதான் என்ற வீணான முயற்சிகளைக் கைவிட்டு கஷ்டப்படுகின்ற மக்களை, உங்களால் அடிக்கடி தம்பட்டமடித்துச் சொல்லப்படும் 'திட்டமிடல் விரிவாக்கல் பிரிவை'க் கொண்டு இனங்கண்டு அவர்களுக்கு உதவ முன்வாருங்கள். இது சூரியனுக்கு மட்டும் சொல்லவில்லை.

தவிர தமிழ்நாட்டுப் பாடகர்களிமிருந்து எமது பாடகர்கள் நிறையக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது. ஒலிவாங்கியைப் பிடித்தவுடன் எல்லைமீறிய புளகாங்கிதமடைவதால் உங்கள் திறமைகள்தான் மங்கலடைகின்றன. கடலென சனத்திரள் கூடினாலும் சிறு குட்டையென அடங்கி இருங்கள். இது அவ் இசைக்குழுவின் தலைவருக்குச் சொல்கிறேன்.

இனிமேலாவது யாழ்ப்பாணத்தில் இவ்வாறான கேளிக்கைகளை நடத்துமுன் நூறுமுறையாவது எமது மக்களைப் பற்றிச் சிந்தித்துவிட்டு அரங்கத்திற்கான கிடங்குகளைக் கிண்டுங்கள்.
நம்பியிருக்கின்ற மக்களை உங்களின் வியாபாரப் பேராசையாலும் விளம்பரப் பலத்தாலும் நாசப்படுத்தாதீர்கள்.

**முகப்புத்தகம் (ஆர்டிஸ்ட் ஷான்)**

# சிறுபோக வேளாண்மையும் குழப்பங்களும்

**கிழக்கான்**



**கிழக்கு** மாகாணத்தின் மட்டக்களப்பு அம்பாறை, திருமலை மாவட்டங்களில் சிறுபோக அறுவடைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் ஏற்கனவே செய்கை பண்ணப்பட முடியாதிருந்த ஒரு தொகை வேளாண்மை வயல் காணிகளும் இம்முறை விளைச்சலைக் கொடுத்திருக்கின்றது என்ற சந்தோசமான செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

சிறுபோகம் என்பது பாய்ச்சல் நீரை நம்பி செய்கை பண்ணப்படுவதாக இருக்கும். அதில் நஷ்டம் யாருக்கும் ஏற்படுவதில்லை என்ற உறுதிப்பாடு எல்லோருக்குமே இருக்கிறது. ஆனால் இதில் நஷ்டத்தினை விவசாயிகள் எதிர்கொள்ளக்கூடாது என்பது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் எண்ணமாக இருந்தாலும் விவசாயிகளது அறிவுக்கு ஏற்ப நடைபெறும் சில விடயங்களுக்கு நீர்ப்பாசனத் திணைக்களம் தடைபோடுவதும் உண்டு.

இதில் மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி நீர்ப்பாசனப் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் விவசாயிகள் வேளாண்மைச் செய்கையை ஆரம்பித்த நிலையில் நீர் தரமுடியாது என்றும் அதனால் வரும் பிரச்சினைகளுக்கு நாங்கள் பொறுப்பல்ல என்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்திருந்தது. ஆனாலும் மீள்குடியேற்றப் பிரதி அமைச்சரின் முயற்சியினால் செங்கலடி கிரான் போன்ற பகுதிகளில் நீர்ப்பாசனங்கள் வழங்கப்பட்டன.

அப்பிரதேசங்களில் விளைச்சல் சிறப்பாகவும் அமைந்திருந்தது. ஆனாலும் மேலும் சில இடங்களில் அம்பாறை நீர் வழங்கல் பிரிவின் வடிச்சல்களில் வேளாண்மை செய்கை பண்ணப்பட்டது. விவசாய ஆரம்பக்கூட்டங்கள், விசேட விவசாயக் கூட்டங்களின் முடிவுகளுக்கு அமைவாக வேளாண்மைச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவற்றை சட்ட அனுமதியில்லாத் செய்கை என்று சிலர் தெரிவித்திருந்தனர்.

இதற்கான அனுமதிகள் என்பது எவ்வாறு வழங்கப்படுகின்றன என்று பார்த்தால் அது உரமானியம், வழங்கல், நீர் வழங்கல் என்பவற்றுக்கான அனுமதிகளாகவே அவை இருக்கின்றன. இவற்றில் ஏற்படும் குழப்பங்களின் பின்னர் சில அதிகாரம் உள்ளவர்கள் நன்மை கிடைத்தால் அதன் பயனை தாம் எடுத்துக்கொள்வதற்கும், தீமை என்றால் ஒதுங்கிக்கொள்வதற்குமே தயாராக இருக்கிறார்கள் என்பது புரிகிறது.

எல்லோரும் நினைப்பதுபோல் எந்த ஒரு தொழில் முயற்சியும் சாதாரணமானதல்ல.

(21 ஆம் பக்கம் பார்க்க)

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

# புலிகள் காலக்கெடு தராமல் வெளியேற்றினர். அரசு காலக்கெடு தந்து வெளியேறச் சொல்கிறது!

## பொதுபல சேனாவுக்கு அதிகாரம் அனுசரணையா?

தொடர் - 16

### செல்வநகர் மக்களின் துயரக்கதை!

செல்வநகர் - நாவற்கேணிக் காடு கிராம மக்களுக்கு இந்த ஓகஸ்ட் மாதம் ஒரு துயரமான காலகட்டமாக மாறிவிட்டிருக்கின்றது.

பழைய புற்று ஒன்று புனித பூமியாக 'தொல்லியலாளர்கள்' கண்டுபிடிக்கப் பட்டிருப்பதே இந்தத் துயரத்துக்கான அடிப்படைக் காரணமாகும்.

அவ்வூர் மக்கள் பூர்வீகமாக பிறந்து, வளர்ந்து, வாழ்ந்துவருகின்ற பகுதிகளைக் காலி செய்துவிட்டு ஓகஸ்ட் 30ஆம் திகதிக்குள் வெளியேறிவிட வேண்டும் என்ற அரசின் எச்சரிக்கை உத்தரவே அந்தப் பகுதி மக்களை கலங்கச் செய்திருக்கின்றது.

திருகோணமலை மாவட்டத்தின் தென்கிழக்கே சேருவில எனும் பிரதேச செயலாளர் பிரிவின்கீழ் தோப்பூருக்கு அடுத்ததாய் அமைந்துள்ளது.

இந்த சர்ச்சைக்குரிய செல்வநகர் - நாவற்கேணிக்காடு எனும் கிராமம்.

இந்த ஊரை 'அக்கரை' என்றும் 'நீணாக்கேணி' என்றும் வெவ்வேறு பெயர்களால் அழைக்கின்றார்கள்.

சேருவில சிங்களப் பிரதேச செயலாளர் பிரிவின்கீழ் தனியே முஸ்லிம்களை மாத்திரம்கொண்ட ஒரேயொரு கிராம சேவையாளர் பிரிவு இந்த செல்வநகர்தான்.

இங்கு 765 குடும்பங்களைச் சேர்ந்த 2857 முஸ்லிம்கள் வசிக்கின்றார்கள். இது இனக்கலப்பில்லாத தனியொரு முஸ்லிம் கிராமம்.

செல்வநகர் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள ஒரு ஓரப்பகுதி நாவற் கேணிக்காடு (நீணாக்கேணி, அக்கரை). இதுதான் இப்பொழுது சர்ச்சைக்குரிய இடமாகப் பிரபலம் அடைந்திருக்கின்றது.

நாவற்கேணிக்காடு, கிராமத்தில் வசிக்கும் முஸ்லிம் குடும்பங்களை அங்கிருந்து வெளியேறுமாறு சேருவில பிரதேச செயலாளர் பியராளலாகே ஜயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் பிரதேச செயலாளரால் பதிவுத்தபால் மூலமும், கிராம சேவையாளருடாக தனித் தனியாகவும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. வெளியேற்றும் உத்தரவுக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டோம் என்பதற்கான கையெழுத்தும் பெறப்பட்டுள்ளது.

கடிதத்தில், குறித்த காணியை விட்டு ஓகஸ்ட் 30ஆம் திகதி அல்லது அதற்கு முன்பாக வெளியேறிவிட வேண்டும் என்ற காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளரால் ஒப்பமிட்டு குடியிருப்பாளர்களுக்கு பதிவஞ்சல் மூலமும் நேரடியாகவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1979 ஆம் ஆண்டின் அரச காணிகள் ஆட்சி மீளப்பெறுதல் சட்டத்தின் பிரகாரம் 3(1) ஆம் பிரிவின்கீழ் குறித்த காணியைவிட்டு வெளியேறும் அறிவித்தல் என்று தலைப்பிட்டு, "அரச காணிகள் ஆட்சி மீளப்பெறுதல் சட்டத்தின் நோக்கங்களுக்கு அமைவாக தகுதிவாய்ந்த அதிகாரிகளில் ஒருவராகிய, சேருவில பிரதேச செயலாளர் பியராளலாகே ஜயரத்ன ஆகிய நான் நாவற்கேணிக்காடு - செல்வநகர், தோப்பூர் எனும் விலாசத்தில் வசிக்கும் உங்களை அரச காணியில் அதிகாரம் இல்லாமல் ஆட்சி செய்கின்றீர் எனக் கருதுவதனால் எனக்குரித்தாக்கப் பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு உங்களை 2014.08.30ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ குறிப் பிட்ட காணியை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று உத்தரவிடுகின்றேன்.

காலியான காணியை இந்நோக்கங் களுக்கென தகுதி வாய்ந்த அதிகாரி யான என்னிடமோ அல்லது நாவற் கேணிக்காடு கிராம உத்தியோகத்தரிடமோ ஒப்படைக்கும்படி இத்தால் கேட்டுக் கொள்கின்றேன்." என்று அதில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இவ்வாறு காணியைவிட்டு வெளி யேறுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்ட கடிதம் கிராமத்திலுள்ள 20 குடியிருப் பாளர்களுக்கு பிரதேச செயலாளரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை இன்னும் 107 பேருக் குரிய கடிதங்கள் விலாசதாரர்களுக்கு அனுப்புவதற்காக பிரதேச செயலகத்தில் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக வும் தெரிவிக்கப்படுகின்றது.

நீணாக்கேணியில் 127 குடும்பத்தினருக்கு காணிகள் உண்டு. இதில் 52 குடும்பத்தினர் இங்கு நிரந்தரமாக வசித்துவருகின்றனர்.

39 நிரந்தர வீடுகள், ஏனையவை பகுதியளவில் கட்டப்பட்ட மண், தகரம் மற்றும் கிடுகுகளால் அமைக்கப்பட்ட வாழ்விடங்களாகும்.

இங்குள்ள குடியிருப்பாளர்கள் கால் ஏக்கர் ¼ அல்லது அரை ஏக்கருக்கு ½ மேற்படாத பரப்புள்ள காணிகளையே கொண்டிருக்கின்றார்கள் என்று சேருவில பிரதேச சபையின் உறுப்பினரான எம். எல்.எம். பைஸர் ஹாஜியார் தெரிவித்தார்.


இந்தக் கிராமத்தில் உள்ளவர்களும் ஏனைய அயலூர்களான உப்பூறல், தோப்பூர், மூதூர் போன்ற ஊர்மக்களும் பரம்பரை பரம்பரையாக பூர்வீகமாக இப்பகுதிகளிலேயே வசித்துவந்துள்ள தாகக் கூறுகின்றனர்.


அதேவேளை கடந்த 2006ஆம் ஆண்டு புலிகள் இந்தப் பிராந்தியத்திலிருந்து முஸ்லிம்களை முற்றாக வெளியேற்றி யிருந்தபோது நாவற்கேணிக்காடு முஸ்லிம் களும் தமது வாழ்விடங்களை விட்டு சில காலங்கள் அகதிகளாக வெளியேறி கந்தளாய், கிண்ணியா இன்னும் இது போன்று நாட்டின் இதர பகுதிகளிலும் வசித்து வந்துள்ளனர்.

பின்னர் மூதூர், தோப்பூர் பகுதி படை யினரால் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து நாவற்கேணிக் காட்டுப் பகுதி மக்களும் மீளக் குடியேறத்தொடங்கினர்.

இந்தக் கிராமத்திலே வாழும் மக்களுக்கு அவர்கள் இங்கேதான் காலங்காலமாக வசிப்பவர்கள் என்பதற்கான அரசாங்கத்தின் ஆதாரங்களாக வாக்காளர் பதிவு, சமுர்த்திக் கொடுப்பனவு, வீட்டு மானியம், தேசிய ஆளடையாள அட்டை, மின்சாரப் பட்டியல், நீர் விநியோகக் கொடுப்பனவுப் பட்டியல், குடும்ப அட்டை, பிறப்பத்தாட்சிப் பத்திரம், திருமணச் சான்றிதழ் என்பனவும் உண்டு.

# சேருவிலவில் புனித பூமி!




MINISTRY OF REHABILITATION & RECONSTRUCTION
Family Registration Card for Unified scheme of Assistance under Rehabilitation and Reconstruction Programme.
Card No. № 028240
Survey Form No: 216E - 160
Name of Head of Household: சே. த. கயாத்து மூமீன்
G.S.O. Division:
Address:
A.G.A. Division: மூதூர். சேருவில
Occupation:
District: திருகோணமலை.
National Identity Card Number: 491010860V.
Name of Interviewer:
Number of family members: 12
Designation: கிராம உத்தியோகத்தர்
1993. 3. 16
Signature of Head of Family
Date
Signature of AGA

இவையெல்லாம் அப்பகுதி அரசாங்க அதிகாரிகளான கிராமசேவகரினாலும் பிரதேச செயலாளரினாலும் வழங்கப்பட்டு வந்த அதிகாரபூர்வ அங்கீகரிப்பு ஆவணங்களாகும்.

இவற்றையெல்லாம் தாண்டி இந்தக் கிராமத்தில் அவர்கள் மிகக் கஷ்டப்பட்டு உருவாக்கிய பயன்தரும் மரங்கள் ஓங்கி உயர்ந்து வளர்ந்து நிற்கின்றன. கோடை காலத்தில் வெகுதூரத்திலிருந்து நீர் அள்ளிவந்து ஊற்றி அவர்களால் வளர்க்கப்பட்ட மரங்கள் இவை.

தாங்கள் சுமார் ஐம்பது வருடங் களுக்கு முன்னராகவே இப்பகுதிக்கு வந்து காடுகளை வெட்டி இந்தப் பகுதியை குடியிருப்புக்களாக மாற்றியதாக கிராம-வாசிகள் கூறுகின்றனர்.

மேலிடத்திலிருந்து தமக்குவந்த உத்தரவின் பிரகாரமே காணியை விட்டுக் காலிசெய்யும் உத்தரவைத் தான் பிறப் பித்துள்ளதாக பிரதேச செயலாளர் தங்களிடம் கூறியதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரான மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வாவையே இவர் மேலிடம் என்று சூசகமாகக் கூறியுள்ளார் என்பது வெளிப்படையானது.

இந்த நாவற்கேணிக்காடு கிராமத்தில் நீணாக்கேணிக்கு அருகே உயர்ந்த புற்றுப் போன்ற மண்திட்டு ஒன்று உள்ளது.

இந்த திட்டிலுள்ள புராதன அடையாளம் ஒன்றுதான் சூழ உள்ள ஏழை மக்களை வெளியேற்றுவதற்கான முயற்சிக்கு கால்கோளாய் அமைந்துவிட்டது என்று கிராமவாசிகள் அபிப்பிராயப்படுகின்றனர்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் கடந்த ஆண்டு 2013 இப்பகுதிக்கு விஜயம் செய்த ஒரு குழுவினர் தங்களைத் தொல்பொருள் ஆய்வு உத்தியோகத்தர்கள் என அடையாளப் படுத்திக் கொண்டு அங்குள்ள மக்களின் விவரங்களைத் திரட்டியுள்ளனர்.

பின்னர் தொல்பொருள் ஆய்வின்படி இப்பகுதியில் பௌத்த வழிபாட்டிடம் இருந்தமைக்கான ஆதாரம் இருப்பதாகக் கூறி அங்கு தங்கியிருந்து விவரம் சேகரித்ததோடு 6 ஏக்கர் காணியையும் தம்வசப்படுத்தியுள்ளனர்.

இதன்பின்னர் மேலும் 49 ஏக்கர் காணி இருப்பதாகக்கூறி பொதுமக்களின் பலமான எதிர்ப்புக்கு மத்தியில் கடந்த ஆண்டு பிற்பகுதியில் நில அளவை செய்து எல்லைக்கற்களும் போட்டுள்ளனர்.

இந்தப் பின்னணியில் மொத்தம் 600 ஏக்கர் காணியை அபகரிக்கும் இரகசியத் திட்டம் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

அந்த மண்மேடு அமைந்துள்ள இடத்தைச் சுற்றி இப்பொழுது பௌத்த கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. அந்த இடத்தில் இரண்டு பௌத்த பிக்குகள் நிரந்தரமாகத் தங்கியுள்ளனர். இரவில் அவ்வப்போது பொலிஸாரும் இராணுவத்தினரும் அந்த இடத்திற்கு வந்து காவல் கடமையில் ஈடுபடுவதாக ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சின்ன விகாரை என்றழைக்கப்பட்டு தற்போது பெயர் மாற்றம் பெற்றுள்ள வெல்கம் விகாரையின் காணியை விஸ்தரிப்பதற்கான திட்டத்தின் அடிப் படையிலேயே தற்போது முஸ்லிம்கள் குடியிருக்கும் காணிகளை அவர்கள் கைப்பற்றுகிறார்கள் என்று பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

வழிபாட்டிடத்தை சூழ அதனை வணங்கவரும் மக்கள் எவருமில்லாமல் வழிபாட்டிடத்தை கட்டியெழுப்ப முடியாது என்பதால், குறிப்பிட்ட மண் மேட்டினை புராதன விகாரை அமைந்த பகுதியாகச் சித்தரித்து அதனைச் சூழ பெரும்பான்மையினரைக் குடியமர்த்தும் மறைமுக நடவடிக்கையே இது என்றும் கூறப்படுகின்றது.

அவ்வாறு பெரும்பான்மையினரைக் குடியமர்த்துவதற்கு காணி தேவை. ஏற்கெனவே இந்த மண்மேட்டினைச்சூழ சுமார் 100 ஏக்கருக்கு மேற்பட்ட விஸ்தீரணமான காணி உண்டு என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு தமது பூர்வீக நிலங்களை அபகரிக்க அதிகாரத் தரப்பு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து அந்த ஏழைக்கிராம மக்கள் தமது துயரத்தைப் பகிர்ந்துகொண்டனர்.

**ஏ.ஆர்.குப்பம்மா (வயது 62)**

இந்தப் பகுதி அடர்ந்த காடுகளாய் இருந்தபோது நாம் இங்கு வந்து சேர்ந்தோம். எனக்கு இதிலே அரை ஏக்கர் காணி உள்ளது. 60 தென்னை மரங்கள், 5 மாமரங்கள், 3 பலா மரங்கள் எல்லாமே உண்டு. எல்லா மரங்களும் காய்க்கின்றன. நிறைய வாழை மரங்கள் இருந்தன. அவற்றை காட்டு யானைகள் அழித்துவிட்டன. இந்த வீட்டை மூன்று முறை காட்டு யானைகள் உடைத்திருக்கின்றன. ஒரேயொரு தடவை வீடழிவுக்கு சேருவில பிரதேச செயலகத்தினால் 10,000 ரூபா பணம் தந்தார்கள். இப்படிப்பட்ட பயங்கரத்துக் குள்ளேதான் நானும் மனநோயாளி யான எனது மகனும் சீவித்து வருகின்றோம்.

(தொடரும்)

# மருத்துவம் என்றால் என்ன?

மருத்துவம், நமது அடிப்படை உரிமை. ஏனென்றால் மருத்துவம் என்பது எல்லா உயிர்களின் உள்ளுணர்வின் ஞாபக அடுக்குகளில் உறைந்துள்ள செயற்பாடுதான். நாய், பூனை போன்ற உயிரினங்களைக் கவனித்துப் பார்த்தால் தெரியும். உடல்நிலை சரியில்லையென்றால் அவை உணவெடுப்பதில்லை.

நாய் அறுகம்புல்லைக் கடித்துத் தின்னும். சிறிதுநேரத்திலேயே வயிற்றில் செரிக்காமல் தங்கிவிட்ட பொருளைக் கக்கிவிடும். நாய்க்கு எப்படி அறுகம்புல் மருந்து என்று தெரியும்? அதன் உள்ளுணர்வில் பதியப்பட்டுள்ள மருத்துவக் குறிப்பு ஞாபகத்தின் மேலடுக்குக்கு வந்து, அதற்கு வழிகாட்டுகிறது. ஆனால், மனிதன் சமூகமயமானபோது கொஞ்சம் கொஞ்சமாகத் தன் உள்ளுணர்வின் பதிவுகளை அழித்துவிட்டான்.

## சிகிச்சையின் தொடக்கம்


வேலைப் பிரிவினைகள் உருவானபோது மருத்துவம், மந்திரம், சடங்குகளோடு இணைந்துவிட்டது. ஆரம்பத்தில் மருத்துவம் உன்னதமான சேவையாகக் கருதப்பட்டது. மருத்துவத்துக்கு ஈடாகப் பொருள் பெறுவது பாவம் என்று நம்பிய காலம் ஒன்றிருந்தது. மருத்துவர் என்று ஒரு சாதியே உருவானது. ஆனால், எல்லா நோய்களுக்கும் மருத்துவர்களைத் தேடிப் போனதில்லை.

சாதாரண நோய்களைப் பெரும்பாலும் கை வைத்தியத்திலேயே வீடுகளில் குணப்படுத்திவிடுவார்கள். காய்ச்சல், சளி, தலைவலி என்று அடிக்கடி வரக்கூடிய நோய்களுக்கு உணவுப் பத்தியம், பச்சிலைச் சாறு, கஷாயம், சூரணம் கொடுத்துக் குணப்படுத்திவிடுவார்கள். உணவே மருந்து, மருந்தே உணவு என்று இயற்கையோடு இயைந்து வாழ்ந்த காலங்கள் இருக்கத்தான் செய்தன. சித்தர்களின் தாக்கம் எப்படி நம்முடைய வாழ்விலும் உணவு முறைகளிலும் இருக்கிறது என்பது தனியாக ஆய்வு செய்யப்படவேண்டிய ஒன்று.

## எது நவீனம்?

ஆனால், இன்று பெரும்பாலானவர்களுக்கு ஆங்கில மருத்துவத்தைத் தவிர வேறு மருத்துவம் இருக்கிறதா என்றுகூடத் தெரியாது. ஆங்கில வைத்தியம் மட்டும்தான் நவீன மருத்துவம். மற்றதெல்லாம் நாட்டு வைத்தியம் எனப்படும். நோயுற்ற மனிதனை நம்பாமல், சோதனைச் சாலை முடிவுகளின் அடிப்படையில் மட்டும் மருத்துவம் செய்யும் ஆங்கில மருத்துவம், நவீன மருத்துவம் என்று பெயர் பெற்றிருக்கிறது.

எந்த மருத்துவ முறையாக இருந்தாலும் நமது உயிரையும் உடலையும் தன்னிச்சையாகக் கையாளுவதற்கு உரிமை கிடையாது. நமக்குக் கொடுக்கப்படும் மருந்துகள், சிகிச்சைகள் பற்றி அறிந்துகொள்ள நமக்கு முழு உரிமை உண்டு. இன்னும் சொல்லப்போனால் நமக்குத் தரப்படும் மருந்துகள் அதன் விளைவுகள், பக்கவிளைவுகள், எல்லாவற்றைப் பற்றியும் சொல்வதற்குக் கடமைப்பட்டவர்கள் மருத்துவர்கள். எந்த மருத்துவரும் கடவுள் அல்ல. எல்லாத் துறைகளைப் போலவும் மருத்துவத் துறையை அவர் படித்திருக்கிறார், அவ்வளவுதான். அதேபோல எந்த மருத்துவமும் இயற்கையின் விதிகளுக்கு மாறாக நமது உடலில் செயற்படமுடியாது.



## மருத்துவத் தத்துவம்

எல்லாவற்றிலும் இருப்பதைப் போல மருத்துவத்துக்கும் ஒரு தத்துவப் பார்வை உண்டு. அதுதான் அந்த மருத்துவ முறையைத் தீர்மானிக்கிறது. சித்தா, ஆயுர்வேதம், யுனானி போன்ற மருத்துவ முறைகள் நிலப்பிரபுத்துவத் தத்துவப் பார்வை கொண்டவை என்றால், ஆங்கில மருத்துவ முறை முதலாளித்துவத் தத்துவப் பார்வை கொண்டது. நிலப்பிரபுத்துவக் காலகட்டத்தில் மருத்துவம் புனிதமானதாகக் கருதப்பட்டது. அது மந்திரத் தன்மை கொண்டதாகவும், இரகசியமாகச் செய்யவேண்டியதாகவும் கருதப்பட்டது. அந்த மருத்துவ ரகசியங்களை யாரிடமும் பகிர்ந்து கொள்ளக்கூடாது. அப்படிப் பகிர்ந்துகொண்டால், அது பலிக்காது என்றும் நம்பப்பட்டது. நிலப்பிரபுத்துவத்தின் உற்பத்தி உறவுகளைப் போலவே, மருத்துவமும் மதிப்புமிக்கதாக இருந்தது. மனிதர்களின் தனித்துவத்துக்கு முக்கியத்துவம் அளித்தது.

ஆங்கில மருத்துவ முறை முதலாளித்துவத் தத்துவப் பார்வைகொண்டது. அதற்குச் சந்தைதான் முக்கியம். எல்லாவற்றையும் விற்கவோ, வாங்கவோ முதலாளித்துவம் முயலும். பேராசைகொண்ட அதன் இலாப வெறிக்கு எதுவும் பொருட்டல்ல. அதன் உற்பத்தி உறவுகள் சந்தையோடு தொடர்புடையவை என்பதால், அது எதையும் மதிக்காது. எந்த விழுமியங்களையும் ஏற்காது. அப்படியே தன்னுடைய சந்தைத் தேவைகளுக்கேற்ப மதிப்பீடுகளை மாற்றிக் கொண்டேயிருக்கும். அதற்கு எல்லாமே, எல்லாருமே பண்டங்கள்தான். எப்படி மனிதர்களுக்காகப் பொருட்களையும் பொருட்களுக்காக மனிதர்களையும் உருவாக்குகிறதோ, அதேபோல நோய்களுக்காக மருந்துகளையும் மருந்துகளுக்காக நோய்களையும் அது உற்பத்தி செய்யும்.

## மாற்று மருத்துவம்

உதாரணத்துக்கு, இப்போது பிரசவம் என்றாலே அது சிசேரியன்தான் என்றாகிவிட்டது. இது திட்டமிட்டுப் பணம் பறிப்பதற்கான செயலாக மாறிவிட்டது. நாற்பது வயதுக்கு மேல் உள்ள பெண்களில் பாதிப் பேருக்குக் கர்ப்பப்பையை எடுத்துத் தூரப் போட்டாகிவிட்டது. சம்பந்தமில்லாமல் கூட்டம் கூட்டமாகத் தடுப்பூசிகளைப் போடச் செய்வது... இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். மனிதன் ஒரு முழுமையான இயங்கியல் உயிரினம் என்பதை மறுத்து, அவனை ஒரு எந்திரமாகப் பாவித்து எல்லாவற்றையும் தனித் தனியே பிரித்து வேலை பார்க்கிறது ஆங்கில மருத்துவம். எதிர்காலத்தில் ஒரு சமூகத்தையே ஊனமுள்ளதாக்குகிற வேலையைச் செய்து கொண்டிருக்கிறது. சிலர் மட்டும் செல்வத்தில் கொழிக்க, பெரும்பான்மை மக்கள் தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் இழக்கின்றனர். இது அதன் தத்துவப் பார்வையின் அடிப்படையில் உருவான நடைமுறை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆனால், நமக்குத் தேவை மானுடமயமான தத்துவப் பார்வைகொண்ட மருத்துவம். அது, அடிப்படையில் சமூகம் சார்ந்ததாக இருக்கவேண்டும். தெளிவான தத்துவ நோக்கத்தைக் கொண்டிருக்கவேண்டும். எந்த இரகசியங்களோ, மர்மங்களோ இல்லாததாக, இயற்கையின் விதிகளுக்கு ஏற்பச் செயற்படுகிற மருத்துவமாக இருக்க வேண்டும். பக்கவிளைவுகள் இல்லாத எளிமையான, இனிமையான, முழுமையான நலனை மீட்டுத் தரவேண்டும். சுருக்கமாக, அது மக்கள் மருத்துவமாக இருக்கவேண்டும்.


தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு நாளிதழ்

ரூ.10/= மட்டுமே

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

வடபுலத்தான் எழுதும் நாட்டு நடப்பு குறிப்புகளும் விமர்சனங்களும்

வடபுலத்தான் எழுதுவது...

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"




# வரப்பு



**என்ன** கோபாலு இந்தப்பக்கம்...? எங்க வீட்டுக்கெல்லாம் வரமாட்டியே... என்ன விசேஷம்?"

"இல்ல மச்சான்" உங்களைத்தான் பாத்துட்டுப் போகணும்னு வந்தேன்"

"வா.,.வா...உட்காரு! யம்மா...யார் வந்திருக்கான்னு பாருங்க...! நம்ம கோபாலு".

"யப்பா...வா... ஆயிரம் வாட்டி இந்தத் தெருவுல போவ... ஆனா ஒரு வாட்டிகூட வீட்டுக்குள்ள வந்ததில்ல" இன்னைக்கு மச்சான் இருக்கான்னு தெரிஞ்சி வந்திரிக்கியாக்கும்.

எப்படியிருக்க? தொழிலெல்லாம் எப்படியிருக்கு...? இன்னு கேட்டுகிட்டே குறுங்கட்டில்ல வந்து உட்கார்ந்தாங்க மாடசாமியோட அம்மா.

"யய்யா... கோபாலு என்ன சோலியா வந்திருக்கானாம்...?"

"தெரிலம்மா... இப்பத்தான் வந்திருக்கான்." என்றான் மாடசாமி.

"யய்யா.. இரு நான் கோப்பித் தண்ணி கொண்டாரேன்... எழும்ப முயன்ற அவர்களை..." வேண்டாங்க... நீங்க உக்காருங்க அத்தை" என்று உட்கார வைத்தான்.

"சரி, மாப்ள... என்ன ஏதும் விசேஷமா?"

"விசேஷம்லாம் ஒண்ணுமில்ல மச்சான். நம்ம அய்யும்புள்ளி வயல் இருக்குல்ல"

"ஆமா இருக்கு"

"அதுக்குக் கிழக்குப் பக்கம் எங்க வயல் இருக்குல்ல"

"சர"

"அந்த வயலை வித்துடலாம்னு இருக்கேன்"

"எதுக்கு மாப்ள அந்த வயலை விக்கிற?"

"..."

"எலே" உனக்குக் கிறுக்கு கிறுக்கு ஏதாச்சும் புடிச்சு போச்சா? அந்த வயலை எதுக்கு விக்கிற? நம்ம ஊர்லயே அதுதான் நல்லா விளையக்கூடிய வயலு... மழை தண்ணி இல்லன்னாலும், பாதாள மடைக்குப் பக்கத்துல இருக்குறதால, குளத்துல கொஞ்சமா தண்ணியிருந் தாலும் ரெண்டு எட்டுல வயலுக்குப் பாஞ்சிடும். மழைத்தண்ணி ஒழுங்கா இருந்தா மூணு போகமும் விளையும். அதைப்போய் விக்கப் போறேன்னு சொல்றியே! உனக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கா..." பொரிந்து தள்ளினார் மாடசாமியின் தாயார்.

"இல்ல அத்தை... சூழ்நிலை அப்படி. அதை வித்துதான் சமாளிக்க வேண்டியிருக்கு"

"சரி. அப்டிய விக்கணும்னா வேற காஞ்ச பூமி எதையாவது வில்லு" இல்ல அந்தக் கள்ளுக்கடை திரட்டுல இருக்குற நிலத்தை வில்லு. அய்யம்புள்ளி வயலைப் போய் விக்கணும்னு சொல்றியே!

"அந்த... அந்த இடம் அவ்வளவு விலைபோகாது. இந்த வயல்தான் நல்ல விலைக்குப்போகும். அதான் இதை விக்கலாம்னு வந்தேன்"

"சரி மாப்ள. எதுக்கும் அவசரப் படாத. வேற வழியில சமாளிக்க முடியுமான்னு பாரு"

"இல்ல மச்சான்... நல்ல முடிவு பண்ணிட்டுதான் வந்திருக்கேன்"

"யாரு என்ன விலைக்குக் கேக்குறாங்க... எதுவும் விசாரிக்கிறியா?"

"இல்ல மச்சான்... யார் கிட்டயும் சொல்லல. உங்ககிட்டதான் முதல்ல வந்திருக்கேன்"

"எங்கிட்டயா?"

"ஆமாம் மச்சான், தெற்குப் பக்கம் புதுக்குடி ஊர்க்காரர் வயல், மேற்குப் பக்கம் உங்க வயலு, வடக்கயும், கிழக்கயும்" வாங்குற அளவுக்கு யாரும் இல்ல... அவனுவ ரெண்டுபேருமே இத்து போனவனுவ. ஒழுங்கா பணமும் வந்து சேராது. புதுக்குடிகாரருக்கு குடுக்குறது நியாயமில்ல! நீங்க நம்ம ஊரு, நம்ம சொந்தம், அதுமட்டுமில்ல. கொடுக்கல், வாங்கல்ல நீங்களும் உங்க அப்பா மாதிரி நியாயமானவங்க. அசலூருக்கு விக்கிறத அடுத்த வயல்காரங்க நீங்க உங்களுக்கு விக்கிறது தான் நியாயம். நீங்க வாங்கீட்டிங்கன்னா அப்படியே வரப்பைத் தட்டி ரெண்டு வயலையும் ஒண்ணாக்கிடலாம்" - கோபாலு சொல்லிக் கொண்டே போனான்.

மாடசாமியின் நினைவுகள் பின்னோக்கிப் போய்க்கொண்டிருந்தன.

ஐந்து வருடங்களுக்கு முன்னால்...

நேரம் கிடைக்கும்போதெல்லாம், அப்பாவுக்கு உதவியாக வயல்காட்டு வேலைகள் அத்தனையும் இழுத்துப் போட்டுச்செய்வான்.

ஒரு சமயம், ஊருக்குத் தெற்கே உள்ள அய்யம்புள்ளி வயலில் (தென்னை மரத்தடி வயல், கல்காவடி வயல், குளத்தங்கரை வயல், குப்பைத் திரடு வயல், கள்ளுக்கடை வயல்... என்று வயல்களை அடையாளம் சொல்வது ஊர் வழக்கம்) தண்ணீர் பாய்ச்சுவதற்காக மண்வெட்டியைத் தோளில் போட்டுக்கொண்டு சென்றான்.

நல்ல உழவு நேரம், வயல் எல்லாம் தொழி அடித்து சேறும்சகதியுமாக இருந்தது. வரப்புல நடந்துபோவதே சிரமமாக இருந்தது.

நடுவைக்கு முன்னால நாலுபக்க வரப்பில் உள்ள புல்லைச் செதுக்கி, வயலில் போட்டு, மிதித்து அதையும் உரமாக்கிவிடுவார்கள். வரப்பும் களையின்றி சுத்தமாகிவிடும்.

தெற்குப் பக்க வரப்பில் நடந்தது போய், கிழக்குப் பக்க வரப்பில் நடப்பதற்கு திரும்பினான்.

வரப்பு வரப்பாக இல்லை!

இல்லை.

முத்துப்பாண்டி மாமா (கோபாலுடைய அப்பா) அந்த அளவுக்கு வரப்பை யெல்லாம் வெட்டி வயலுக்குள் வீசிக்கொண்டிருந்தார்கள்.

"என்ன மாமா... வரப்பை இப்படி வெட்டுறீங்க? எப்படி நடந்துபோறது?"

"உன்னை எவன் வரப்புல போகச் சொன்னான்? உன் வயலுக்குள்ள இறங்கிப்போ"

"என்ன மாமா" ரெண்டுபேருக்கும் பொதுவான வரப்பை நீங்க இப்படி வெட்டி வரப்பே இல்லாத மாதிரி ஆக்கிட்டிங்களே..."

"அப்படித்தான்டா வெட்டுவேன்... இப்ப என்னல பண்ணணும்ங்கிற...?"

"மாமா நீங்க பேசுறது நியாயம் இல்ல"

"நியாயம் இல்லன்னு தெரிதுல்ல. பொத்திக்கிட்டு போயாம்ல. ஏதாவது பேசுன... கையில என்ன இருக்குதுன்னு பார்த்துக்க"

அத்துமீறி வந்த ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு நேரே வீட்டுக்கு வந்தான் மாடசாமி.

"அப்பா... எங்க அம்மா...? அந்த முத்துப்பாண்டி மாமா இப்படிப் பண்றாங்க..."- ன்னு நடந்ததையெல்லாம் அம்மாவிடம் சொல்லிக் குமுறினான்.

"சரி...சரி...ஆத்திரப்படாதய்யா... நீ படிச்ச புள்ள... அவுகளும் நீயும் ஒண்ணா? பொறுத்தார் பூமியாள்வார் பொங்கினார் காடாள்வார்- நீ பொறுமை யாயிரு. வரப்பை வெட்டுனவன் வாழ்ந்ததில்லன்னு சொல்வாங்க. நமக்கு ஒரு குறையும் வராது" என்று மகனைச் சாந்தப்படுத்தினாள் அந்தத் தாய்.

✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣

"என்ன மச்சான் என்ன யோசனை?" -கோபாலின் குரல்கேட்டு பழைய நினைவுகளில் இருந்து நிகழ்காலத் துக்குள் வந்தான் மாடசாமி.

"என்ன மச்சான் இவ்வளவு யோசிக்கிறீங்க? அய்யம்புள்ளி வயல்னா அத்தனை பேரும் எனக்கு உனக்குன்னு வந்து நிப்பானுவ... நீங்க என்னடான்னா..."

"அதுக்கில்ல மாப்ள... நீ வரப்பை தட்டிட்டு, ரெண்டு வயிலயும் ஒண்ணாக்கிடலாம்னு சொன்னியா... அதான் ஏதோ ஒரு நினைவு"

"சரி என்ன மச்சான் சொல்றீய?"

"இந்தா பாரு, எங்கம்மா சொன்ன மாதிரி அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்காத. அது பொன்னு விளையிற பூமி! இன்னைக்குப் பணத்துக்கு அவசரம்னு வித்துட்டு, அப்புறம், நாளைக்கு நாலு காசு வந்த பிறகு, "அடடா அவசரப்பட்டு வித்துட்டோமேன்"னு கலங்கப்படாது. அதனால ஒரு தடவைக்கு ரெண்டு தடவை, ஒரு நாளைக்கு ரெண்டு, மூணு நாள் யோசனை பண்ணி ஒரு முடிவுக்கு வா"

"ஆமாய்யா...தம்பி சொல்றது சரிதான்... நீ எதுக்கும் ஒரு யோசனை பண்ணிக்கய்யா"

"இல்ல அத்தை... நான் விக்கணும்கிற முடிவுலதான் வந்திருக்கேன். அதுவும் உங்ககிட்ட விக்கணும்னுதான் வந்திருக்கேன்த்த... அதுல எந்த மாற்றமும் இல்லை" திடமாகச் சொன்னான் கோபால்.

✣ ✣ ✣ ✣ ✣ ✣ ✣

வாங்கியாச்சு! பத்திரம் எல்லாம் பதிவு பண்ணி, பட்டா மாற்றுவதற்கும் ஏற்பாடு பண்ணாயாச்சி.

"யய்யா... கோபாலு சொன்ன மாதிரி அந்த வரப்பைத் தட்டிட்டியன்னா ரெண்டு வயலும் ஒண்ணாயிடும் உழுறதுக்கு நடுறதுக்கு எல்லாம்

**பாவலர் மலரடியான்**


செகரியமாயிருக்கும்ல..."


"ஆமாம்மா...! ஆனா நான் அந்த வரப்பைத் தட்டமாட்டேம்மா! எந்த வரப்புல நடக்க முடியாம நான் வயலுக்குள்ள இறங்கி நடந்தேனோ அந்த வரப்பை எடுக்கவேண்டாம்மா.

அந்த வரப்புலதாம்மா புதுக்குடி ஊர் அண்ணாச்சி நடந்து போறாங்க. நாலுமாவடி அண்ணாச்சி வயலுக்குப் போகணும்னாலும் அந்த வரப்புல போறதுதான் அவுகளுக்கு சௌகரியம்.

அந்த வரப்பு இல்லன்னா, அவங்கல்லாம் பல வயல்களைக் கடந்துதான் அவங்கவங்க வயல் களுக்குப் போகணும். அந்த வரப்பு இருந்திச்சின்னா எல்லாருக்கும் உதவியாயிருக்கும். அதனால் அந்த வரப்பை நல்லா ஒரு அடி அளவுக்கு அகலப்படுத்தி வைச்சிருவோம் சரியாம்மா! நாலு பேருக்கு நல்லவனா இருந்தா மட்டும் போதாது, நாலு பேருக்கு உதவியாவும் இருக்கணும்னு அப்பா அடிக்கடி சொல்வாங்கள்ல..."


"ஆமாய்யா...எம்புள்ளை... நீ எப்பவும் நல்லாயிருப்பய்யா..." மகனை அணைத்து முத்தமிட்டாள் அந்த அன்புத் தாய்.





"உன் வீட்டு நாய் என்னைக் கடிச்சிட்டுது!"

"இருக்கவே இருக்காது! அது அசைவம் சாப்பிடாதே!"



"டாக்டர்! எனக்கு ஒப்பரேசன் செய்து முடிச்சதும் அந்த சாமி உண்டியலில் பணம் போடறீங்களே! எனக்கு சீக்கிரம் குணமாகணும்னு வேண்டிக்கிட்டீங்களா?"

"இல்லை, நான் எப்போது தப்பா ஒப்பரேசன் செய்தாலும், அப்போ உண்டியலில் 'அபராதமா' பணம் போடுவேன்!"

# கொடிய நோயாளர்களுக்கு இனிய செய்தி



Dr. T.G. கோவிந்தராஜன்
(ஸ்தாபகர்)

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ச்சியடைந்துகொண்டு வருகின்ற விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மருத்துவத் துறையிலும் தமது ஆதிக்கத்தை தொடர்ந்தும் செலுத்திக்கொண்டு வருகின்றது.

அதன்படி இன்றைய மருத்துவ உலகம் தொழில்நுட்பத்தின் உதவியுடன் அசுர வளர்ச்சியடைந்து பல்வேறு பரிணாமங்களைக் கண்டு நிற்கின்றது. முன்னொரு காலத்தில் மாற்றமுடியுமா என ஏங்கியிருந்த பல நோய்களை இன்றைய நவீன மருத்துவம் குணப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

இதயமாற்றுச் சிகிச்சை, சிறுநீரக மாற்றுச் சிகிச்சை என்று சவால்கள் நிறைந்தவையாகக் கருதப்பட்ட சிகிச்சை முறைகள் எல்லாம் இன்று சர்வசாதாரணமாக மாறிவிட்டது. இவ்வாறான சிகிச்சை முறைகள் உலகெங்கும் பரவிக் கொண்டிருக்கின்ற நிலையில் இலங்கையிலும் குறிப்பாக யுத்தத்தின் விளைவுகளால் பின்னோக்கிப் போயிருக்கும் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலும் தற்போதைய சாதகமான சூழலில் களமிறங்கி மக்களின் கவலைகளைப் போக்க முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஏற்கெனவே, இலங்கையில் வடகிழக்குப் பகுதிகளில் அரச வைத்தியசாலைகள் அரசாங்கத்தினாலும் வெளிநாட்டு உதவிகளினூடாகவும் நவீனமயப்படுத்தப் பட்டுக் கொண்டிருக்கின்ற இன்றைய காலகட்டத்தில் தனியார் முயற்சிகள் நோய் நிவாரணி தேடியிருக்கின்ற மக்களுக்கு இனிப்பாக செய்திகளாக அமைந்து கொண்டிருக்கின்றன.

அந்தவகையிலேயே தென்னிந்தியாவில் தனக்கெனத் தனியிடம் பிடித்துவைத்துள்ள சென்னை டாக்டர் காமாட்சி ஞாபகார்த்த மருத்துவமனை தங்களுடைய தகவல் தொடர்பு நிலையத்தை யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியிலுள்ள சுகந்தா நேசிங் மருத்துவமனையில் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த பல ஆண்டுகளாக நவீன வசதிகளுடன் சென்னையில் தமது சேவையை மக்கள் திருப்திப்படும் வகையில் மேற்கொள்ளப்படுகின்ற குறித்த மருத்துவமனை யாழ்ப்பாணம் நோக்கியும் தமது பார்வையைத் திருப்பியிருப்பது வரவேற்கப்படவேண்டிய விடயமாகும்.

ஏனெனில், தங்களுடைய மருத்துவ தேவைகளுக்காக யாழ். மக்கள் பெருமளவானோர் தமது பெருமளவு பணத்தைச் செலவழித்து சென்னைக்குச் செல்கின்றமை நாம் அறிந்ததே. அவ்வாறானவர்களுக்கு காமாட்சி மருத்துவமனையின் முயற்சி பயன்மிக்கதாகவே அமையும்.

இருதய சிகிச்சை, புற்றுநோய்ச் சிகிச்சை, சிறுநீரகச் சிகிச்சை - மாற்றுச் சிகிச்சை, எலும்புமுறிவுச் சிகிச்சைகள் போன்ற மருத்துவ உலகுக்குச் சவால்விடுகின்ற பல்வேறு நோய்களையும் தமது அதியுச்ச தொழில்நுட்ப வசதிகளூடாகவும், அதிசிறந்த வைத்திய நிபுணர்களூடாகவும் குணப்படுத்தி இலட்சக்கணக்கான நோயாளர்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்துக்கொண்டிருக்கின்றது இந்தக் காமாட்சி வைத்தியசாலை. இதன் குறிப்பிடத்தக்க விடயமாக குடும்பத்தில் மழலைச் செல்வம் இல்லையே என்று மனக்குறையுடன் வாழும் தம்பதியினருக்கு காமாட்சி மருத்துவமனையின் 'பிராணா பேட்ரிலிட்ரி' என்ற மருத்துவ மையம் நடாத்தப்பட்டு வருகின்றது.

தமிழகத்தின் பிரபல மகப்பேற்று மருத்துவ நிபுணரான டாக்டர் T.G.சிவரஞ்சினி இதனை நெறிப்படுத்திவருகின்றார்.

இயற்கையாக கருத்தரிக்கமுடியாத தம்பதியினருக்கு அவர்களின் குறைபாடுகளைக் கண்டறிந்து அதற்கேற்ற வகையில் செயற்கைக் கருத்தரிப்பை மேற்கொள்வதில் பாரிய வெற்றிகளைக் கண்டு வருகின்றது.

இவ்வாறு தொடர்ந்தும் மருத்துவ உலகில் சாதனைகளைப் படைத்து வருகின்ற காமாட்சி மருத்துவமனை தமது தொடர்பு மையத்தில் யாழ். மண்ணில் அமைத்துக் கொள்வது யாழ். மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமே ஆகும்.



Dr. T.G. சிவரஞ்சினி

யாழ். மண்ணில்

# காமாட்சி மருத்துவமனை



இந்தியாவில் தொடர்புகொள்ள:
0091 - 8056 300 300

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## சிறுபோக வேளாண்மையும்...

அதனைக்கொண்டு நடத்துவதிலும் பிரச்சினைகளை எதிர்கொள்வதிலுமே எல்லாவற்றுக்கும் தீர்வுகளும் பலன்களும் கிடைக்கின்றன என்பது மாத்திரமே உண்மையாகும்.

இதற்கிடையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள யானைப் பிரச்சினைகள் மக்களது விவசாயத்தினையும், இருப்பினையும் பாதிப்பதாக உள்ளது. இதற்கான தீர்வுகள் எடுக்கப்படும் என்பது பெரும் சிக்கலானதாகவே இருக்கிறது. பல தடவைகளில் மாவட்ட மட்டத்தில் கூட்டங்கள் நடத்தப்பட்டிருந்தாலும் இதுவரை தீர்வுகளை எட்டாத ஒரு பெரிய பிரச்சினையாக இது இருந்துவருவது மக்களது முன்னேற்றத்தில் பெரும் தடையாகவே இருக்கிறது.

மட்டக்களப்பு நகரில் அண்மையில் இப்தார் நோன்பு நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர், மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட, நடைபெறவுள்ள அனைத்துவிதமான அபிவிருத்திகளின் பலனை மக்கள் முழுமையாக அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவே அதிகாரிகளாகிய நாங்கள் தொழிற்படுகிறோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் நகரங்களும் மக்கள் குடியாட்டங்களும் சுமார் 30 வீதமான நிலப்பரப்புக்குள்ளேயே காணப்படுகிறது. மிகுதியானது விவசாயத்துக்கும் தொழில்துறைக்குமானதாகும்.

அந்தவகையில் விவசாயத்துறை சார்ந்து குளங்கள் திருத்தியமைத்தல், நீர்வழங்கல் வாய்க்கால்கள் சீரமைத்தல், புதிதாக அமைத்தல் எனச் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றில் புதிய பாலங்கள் அமைத்தல் சில முக்கிய விவசாயப் பாதைகளை இலக்காக வைத்தே நடத்தப்படுகின்றன.

இதில் மாவடியோடைப் பாலம் மிக முக்கியமானதாகும். அத்துடன் கிரான்புல் கட்டு, கித்துள் உறுகாமம் குளங்களின் இணைப்பு, உன்னிச்சைக் குளத்தின் மேம்படுத்தல் எனப் பலவற்றினைச் சொல்லிக் கொள்ளமுடியும். அத்துடன் புளுக்குணாமை அம்பாறை மாவட்டத்திற்கும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் நீர்வழங்கக்கூடியதாகும். அதேபோன்று இங்கினியாகல குளம் இதில் இன்னுமொருபடியான மேம்பாட்டினை விவசாயிகளுக்கு வழங்குகிறது.

தற்போது விவசாயிகளுக்கு நட்டம் ஏற்பட்டால் நஷ்டஈடுகள் வழங்கப்படுகின்றன, ஓய்வூதியம் வழங்கப்படுகின்றன, காப்புறுதிக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றன, மானிய விலையில் 500 ரூபாய்க்கு உரம் வழங்கப்படுகிறது.

மக்களின் செழுமையான வாழ்விற்காக, மக்களின் நலனுக்காக எப்போதும் அரச அதிகாரிகள் செயற்படவேண்டும். விடுத்து, அவர்களது தொழிலைப் பாதுகாத்துக்கொண்டு பிரச்சினையில்லாது ஓய்வுக்குச் செல்ல வேண்டும் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது என்பது ஒரு சில அதிகாரிகளுக்குப் புரிவதாக இல்லை.

அந்தவகையில் சிறுபோக விவசாயச் செயற்பாடுகள்கூட மக்களின் பொருளாதார முன்னேற்றம் சார்ந்தே செயற்படுத்தப்பட வேண்டும். மட்டக்களப்பு மாவட்டமானது வரட்சி, வெள்ளம் என அனைத்து அனர்த்தங்களாலும் பாதிக்கப்படுகின்ற ஒரு மாவட்டமாகும். அந்தவகையில் அனைத்து பிரிவினருடைய ஒருங்கிணைந்த சேவையானது இதில் முக்கியப்படுகிறது. கடந்த காலங்களில் யுத்தம் போன்ற கொடுமைகளால் பின்தங்கிய நிலையில் விவசாயம் உள்ளிட்ட தொழில்களில் ஈடுபட முடியாத நிலை காணப்பட்டது. ஆனால் தற்போதுள்ள அமைதிச் சூழல் மக்களின் வாழ்க்கைத் தரத்துக்கான முன்னேற்றத்துக்குரியதாக கொள்ளப்படவேண்டும்.

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## கறுப்பு ஜூலை

தொடர்ந்து ஐந்து நாட்களாக தமிழருக்கு எதிராக நடாத்தப்பட்ட தாக்குதல்களில் 359 பேர் கொல்லப்பட்டதாகவும் ஆயிரம் பேர் காயப்பட்டதாகவும் பின்னர் அரசாங்கம் அறிவித்தது. ஆனால், 3ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டதோடு 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளும் அடித்துநொருக்கப் பட்டதாக சுயாதீனத் தகவல்கள் தெரிவித்தன.

1 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். இவர்களை பராமரிப்பதற்காக 25 முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட கொள்ளையர்களிடமிருந்து சுமார் 8 கோடி பணமும், ஆபரணங்கள், வேறு சொத்துக்களும் வெள்ளவத்தைப் பொலிஸாரால் மட்டும் கைப்பற்றப்பட்டிருந்தது.

அதேவேளை இக்கலவரத்தின் எதிரொலியாக வெலிக்கடைச் சிறையில் இரண்டு நாட்கள் நடைபெற்ற வெறியாட்டத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ்ப் போராளிகள் 53 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

சிறைக்குள் இருந்து தாக்குதல் மேற்கொண்ட சிங்களக் காடையர்களை எதிர்த்துப் போராடி தமது உயிர்களைப் பாதுகாத்துக்கொண்ட போராளிகள் பின்னர் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர். அச்சம்பவத்தில் உயிர் தப்பியவர்களுள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பேரழிவை ஏற்படுத்திய 83 கலவரத்தில் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆசி தமிழ் மக்களுக்கு எதிராகக் கொடூரங்களைப் புரிந்த காடையர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் கிடைத்திருந்தன என்று தமிழர் தரப்பால் அப்போது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எது எப்படியோ, 83 கலவரம் ஏற்படுத்திய அழிவுகளையும் அவலங்களையும் இன்னும் தமிழ் மக்கள் மறக்காதவர்களாகவும் அவற்றில் இருந்து மீளமுடியாதவர்களாகவும் இருக்கின்றனர். அதேபோன்று குறித்த கலவரம் எண்ணெய் ஊற்றி வளர்த்த யுத்தத்தின் தாக்கங்களில் இருந்து மீளமுடியாமல் முழுநாடுமே தவித்துக் கொண்டிருக்கிறது. அவற்றில் இருந்து மீள்வதற்காக இன்றுவரை ஒவ்வொருவரும் போராடிக் கொண்டிருக்கிறோம்.

இந்நிலையில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்தம் அற்ற சமாதான சூழலை வலுப்படுத்தி ஒன்றுபட்ட இலங்கைக்குள் வளமாக வாழமுடியும் எனச் சிறுபான்மை மக்கள் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் அண்மைக் காலமாக முஸ்லிம் மக்களுக்கு எதிராக இனவாதக் கருத்துக்களும் செயற்பாடுகளும் சிறுபான்மை மக்கள் மத்தியில் மீண்டும் ஓர் பதற்றத்தை தோற்றுவிப்பதோடு கடந்த கால அசிங்கங்களையும் மனத்திரைமுன் அடிக்கடி காண்பிக்கின்றது.

இதுதொடர்பில், அதிகாரத்தைக் கையில் வைத்துள்ள அனைத்துத் தரப்பும் குறுகிய சிந்தனைகளைத் தவிர்த்து இலங்கை என்ற ஒன்றுபட்ட தேசத்தின் ஒளிமயமான எதிர்காலத்திற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதே கடந்துசெல்கின்ற இந்தக் கறுப்பு ஜூலையில் சிறுபான்மை மக்களின் விநயமான வேண்டுகோளாக இருக்கின்றது.



பிரெஞ்சுப் பேரழகியின்
கட்டழகில்
மயங்கிப் போனான் மருதநாயகம்!

அவள் மகிழ்வதற்காகவே
பிரஞ்சுக்காரர்களுக்காக
களம் பல கண்டான்!

"மருதநாயகம் நில்!
அந்நியனுக்காக தாயகத்தை
துகிலுரியலாமா?

எந்தக் கேள்வியும் அவன்
செவியில் ஏறவில்லை!
அவள் அழகும் புன்னகைப்
பொலிவும் நெஞ்சுக்குள்
போதையாக நிறைந்திருந்தது!

அவள் என்ன சொன்னாலும்
அவன் நம்பினான் அவள்
என்ன சொன்னாலும்
அவன் ஆடினான்!

உன் தாயகத்தை உடனே
சுடுகாடாக்கு என்று
உத்தரவிட்டிருந்தாலும்
மறுப்பே இல்லாமல்
பொறுப்பு ஏற்றிருப்பான்?"

பிரெஞ்சுக்காரர்களை எதிர்த்து
கிளம்பியோரை போரிட்டு
அடக்கினான்! உருவிய வாளில்
உடன்பிறந்தார் இரத்தம்!

சீவிய தலைகள் சொந்த
மக்களுடையவை எல்லாமே ஒரு
பெண்ணின் புன்னகைக்காக!
உதடுகளால் ஊட்டிவிடுவாள்!

கட்டித்தழுவி கால்களால்
அவனை பிணைப்பாள்
நெற்றியில் தொடங்கி
உள்ளங்கால்வரை
முத்தத்தால் நனைப்பாள்

உதடுகளில் ஸ்பரிசம்
உடலெங்கும் புல்லரிப்பு!
மாயமோகினியின்
மதன பாணங்கள்!

மார்பை பிளக்கிறது மார்பெழில்
இரண்டும் மனதை
துளைக்கிறது மதன பாடம்!

மருதநாயம் தன்னை மறந்தான்
மருதநாயகம் தன் மக்களை
மறந்தான் மருதநாயம் தன்
மண்ணை மறந்தான்.

ஒருநாள் பிரெஞ்சு
ஆக்கிரமிப்பாளர்கள்
மருதநாயகத்தையே மறந்து
போனார்கள்!

அவமதிப்புக் கண்டு மருதநாயகம்
வெகுண்டெழுந்தான்
வெள்ளையர் பக்கம் விரைந்தான்




பிரித்தாளுவதில் வல்ல பிரிட்டிஷ்
ஆதிக்கம் தமிழ்நாட்டை சூறையாட
தமிழ் நாட்டவனையே
தத்தெடுத்துக் கொண்டது!

மருதநாயகம் அல்லது
கான்சாகிப் அவன் பெயரைக்
கேட்டாலே சொந்த மக்கள்
மனம்நொந்தார்கள்
அடிமையின் சேவகத்தை
அந்நியர் மெச்சினர்! தமிழ்
நாட்டின் மாணிக்கம் நீதான்
ஏன் மன்னனே நீதானே!

புகழ்ச்சிகள் எல்லாம் மறைமுக
கேலிகள் என்பது
மருதநாயகத்தின்
புத்தியில் ஏறவில்லை
பூரித்துப் போனான் - புஜம்
தட்டினான் சுதந்திரம்
என்ன சுதந்திரம் அது
வெட்டிப்பேச்சு! வெள்ளையர்கள்
சொர்க்கத்தையே
தரப்போகிறார்கள் தன் மக்களிடம்
அந்நியனை மெச்சினான்.
மதுவில் நீந்தினான் மங்கையில்
தூங்கினான் வெள்ளையர்கள்
அவன் விரும்பியதை
விநியோகத்தனர்
என்ன பதவி வேண்டும்
எடுத்துக்கொள் எங்களுக்கு
உதவி வேண்டும்
தந்துகொண்டேயிரு!

இறுதியாய் ஒரு நாள் மருதநாயகம்
கண் திறந்தான் அந்நியர்
கையில் அம்பாக இருந்தவன்
சோதரர் அணியில் அங்கமாக
மாறினான்.

"எதிரியின் நண்பனாக
இருப்பதைவிட
எதிரியாக இருப்பதே மேல்!"
மருதநாயகம் முழங்கினான்!

உங்களுக்கு எதிரியாக
இருப்பதில் மகிழ்ச்சி!
இனி என் தலைமுறையை
என் மக்கள் மன்னிப்பார்கள்
என்றான் மருதநாயகம்

எதற்கு மன்னிப்பு?
என்றான் வெள்ளையன்
எவன் ஒருவனையும்
ஆராயாது தெளிந்தால்
தெளிந்தவனுக்கு மட்டுமல்ல
அவன் தலைமுறைக்கும்
தீராத துன்பம் வரும்!"

ஆராய்ந்து தெளிந்தால்
என் எதிரிகளை
இனம் கண்டுவிட்டேன்
இனி என் தலைமுறையை
துரோகிகளின் வாரிசுகளாக
வரலாறு தூற்றாது
மருதநாயகம் வீரன் என்று
போற்றப்படுவான்! அவன்
வரலாறு பேசப்படும்
மருதநாயகம்
புன்னகைத்தான்!

**"தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை**
**தீரா இடும்பை தரும்"**

**அதிகாரம்: 51, குறள்: 508**

## சிந்தியா பதில்

**சிந்தியா! தமிழர்களுக்கு எதிரான சம்பவங்களுக்கு சரித்திரப் பின்னனியை விளக்கும் வகையில் சாட்சி அளிக்கப் போவதாக சம்பந்தன் ஐயா கூறியுள்ளாரே?**

**கு.செல்வநாயகம், யாழ்ப்பாணம்.**

கடந்த காலங்களை நோண்டிப் பார்த்தால் சுத்தமான கைகள் என்று இங்கு எதுவுமே இருக்கப் போவதில்லை என்பது யாவரும் அறிந்த இரகசியம்.

எனவே, உண்மையில் தமிழ் மக்களுக்கு நல்லது நடக்கவேண்டும் என்று விரும்புபவர்கள் வரலாறுகளை நோண்டுவதை விட்டுவிட்டு தாங்கள் வாழும் காலத்தில் தங்களுக்குக் கிடைக்கின்ற வாய்ப்புக்களை, தங்களை வளப்படுத்துவதற்கான வாய்ப்புக்களாக நோக்காமல் தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கான திறவுகோல்களாகப் பயன்படுத்தல் வேண்டும்.

இது சம்மந்தன் ஐயாவுக்கும் பொருந்தும் என்று நினைக்கின்றேன்.

ஃஃஃஃஃஃஃஃஃ

**காரைநகரில் இடம்பெற்ற துஷ்பிரயோகம் பற்றி சிந்தியா என்ன நினைக்கின்றீர்?**

**ஆர்.தேவகி, கிளிநொச்சி.**

எம்மை இறுக்கிவைத்திருந்த கயிறுகள் விலக்கப்பட்டதனால், கிடைத்த சுதந்திரம் எம்மைநோக்கி பல விடயங்கள் வருவதற்கு பலதைநோக்கி நாங்கள் ஈர்க்கப்படுவதற்கும் ஏதுவான சூழலை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்தப் பரந்தவெளியில் நாம் ஒவ்வொருவரும் நம்மை நாமே பார்த்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

இப்படியான நிலையிலேயே காரைநகர் சம்பவம் இடம்பெற்றிருப்பதாக தெரிகிறது. சிறுமிகளை அவர்களின் சம்மதம் இருந்தாலும் பாலியல்ரீதியில் தொடர்புகளைப் பேணுவது தவறு என எமது சட்டமும் சொல்லுகிறது. அந்த வகையில் தவறு யார் செய்தாலும் தண்டிக்கப் படவேண்டியது அவசியம்.

அதேவேளை அதற்கான சூழல் ஏற்படுவதை கவனிக்காமல் இருந்த பெற்றோரும் குற்றத்தின் பங்குதாரர் ஆகின்றார்கள். இனிமேலாவது தங்களினதும், தங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். உறுதிப்படுத்திக்கொண்டால் ஏனையவர்களை நோக்கிக் கையைகாட்டும் நிலைமை ஏற்படாது அல்லவா.

ஃஃஃஃஃஃஃஃஃ

**சிந்தியா! அண்மையில் நடந்த அரசியல் ஜோக் ஒன்று கூறுங்கள்?**

**எவ்.எம்.சியாம், புத்தளம்.**

சியாம் என்னை ஏன் கேட்கின்றீர்கள்? தினமும் காலையில் செய்திகளைப் படித்தீர்கள் என்றால் ஒவ்வொரு நாளும் உங்களுக்கு ஜோக் கிடைக்கும்.

ஃஃஃஃஃஃஃஃஃ

**சிந்தியா! மலேசியாவின் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டமை சதியா? அல்லது விதியா?**

**து.சங்கவி, நல்லூர்.**

உக்ரேன் - ரஷ்யப் பிணக்கில் எந்தவித தொடர்பும் இன்றி தானுண்டு, தன் வேலை உண்டு என்று இருக்கும் நாடு மலேசியா.




அதனுடைய விமானம் சுட்டுவீழ்த்தப்படவேண்டிய தேவை யாருக்கும் கிடையாது.

ஆனால் யாரையோ வீழ்த்த, யாரோ செய்த சதியில் விதிவசத்தால் வந்து மாட்டியிருக்கிறது மலேசியன் விமானம் என்பதுதான் உண்மை.

ஃஃஃஃஃஃஃஃஃ

**சிந்தியா! முகப்புத்தகக் காதலால் தற்கொலை செய்யும் முட்டாள்களை என்ன செய்யலாம்?**

**எம்.சாளினி, கொழும்பு-06.**

சாளினி நம் பிறப்பின் அர்த்தத்தை புரிந்து கொள்ளாத மூடர்கள் ஒற்றைக் காதலில் தோற்றவுடன் வாழ்வில் தோற்றதாக எண்ணி கயிற்றில் தொங்குகிறார்கள்.

இவ்வாறானவர்கள் முகப்புத்தகத்தில் தோன்றிய முகம்தெரியாத யாரோ ஒருத்திக்காக வாழ்வை மாய்ப்பதற்கு முன்னர் தங்கள் முகத்தை தோற்றுவித்த தாயின் முகத்தை ஒரு கணம் எண்ணிப் பார்ப்பார்களாயின் முடிவு சுபமாக அமையும்.

ஃஃஃஃஃஃஃஃஃ

**சிந்தியா! தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் இலங்கைக்கு சறுக்கிவிட்டதே?**

**சு.கவின், மாசார்.**

ஆம். இரண்டாவது டெஸ்ட்டில் வெற்றிக்கான வாய்ப்பு இலங்கைக்கு பிரகாசமாகவே இருந்தது. ஆனால் வர்ண பகவான் தென் ஆபிரிக்கர்களுக்கு ஆதரவாக முடிவெடுத்ததால் இலங்கை தொடரை இழந்து நிற்கின்றது.

ஆனாலும் இறுதிவரை போராடும் குணமுள்ள இலங்கை இத்தொடரிலும் இன்னொரு முறை தம்மை நிரூபித்திருக்கின்றது, அதுதான் முக்கியமானது.

விளையாட்டில் மட்டுமல்ல, வாழ்க்கையிலும் வெற்றி - தோல்வி என்பது இரண்டாம் பட்சம்தான். இறுதிவரை வெற்றிக்காக போராடுகின்ற தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் தான் கற்றுக் கொள்ள வேண்டியது - அத்தியாவசியமானது. அந்தவகையில் இலங்கை அணியைப் பாராட்டலாம். அடுத்த தொடரை வெல்வார்கள் என்ற நம்பிக்கையோடு...

ஃஃஃஃஃஃஃஃஃ

**சிந்தியா! 2020 இலங்கை எவ்வாறு இருக்கும் என்று ஆரூடம் கூறமுடியுமா?**

**எல்.சுபாஸ், மன்னார்.**

நாடு இன்னும் பொருளாதாரப் பிரச்சினைகளில் இருந்து மீளவில்லை. யுத்தம் முடிந்து ஐந்து ஆண்டுகள் கடந்தபோதிலும் பொருளாதாரப் பிரச்சினைகளோடு சத்தமில்லாத யுத்தம் ஒன்றை மக்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வராவிட்டால் சில வருடங்களில் ஆரூடம் கூறமுடியாத விளைவுகளை நாடு சந்திக்கக் கூடும் எனப் பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள்.

இந்த இலட்சணத்தில் 2020 இல் நாடு எப்படி இருக்கும் என்று ஆரூடம் கூறமுடியுமா...?

ஃஃஃஃஃஃஃஃஃ

**தற்போதைய சூழலில் சிந்தியா யாருடைய ரசிகராக இருக்கின்றீர்?**

**ம.நிரூஜா, திருகோணமலை.**

கடந்த சில ஆண்டுகளாக சிந்தியாவின் ரேஸ்ட்டுக்கு எவையுமே பொருந்திவரவில்லை. அவ்வப்போது சிற்சில காட்சிகளை தரித்து நின்று ரசித்துவிட்டு போய்க்கொண்டே இருக்கிறேன்.

இன்றைய உலகின் இயந்திர வேகத்துக்கு அதுதான் சரியானதாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

நிரூஜா! நீர் எந்த விடயத்தில் என்று குறிப்பிடாமல் கேள்வி கேட்டுவிட்டதால் நானும் பொதுவாகவே பதிலளித்துவிட்டேன்.

ஃஃஃஃஃஃஃஃஃ

**சிந்தியா! இன்னுமொரு 50 வருடங்களில் பத்திரிகைத் துறை எப்படி இருக்கும்?**

**இ.நிரூஜன், தம்பலகாமம்.**

தொழில்நுட்ப வளர்ச்சியைப் பார்க்கும் போது பத்திரிகைத் துறையின் எதிர்காலம் கொஞ்சம் கவலைக்கிடமாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். இன்று கைபேசிகள் ஊடாக ஊடகங்கள் உள்ளங் கைகளுக்குள் வந்துவிட்டன.

அதேவேளை பத்திரிகைகளும் தங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்காக நவீனமயப்படும் பல்வேறுவிதமான புதிய நுட்பங்கள் உள்நுழையும் என்று எதிர் பார்க்கலாம்.

எதுஎப்படியாயினும், காலையில் எழுந்து தேனீரும் கோப்பையுமாக இருப்பவர்களின் எண்ணிக்கை பாரிய வீழ்ச்சியைச் சந்திக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# காதிலை பூ கந்தசாமி

*" நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்று மில்லை. "*

**வணக்கமுங்கோ!**

**பட்டுவேட்டிக்கு கனவுகண்டு கட்டியிருந்த வேட்டியையும் களவு கொடுத்த கதைதானுங்கோ இண் டைக்கு தமிழ் மக்களின்ர கதை.**

**ஏன் உப்பிடிச் சொல்லுறன் எண்டு திங் பண்ணுங்கோ. பிளீஸ். வடக்கு, கிழக்கு இணைந்த நிலப் பரப்புத்தான் தமிழ் மக்களின்ர தாயகப்பகுதி எண்டுதானுங்கோ உரிமைக் கோஷம் எழுப்பி தமிழ்ச் சனம் போராடிச்சுதுங்கோ.**

கிழக்கு மாகாணம் புலிகளின்ர கட்டுப் பாட்டை இழந்து அமைதி அடைஞ்சபோது, வடக்கையும் கிழக்கையும் பிரிச்சுப் போட வேணும் எண்டு பெரும்பான்மை இன வாதிகள் சதித்திட்டம் போட்டு அதை நிறைவேற்றியும் போட்டாங்கள்.

இப்ப சுதந்திர முன்னணியின் தலைவ ராகவும், அமைச்சராகவும் இருக்கிற விமல் வீரவன்ச, ஜே.வி.பியின்ர பிரசார செயலாளராக இருந்த போதுதானுங்கோ. இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்தை சட்டரீதியாகப் பிரிக்க முனைப்புக் காட்டி அதில் வெற்றியும் பெற்றார்கள்.

அது மட்டுமில்லாமல் கிழக்கு மாகா ணத்தில் வாழுகின்ற முஸ்லிம், சிங்கள மக்கள் கிழக்கு மாகாணம் வடக்குடன் இணைந்து இருப்பதையும், அதன் காரண-மான அபிவிருத்தி மற்றும் அமைதி என்பவற்றை இழப்பதையும் கிழக்கு மக்கள் விரும்பவில்லை.

வடக்கில் யுத்தம் ஆரம்பமாகி பல உயிர்கள் அழிந்துகொண்டிருந்ததாலும், கிழக்கு மாகாணத்துக்கான தனியான நிர்வாகக் கட்டமைப்பு அவசியமானதாக உணரப்பட்டதாலும் கிழக்கு மாகாண மக் கள், கிழக்கு மாகாணம் தனியான மாகா ணமாகுவதை ஏற்றுக்கொண்டார்கள்.

மொத்தத்தில் தாயகம் என வர்ணிக்கப் பட்டு வந்த வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டாகப் பிரிந்தது. இப்போது வடக்கு மாகாணம் இரண்டாக பிரிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் தோன்றியுள்ளதுங்கோ.

வடக்கு மாகாணத்துக்கான அதிகாரங்கள் அனைத்தும் யாழ்ப்பாணத்திலேயே மையப் படுத்தப்பட்டுள்ளதாகவும் வடக்கின் யாழ்ப் பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவு னியா ஆகிய மாவட்டங்கள் தனி மையப் படுத்தப்பட்டுள்ளதைப் போலவும் ஒரு உணர்வு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக வடக்கு மாகாண சபையை, யாழ்ப்பாண மாகாண சபை என்றே ஏனைய மாவட்ட மக்கள் அழைக்கின்றார்கள்.

வடக்கு மாகாண சபையை பொறுப்பேற் றுள்ள தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தமது அரசியல் இலாபங்களுக்காகவும், தத்தமது சண்டித்தனங்களுக்கான களங்களா கவும் வடக்கை தமக்கு பிரித்துக்கொண் டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தை தமிழரசுக் கட்சி தமது ஆளுகைக்குள் வைத்துள்ளது, ஆகையால் மாகாண சபையையும், அதன் முதலமைச்சர், அவைத்தலைவர் மற்றும் பெரும்பாலான சபை உறுப்பினர்களையும் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள பதின் மூன்று உள்ளூராட்சி சபைகள் கூட்டமைப் பின் கட்டுப்பாட்டில் உள்ளபோதும், அவர் களுக்கிடையேயான கட்சி மேலாதிக்கப் போட்டி காரணமாக ஆளுங்கட்சிக்குள்ளேயே முட்டிமோதிக் கொண்டு உள்ளூராட்சி சபை-களை சீராக இயங்கவிடாமல் முடக்கிப் போட்டுள்ளார்கள்.

கிளிநொச்சியை சிறிதரன் எம்.பி தனது கட்டுப்பாட்டுக்கு வைத்துள்ளார். அவரது கைப் பொம்மையாக மாகாண சபை அமைச்சர் குருகுலராஜா இருக்கின்றார். வவுனியாவை ஈ.பி.ஆர்.எல்.எப். தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. மன்னாரை ரெலோ தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. வவுனியா வுக்கு ஒரு மாகாண அமைச்சர் சிவமோகன், மன்னாருக்கு ஒரு மாகாண அமைச்சர் டெனிஸ் வரன் நியமித்துக் கொண்டுள்ளார். முல்லைத் தீவுக்கு எம்பியும் இல்லை. மாகாண அமைச்சரும் இல்லை. கூட்டமைப்பை பொறுத்த வரை முல்லைத்தீவு வாக்காளர்கள் குறைவான வடக்கின் புறம்போக்கு நிலப்பகுதியாகவே உள்ளது என்று முல்லைத்தீவு மக்கள் ஆத்திரமடைந்துள்ளார்கள்.

தற்போது பிரச்சினை என்னவென்றால், வட மாகாணத்துக்கான பாரிய குடிநீர்த் திட்டமான இரணைமடுக் குளத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தமிழ்க் கூட்ட மைப்பு இரண்டாக பிளவுபட்டுள்ளது.

அத்திட்டத்தை இரணைமடுவிலிருந்து யாழ்ப் பாணத்துக்கு நீர்வழங்கும் திட்டமாகக் காட்டி, கிளிநொச்சி மக்களின் வளத்தை யாழ்ப் பாணத்துக்கு அபகரித்துச் செல்வதா எனும் பிரச்சினையை கிளப்பிவிட்டுள்ளார்கள்.

இப்போது கிளிநொச்சியிலிருந்து யாழ்ப் பாணத்துக்கு தண்ணீர் வழங்க முடியாது என்ற சரச்சையை கிளப்பிவிட்டு, மாகாண சபைக்கு திட்டமும், பாரிய நிதியும் கிடைத்துள்ள நல்ல வாய்ப்பை செய்துமுடிக்காமல் இழுத்தடித்துக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் அத்திட்டத்துக்கான நிதி திரும்பிச் செல்லக்கூடிய ஆபத்தும் உள்ளது.

பார்த்தியளோ சிங்களவர் உரிமை தருகின மில்லை எண்டு சண்டைபிடிச்ச தமிழன், இப்ப தமிழனுக்கு தமிழன் குடிக்கத் தண்ணீர் தரமாட்டோம் எண்டு சண்டை பிடிக்கிற காலமாகிட்டுது.

ஆற்றைக்கடக்கும் வரைக்கும்தான் அண் ணன் தம்பி. கடந்துவிட்டால் நீ யாரோ, நான் யாரோ எண்ட மாதிரித்தானுங்கோ இருக்குது. ஒற்றுமையை வலியுறுத்தி வாக்கு வாங்கி அரசியல் சுகபோகத்தில தங் கட குடும்பத்தை வாழ வைச்சவை, இப்ப மக்களுக்கு விசயத்தை விளக்கிச் சொல்லி எல்லோரும் நன்மையை அனுபவிக்காமல் சனத்தை பிரிச்சுவச்சி யாழ்ப்பாணம், கிளி நொச்சி எண்டு மல்லுக்கு நிக்கினமுங்கோ.

**"யாவும் கலப்படமற்ற கற்பனை"**

# இந்தவாரம் உங்கள் பலன்

(31.07.2014 தொடக்கம் 06.08.2014 வரை)

## மேடம்

உறவினர்களின் எதிர்பாராத திடீர் வரவுகளால் வீண் பொருட்செலவுகள் உண்டாகலாம். வங்கிகளில் இருந்து வெகு காலமாக எதிர்பார்த்து இருந்த உதவித்தொகை கள் கிடைக்கும். பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்பட்டாலும் அவர்களால் பாராட்டுக்களும் பொருள்வரவும் உண்டாகும். காதல் சம்பந்தமான விசயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவும். உடம்பில் சளி, ஒவ்வாமை போன்ற தொல்லைகள் வந்துபோகும். கணவன் – மனைவி உறவுகளில் இதுநாள் வரை இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் தீர்ந்து ஒற்றுமை உண்டாகும். செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச்சொல்லுக்கு ஆளாக நேரிடலாம். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## இடபம்

அண்டை அயலர்களுடன் காரணமற்ற சிறிய விசயங்களுக்காக வீண் பிரச் சினைகள் உருவாக இருப்பதால் கவனமுடன் பேசிப் பழகுதல் நல்லது. நீண்டகாலமாகக் காணாமற் போன பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்ப வீடு வந்துசேரும். வேற்று மதத்தவரால் வெளிநாடு சென்றுவருவதற்கான முயற்சிகளில் நல்ல தகவல்களை எதிர்பார்க்கலாம். மாணவர் களுக்கு கல்வியில் பரிசு மற்றும் பாராட்டுக்களைப் பெற வாய்ப்பு உள்ள காலமாகும். உடம்பில் வாயு, வயிறு சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். தென்திசையில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்பீர்கள். மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகைகள் மற்றும் பரிசு பாராட்டுக்களும் கிடைக்கும்.

## மிதுனம்

வெளிநாட்டில் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் இருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும். புதிய கடனகள் வாங்கு வதைத் தவிர்த்தல் நல்லது. தீராத நாட்பட்ட நோய்கள் தீர்வதற்காக வேறு மருத்துவர்களின் உதவிகளை நாடுவீர்கள். வடக்குத்திசையில் இருந்து பெண்களால் எதிர்பாராத ஆதாயம் உண் டாகும். மற்றவர்களின் விசயங்களில் அநாவசிய மாகத் தலையிட்டு சிக்கலில் மாட்டிக்கொண்டு அவதிப்படாதீர்கள். அலுவலகப் பணியாற்றுபவர் களுக்கு இடமாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ள காலமாகும். சகோதர சகோதரிகளின் தடைப்பட்டு வந்த திருமண காரியங்கள் சம்பந்தமாகப் புதிய கடன்களை வாங்குவீர்கள்.

## கடகம்

குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவர எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும். உடல்நிலையில் இதுநாள் வரை இருந்துவந்துள்ள மருத்துவச் செலவுகள் சற்று குறையும். குலதெய்வ ஆலய வழிபாடு களைச் செய்துவருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உற்றார், உறவினர்களின் திடீர் வரவுகளால் வீண் பொருட்செலவுகள் உண்டாகும். ஒரு சிலருக்கு வீடு மற்றும் தொழிற்சாலைகளைத் திருத்திக் கட்ட வாய்ப்பு உள்ளது. காதல் விசயங்களில் பெண்களிடம் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நல்லது உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு எதிர் பார்த்த இடங்களுக்கு இடமாற்றம் ஏற்படலாம்.

## சிங்கம்

உடல்நிலையில் இதுநாள் வரை இருந்து வந்துள்ள மருத்துவச் செலவுகள் சற்று குறையும். குலதெய்வ ஆலய வழிபாடு களைச் செய்து வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உற்றார் உறவினர்களின் திடீர்வரவு களால் வீண் பொருட்செலவுகள் உண்டாகும். மற்றவர்களுக்கு உதவிசெய்வதில் எச்சரிக்கையு டன் இருக்கவும். தேவையற்ற புதிய நட்புக் களால் மனநிம்மதி இழக்க வாய்ப்பு உள்ளதால் மிகுந்த கவனமுடன் இருக்கவும். கட்டி முடிக்கப்படாத தடைப்பட்ட ஆலயப் பணிகளை மீண்டும் தொடர்ந்து செய்வீர்கள். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகவும் கவனமாக பேசிப் பழகுதல் நல்லதாகும்.

## கன்னி

குடும்பத்தில் தந்தையின் மருத்துவச் செலவுகளுக்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவர எண்ணிய எண்ணங்கள் நிறை வேறும். நீண்டகாலமாக இருந்துவந்துள்ள காதல் விசயங்களில் நல்ல முடிவுகள் கிடைக்கும். கணவன் – உறவுகள் சுமாராகக் காணப்படும். ஒரு சிலருக்கு வீடு மற்றும் தொழிற்சாலைகளை பழுதுபார்ப்பதன்மூலம் பொருட்செலவுகள் ஏற்பட லாம் உற்றார் உறவினர்களின் திடீர்வரவால் பொருட்செலவுகளும் புதிய பொறுப்புக்களும் உண்டாகலாம். நிலபுலன்கள் சம்பந்தமான பழைய வழக்குகள் மீண்டும் தொடரும். உத்தியோகம் பார்ப்பவர்கள் தங்களது மேலதிகாரி களுடன் மிகவும் பொறுமையுடன் பணியாற்றுதல் நல்லதாகும்.

## துலாம்

மற்றவர்களை நம்பிப் பணம் பொருட் களை கடன்கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். புதிய நண்பர்களின் சேர்க்கையால் பொருட்செலவுகளும், மனநிம்மதி இன்மையும் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் கவனம் தேவை. செய்தொழிலில் புதிய கூட்டாளிகளால் எதிர்பாராத சில ஆதாயங்களை அடைவீர்கள். கடன்வாங்கிப் பழைய கடனை அடைக்க முயற்சிப்பீர்கள். பிரிந்து போன உறவுகளுடன் மீண்டும் சேர்ந்துவாழ வாய்ப்பு உள்ள காலமாகும். வரவேண்டிய பூர்வீகச் சொத்துக்களில் இதுநாள் வரையில் இருந்து வந்துள்ள பிரச்சினைகளில் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் நல்ல முடிவுகள் கிடைக்கும். விசா போன்ற வழக்கு விசயங்களில் சாதகமான நல்ல தீர்ப்புகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

## விருச்சிகம்

தாயின் உடல்நிலையில் ஏற்பட்டு இருந்த பாதிப்புகள் நீங்கி மருத்துவச்செலவுகள் குறையும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுவதற்காக நீண்டதூர பயணங்களை மேற் கொள்ளுவீர்கள் மற்றவர்களின் விசயங்களுக்காக ஜாமீன் போடுவதை தவிர்த்தல் நல்லது. காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேர இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும். பணப்புழக்கம் சுமாராகக் காணப்படும். அரசியல்வாதிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் பணியாற்றுதல் நல்லது. பிற ரிடம் வேலைசெய்பவர்கள் தங்களது பணியில் மிகவும் கவனமுடன் பணியாற்றுவது நல்லது.

## தனுசு

அண்டை அயல் வீட்டுக்காரர்களிடம் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது. வீடு வாகனங்களை வாங்குவதற்கான புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வருவீர்கள். உடம்பில் எலும்பு நரம்பு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். காதல் சம்பந்தமாக இதுவரை யில் இருந்துவந்துள்ள கருத்து வேறுபாடுகள் தீர்ந்து மனநிம்மதி அடைவதற்கான வாய்ப்புகள் உள்ளது விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ள காலமா-கும். இதுநாள் வரையில் இருந்துவந்துள்ள பண நெருக்கடிகள் மாறிச் சற்று முன்னேற்றம் காண்பதன்மூலம் மனநிம்மதி அடைவீர்கள்.

## மகரம்

குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக நீண்டதூர உல்லாசப் பயணங்கள் சென்றுவருவதன்மூலம் மனம் மகிழ்ச்சியை அடைவீர்கள். காதல் விசயங்களில் நல்ல தகவல் கள் வந்துசேரும். வெளிநாடு சென்று வருவதற் கான முயற்சிகளில் பணம் ஏமாற்றமடைய வேண்டாம். தேவையற்ற விசயங்களில் தலையிட்டு மனநிம்மதி இழக்காதிருங்கள். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகள்வர இருப்பதால் எதிலும் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. புதிய வீடு வாகனங்களை வாங்குவதற்காக வங்கிகள்மூலம் எதிர்பார்த்து இருந்த கடன்தொகைகள் கைவந்து சேரும். உடல்நிலையில் கண், காது போன்ற இடங்களில் கவனம் தேவை.

## கும்பம்

குடும்பத்தில் தேவையற்ற மனக்குழப் பங்கள் வர இருப்பதால் மிகுந்த கவன முடன் இருத்தல் உகந்ததாகும். தொலை தூரப் பயணங்களை மேற்கொள்வதன்மூலம் எதிர் பார்த்த காரியங்களில் மனநிறைவடைவீர்கள். உத்தியோகத் துறையினருக்குப் பதவி உயர்வு டன் கூடிய இடமாற்றமும் மேலதிகாரிகளின் ஆதரவும் உண்டாகும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களை கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். வெகுகாலமாக வழிபடாமல் விட்டுப்போன குலதெய்வ ஆலயங் களைத் தரிசனம் செய்வதற்கான காலமாகும். காதலர்களுக்கு நல்ல செய்திவரும்.

## மீனம்

ஒரு சிலருக்குப் புதிய வீடு வாக னங்களை வாங்க வாய்ப்பு உள்ளது. நீண்டகாலமாக வரவேண்டிய பணம் மற்றும் பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். கணவன் – மனைவி உறவுகளில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி மனநிம்மதி அடைவீர்கள். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். வெளிநாட்டில் இருந்து செய்தி கள் கிடைப்பதற்கு இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். புதிய நண்பர்களின் சேர்க்கையால் வீண் மனக்குழப்பங்கள் உண்டாகலாம். உத்தி யாகம் பார்ப்பவர்களுக்கு பணி இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகள் ஏற்படலாம்.

# வரலாறு படைத்த வல்லுநனர்கள்

# முதன் முதலில் பறந்தவர்கள்





1903ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகை யன்று உலகத்துக்கு ஓர் ஒப்பற்ற பரிசு கிடைத்தது. வானத்திலே மனிதன் பறந்து சாகஸம் நிகழ்த்தியது. அந்த கிறிஸ்மஸ் மாதத்தில்தான். பண்டிகைக்கு ஒரு வாரம் இருக்கும் போதுதான் அந்த மகத்தான சாதனையை வில்பர் ரைட், ஆர்வில்லி ரைட் என்ற இரு சகோதரர்கள் நிகழ்த்தினார்கள். இந்த வெற்றிக்குப் பின்னால் எத்தகைய கடினமாக உழைப்புத் தெரியுமா?

முதல் எரோப்ளேனைப் பறக்க விடுவதற் கான ஆராய்ச்சியில் நன்கு கிறிஸ்மஸ் பண்டிகைகள் பறந்தோடிப் போயின. அன்று அவர்கள் கண்ட வெற்றி திடீர் வெற்றியல்ல. பல ஆண்டுகள் கடின உழைப்பு, சிந்தனை, ஆராய்ச்சிகளுக்குப் பிறகுதான் அந்த வெற்றியை அவர்களால் அடைய முடிந்தது.

அமெரிக்காவிலுள்ள இந்தியானாவில் மெல்வில்லி என்னும் இடத்துக்கு அருகில் 1867 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி பிறந்தார் வில்பர். இளையவரான ஆர்வில் இந்தி யானாவில் 1871ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி பிறந்தார். ஏழைக்குடும்பம். பெற்றோர்களால் குழந்தைகளை அதிகம் படிக்கவைக்க முடியவில்லை. உயர்நிலைப் பள்ளிப் படிப்பைக்கூட முடிக்க முடியவில்லை இச்சகோதரர்களால். ஆனால் கல்லூரிப் பட்டம் பெற்றவர்களுக்கும் மேலான ஆற்றலும் திறமையும் அவர்களிடம் இருந்தன.

(தொடரும்)

## பயிற்சி

உடற்பயிற்சியின்போது, பளுதூக்கிக்கு பதிலாக தனது குழந்தைகளை பயன்படுத்தி உடலை வலுப்படுத்திக்கொண்டிருக்கும் தாயொருவர் தொடர்பில் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

லண்டனின் புறநகரான டாகன்ஹாமில் வசிக்கும் மியா வாரிவிக் (வயது 44) எனும் தாயொருவரே இவ்வாறான புதிய வழிமுறையைப் பின்பற்றி உடற்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றார்.

இவர், 7 வயதுடைய இவண் மற்றும் 5 வயதுடைய ஜெஸ்மின் என்ற அவரது குழந்தைகளை தனது உடற்பயிற்சிகளுக்காக பயன்படுத்துகின்றாராம். 20 வயதிலிருந்தே பளுதூக்கும் பயிற்சியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டுள்ள இந்தப் பெண், பல்வேறு போட்டிகளிலும் பங்குபற்றி உள்ளார்.

தனது குழந்தை ஜெஸ்மின் 2008ஆம் ஆண்டு பிறந்ததற்கு பினனர் தனது உடல் எடை மற்றும் வடிவம் மாற்றமடைந்ததால் வீட்டில் இருந்தவாறே தனது குழந்தைகளை பயிற்சிக்கு பயன்படுத்துகின்றாராம்.

எனது கணவர் டொம் (வயது 50) ஒரு ரக்பி வீரர். நான் அவரை உடற்பயிற்சி செய்யும் வகுப்பிலேயே சந்தித்தேன். என்னைவிடவும் உறுதியான உடல்கொண்டவராக எனது கணவர் இருக்கவேண்டும் என்றே ஆசைப்பட்டேன். அதனாலேயே டொம்மை எனது கணவராக தேர்ந்தெடுத்தேன் என்று அப்பெண் கூறியுள்ளார். இந்த பெண், இம்முறை நடைபெறவிருக்கும் தேசிய தன்னார்வ உடற்பயிற்சி போட்டியின் இறுதிக்கட்டத்தில் பங்கேற்கவுள்ளாராம்.







## சாதனை

தாய்லாந்து நாட்டில் உள்ள பாலியில் சனூர் கடற்கரையில் இலவசமாக ஆயிரம் வாடிக்கையாளர்களுக்கு மசாஜ் செய்யும் உலக சாதனை நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. இதை ஒரு தனியார் மசாஜ் நிறுவனம் நடத்தியது. இதன் மூலம் அவுஸ்திரேலியாவின் முந்தைய சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது. ஆயிரம் பேர்களுக்கு சுமார் 15 நிமிடநேரம் ஒரே இடத்தில் மசாஜ் செய்யப்பட்டது. இந்த மசாஜில் கலந்துகொள்ள ஆயிரம் பேர்களுக்கும் மேல் வந்தனர். ஆனால், ஆயிரம் பேர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.



## படகுப் போட்டி

பரீட்சை முடிந்ததை கொண்டாடும் வகையில் அமெரிக்காவின் கேம்பிரீஜ் பல்கலைக்கழக மாணவர்கள் காட்போட் பெட்டிகள் மற்றும் செலோ டேப்புகளை பயன்படுத்தி செய்த வள்ளங்களில் படகோட்டப் போட்டிகளை நடத்தி அனைவரின் கவனத்தையும் திசை திருப்பியுள்ளனர்.

நாட்டின் அதிசிறந்த புத்திசாலிகளாக கேம்பிரஜ் மாணவர்கள் காணப்பட்டாலும் இவர்களது விளையாட்டு குணம் விட்டுப்போகவில்லை. இவர்களது படகுப்போட்டிகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடத்தப்பட்டது. இத்தினத்தை அவர்கள் தற்கொலை தினம் என்று பெயரிட்டுள்ளனர்.

இப்போட்டியின் சில படகுகளுக்கு மாத்திரமே போட்டியின் இறுதிவரை பயணிக்கக் கூடியதாக இருந்தது. இப்போட்டியில் மூன்று ஆண்களைக்கொண்ட அணியே வெற்றிக் கிரீடத்தை சுவீகரித்துக்கொண்டனர். இந்த படகை தயார்செய்வதற்கு ஐந்து நாட்கள் எடுத்தது. வெற்றியாளராகுவோம் என்று எதிர்பார்க்கவில்லை, என்று வெற்றிபெற்ற அணியில் ஒருவர் தெரிவித்துள்ளார்.





## விபரீதம்

சலவை இயந்திரமொன்றில் சிக்கிக்கொண்ட மூன்று வயது சிறுவனை, தீயணைப்பு படையினர் மிகுந்த போராட்டத்தின் பின்னர் உயிருடன் மீட்ட சம்பவம் சீனாவின் கிழக்கு பிராந்தியத்தில் இடம்பெற்றுள்ளது. மேற்படி சிறுவனும் அவனது பெற்றோரும் விருந்தினரின் வீடொன்றிற்கு சென்றுள்ளனர். இதன்போது, சிறுவன் சலவை இயந்திரம் இருக்கும் பகுதியில் விளையாடிக்கொண்டிருந்துள்ளான்.

நாயொன்று சலவை இயந்திரத்தில் இருந்து அனைவரையும் பயமுறுத்தும் காணொலியொன்றை ஏற்கெனவே பார்த்திருந்த அச்சிறுவன் தானும் அவ்வாறு செய்தால் எவ்வாறிருக்கும் என்று எண்ணியுள்ளான்.

இதனைத் தொடர்ந்து சிறுவன், சலவை இயந்திரத்தினுள் புகுந்தபோது அவனது கால் பெருவிரல்கள் உள்ளிருந்த குழாயொன்றில் மாட்டிக்கொண்டுள்ளது.

பெற்றோர்களினால் சிறுவனை வெளியில் எடுக்கமுடியாத நிலையிலேயே தீயணைப்பு படையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தீயணைப்பு பிரிவினர் சலவை இயந்திரத்தை வெட்டி, சிறுவனை எவ்வித பாதிப்புக்களும் இன்றி மீட்டுள்ளனர்.



## பிரமாண்டம்

ஆறே கிழமைகளில் 9000 டொலரை மாத்திரம் செலவு செய்து பிரமாண்டமான வீடொன்றை நபரொருவர் நிர்மாணித்துள்ளார். தாய்லாந்தில் அமைக்கப்பட்டுள்ள இவ்வீடானது வழமையாக நாம் காணும் வீட்டின் தோற்றத்தை போன்றல்லாது குவிவு வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்டீவ் அரீன் என்பவரே இந்த வீட்டை நிர்மாணித்துள்ளார். இவர் தனது நண்பரான ஹஜார் கிப்ரன் என்பவரின் வீட்டிற்கு சென்றபோதே தனது கனவு இல்லம் பற்றி சிந்தித்துள்ளார். பின்னர் அதனை நிர்மாணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

இவ்வீடானது சீமெந்தாலும் செங்கற்களாலும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வீட்டின் அடிப்படை அலகுகளுக்கு மாத்திரம் 6000 டொலரை இவர் செலவிட்டுள்ளார். வீட்டை அழகு படுத்துவதற்கான தளபாட வசதிகள் உள்ளடங்கிய ஏனைய விடயங்களுக்கு 3000 டொலர் உள்ளடங்களாக மொத்தமாக 9000 ஆயிரம் ரூபாவை அவர் செலவு செய்துள்ளார்.







இப்பத்திரிகை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள [illegible] ஜூலை 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 15 வியாழக்கிழமை (31.07.2014) பக்கங்கள் IV ஓசை – 303

## மாதகலில் 13 கிலோ கஞ்சாவை கைப்பற்றிய வவுனியா பொலிஸார்

### 3 சந்தேக நபர்களும் கைது



வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் மாதகலில் 13 கிலோ கிராம் கஞ்சாவைக் கைப்பற்றியுள்ளனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது கடந்த வாரம் வவுனியாவில் இரண்டு கிலோ கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செயயப்பட்டிருந்தார். அவர்

IV ஆம் பக்கம் பார்க்க

## இரண்டாம் தவணை விடுமுறை நாளை

நாடளாவிய ரீதியில் உள்ள அரசாங்க பாடசாலைகள் யாவும் இரண்டாம் தவணை விடுமுறைக்காக நாளைய தினம் மூடப்பட்டு செப்ரெம்பர் முதலாம் திகதி மீண்டும் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைக்காக திறக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, நோன்பு விடுமுறைக்காக மூடப்பட்ட முஸ்

IV ஆம் பக்கம் பார்க்க

## சுன்னாகத்தில் வாள் வெட்டு; வர்த்தகர் படுகாயம்

யாழ். சுன்னாகம் நகரப் பகுதியில் வர்த்தகர் ஒருவர் இனந் தெரியாதோரின் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் இளவாலை பொலிஸ் நிலைய வீதியைச் சேர்ந்த இராஜரத்தினம் இராஜகுமார் (வயது-37) என்ற வர்த்தகரே படுகாயமடைந்து தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

சுன்னாகம் நகரப் பகுதியில் வர்த்தக நிலையம் வைத்திருக்கும் குறித்த நபர் தனது கடையைப் பூட்டிவிட்டு நேற்று முன்தினம் இரவு 9.00 மணிய ளவில் காங்கேசன்துறை வீதியில் நடந்து சென்றுள்ளார்.

IV ஆம் பக்கம் பார்க்க

# இலங்கையுடனான உறவுகளில் பாதுகாப்பிற்கே முன்னுரிமை

### சீனா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையுடனான உறவுகளில் பாதுகாப்பு ஒத்துழைப்பு முக்கியமான இடத்தை வகிப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

சீன மக்கள் விடுதலை இராணுவம் நிறுவப்பட்டு 87 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை கொழும்பிலுள்ள ஹில்டன் விடுதியில் நடைபெற்ற கொண்டாட்டங்களில் உரையாற்றிய சீன இராணுவ அதிகாரியும், கொழும்பிலுள்ள சீனத்தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகருமான கோல் லீ சென்ங்லின் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இதற்கு முன்பிருந்திராத வகையில் சீனா உலகின் ஏனைய பகுதிகளுடன் இணைந்து வருகிறது.

சீனாவின் பாதுகாப்பும் அபிவிருத்தியும், ஒட்டுமொத்த உலகினதும் அமைதி மற்றும் செழுமையுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருக்கிறது.

இலங்கையில் முதல் முறையாக சீனாவின் ஆயுதப்படைகள் நாள் வரவேற்பு நிகழ்வு



IV ஆம் பக்கம் பார்க்க

### இறுதி யுத்தத்தில் வைத்தியசாலையில்

## அனுமதிக்கப்பட்டோர் குறித்து திரட்டப்படுகின்றன தகவல்கள்

இறுதிக் கட்ட யுத்தத்தில் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டோர் தொடர்பான தகவல்களை திரட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காணாமற் போனோர் தொடர்பில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விசாரணைகள் இறுதி யுத்தத்தில் காயமடைந்தவர்கள் அனுமதிக்கப்பட்ட வைத்தியசாலைகளில் இருந்து பெறப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் எச்.டபிள்யூ. குணதாஸ தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைக்காக

IV ஆம் பக்கம் பார்க்க

## முதலாவது உலகப் போர் நினைவு பங்கேற்கமாட்டார் ஜனாதிபதி

### என்கிறது லண்டன் ரைம்ஸ்

அடுத்த வாரம் கிளாஸ்கோவில் நடக்கவுள்ள கொமன்வெல்த் முதலாம் உலகப்போர் நினைவு பிரார்த்தனை தின நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்கமாட்டார் என்று லண்டனில் இருந்து வெளியாகும் த ரைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த 26 ஆண்டு காலப் போரின் இறுதிக் கட்டத்தில்,

IV ஆம் பக்கம் பார்க்க

## தமிழர் பிரச்சினை தீர்விற்கு விதிக்கப்பட்டதா நிபந்தனை?

### பி.ரி.ஐ. செய்தியை மறுக்கும் சேஷாத்ரி

இலங்கைத் தமிழர் விவகாரம் உள்நாட்டு விடயமாகும். இந்த விவகாரம் சர்வதேசமயப்படுத்தப் படக்கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும் என்று பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினரும், வெளியுறவுக் கொள்கைக்கான ஏற்பாட்டாளருமான சேஷாத்ரி ஷாரி மீளவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை-இந்திய வர்த்தக வாணிப நடவடிக்கைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாயின் தமிழர் விவகாரத்திற்கு தர்வு காணப்பட வேண்டும் என்று இலங்கையிடம் எடுத்துக்கூறியுள்ளதாக சேஷாத்திரி சாரி தெரிவித்ததாக பி.ரி.ஐ. செய்தி ஸ்தாபனம் சில தினங்களுக்கு முன்னர் செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த செய்திக்கு மறுப்பு

IV ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பின் இந்தியப் பயணம் மத்திய அரசு அழைக்கவில்லை

### ஊடக செய்தியை மறுக்கும் மாவை, செல்வம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுவினர் அடுத்த மாதத் தொடக்கத்தில், இந்தியாவிற்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியான போதிலும், அதற்கான அழைப்பு இன்னமும் கிடைக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர்களான

IV ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் ஒலிபெருக்கி பாவனை நாளை முதல் புதிய கட்டுப்பாடு

நாளை முதல் அமுலுக்கு வரும் வகையில், வடமாகாணத்தில் ஒலிபெருக்கி பாவனைக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி திங்கள் முதல் வியாழன் வரை இரவு 10.00 மணி தொடக்கம் அதிகாலை 6.00 மணிவரையும் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் இரவு 1.00 மணியில் இருந்து அதிகாலை 6.00 மணிவரையும் ஞாயிற்றுக்கிழமையில் இரவு 12.30 மணியில் இருந்து அதிகாலை 6.00 மணிவரையும் ஒலிபெருக்கி பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஒலிபெருக்கிகளின் பாவனையை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக, திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மதகுருமார்களுடனான கலந்துரையாடலொன்று வடமாகாண விவசாய அமைச்சின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

இந்தத் தீர்மானம், நாளை முதலாம் திகதியில் இருந்து அமுல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட நேரத்துக்கும்

IV ஆம் பக்கம் பார்க்க



வருகின்ற வருமானம் போதாதா?

20,000/= - 38,000/= க்கும் மேற்பட்ட சம்பளத்துக்கு நிரந்தரமான தொழிற்சாலைகளான ஜேம், பிஸ்கட், சொக்லேட், ஐஸ்கிறீம், கிளவுஸ், சிமெந்து, சீட், டயர் ஆகிய நூர் உற்பத்திக்கு பொருட்கள் பெக்கிங் பழுதுபார்த்தல், ஸ்டோர்ஸ் ஆகிய பிரிவுக்கு 18 - 55 வயதான ஆண், பெண் தேவை. சாப்பாடு, பாதுகாப்பான தங்குமிட வசதி உண்டு. சிங்களம் கட்டாயம் இல்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா முன்னுரிமை. தம்பதிகள், நண்பர்கள் ஒரே இடத்தில் குழுக்களாக வருகின்ற தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (0775964299) (C/3735)



பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவர்சங்க அலுவலகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. பழைய மாணவர் சங்கத்தலைவர் என்.குணசீலன், பிரதி அதிபர் எஸ். அருளானந்தம், சங்க உப போஷகர் பேராசிரியர் எம். நடராஜசுந்தரம் ஆகியோர் அலுவலகத்தினைத்திறந்து வைத்தனர். (01)

# தடைசெய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்கள் பயன்படுத்துவது நிறுத்தப்படவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தடைசெய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்களைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுவதை கடற்றொழிலாளர்கள் நிறுத்திக் கொள்வதன் மூலமே அனைத்து கடற்றொழிலாளர்களும் வாழ்வாதாரத்தை சீராகப் பெறமுடியும் என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தினரை சந்தித்துக் கலந்துரையாடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இக்கலந்துரையாடலின்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்

கடல் வளத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற கடற்றொழில் முறைகளையும் உபகரணங்களையும் பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுவது நாடளாவிய ரீதியில் தடைசெய்யப்பட்டுள்ளது. அதற்கான கண்டிப்பான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவற்றில் தங்கூசிவலையைப்பயன்படுத்துதல் இறால் கூடுகளைப்பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுதல் சுருக்குவலைகளைப் பயன்படுத்துதல் என்பனவும் தடைசெய்யப்பட்டுள்ளன. ஆயினும் இன்றும் சில மாவட்ட கடற்றொழிலாளர்கள் தொடர்ந்தும் தடைசெய்யப்பட்ட தொழில் உபகரணங்களைப் பயன்படுத்திவருகின்றனர் இதனால் கடல் வளங்கள் மற்றும் அவற்றின் உற்பத்தி என்பன பாதிக்கப்படுகின்றன. இதன்காரணமாக சட்ட வரையறைகளுக்குட்பட்டு தொழிலில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் வருமான இழப்பை எதிர்கொள்கின்றனர் எனவே அனைத்து மாவட்ட கடற்றொழிலாளர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கமைவாகவும் கடற்றொழில் திணைக்களத்தின் அதிகாரிகளினால் விடுக்கப்படும் தொழில் நடைமுறைகளுக்கமைவாகவும் அனைத்து தொழிலாளர்களும் செயற்படவேண்டும் அதன் மூலமே அனைத்து தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பாதுகாக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இக்கலந்துரைடலின்போது பூநகரிப்பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடும் ஏனைய மாவட்டங்களைச்சேர்ந்த தொழிலாளர்கள் தடைசெய்யப்பட்ட இறால்கூடுகளைப்பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதால் பூநகரி கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

நேற்று முன்தினம் பிற்கபல் 2.00 மணியளவில் பூநகரி வாடியடியில் அமைந்துள்ள கடற்றொழில் நீரியல்வளத்திணைக் களத்தின் பரிசோதகர் அலுவலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண சபைஉறுப்பினர் வை.தவநாதன் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்திக்கைள பிரதிப்பணிப்பாளர் ரவீந்திரன் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழிலாளர்சங்கங்களின் சமேளனத் தலைவர் பிரன்சிஸ் அதன் தலைவர் அருமைராசா மற்றும் சம்மேளனத்தின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.



# தவறான வீதிக்குறியீடுகளை திருத்தியமைக்க கோரிக்கை

மருதனார்மடம் சந்தியில் வீதிப் போக்குவரத்துக்குறியீடுகள் தவறாக இடப்பட்டுள்ளதாகவும் அதனைத் திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கு போக்குவரத்துப் பொலிஸார் வேண்டுகோள் விடுததுள்ளனர். இப்பகுதியிலுள்ள வாகனத் தரிப்புக்குறியீடு பிரதான பாதைக்குறியீடு என்பன சரியான முறையில் இடப்படவில்லை எனவும் அவற்றை சரியானமுறையில் சட்டத்திற்கு அமைவாக அமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் போக்குவரத்து பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளதுடன் இச்சந்தியை விசாலமாக்குவதற்கான அறிவிப்பையும் வழங்கியுள்ளனர். நேற்று யாழ். பொது நூலகத்தில் இடம்பெற்ற செயலமர்விலேயே இதனை போக்குவரத்து பொலிஸார் சுட்டிக்காட்டினர். (இ,25)


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

021 222 8680,
077 592 5088.

(C/3395)


# பணப்பை திருடிய சிறுவன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் பணப்பையை திருடிய எட்டுவயதுச் சிறுவன் ஒருவன் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளான்.

நேற்று முன்தினம் மாலை ஒருவரின் பணப்பையை திருடமுற்பட்ட போதே சிறுவன் பிடிக்கப்பட்டு யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

வவுனியாவிலிருந்து இங்கு அழைத்து வரப்பட்ட உறவினர் ஒருவரின் உந்துதலில் இச்சிறுவன் திருடமுற்பட்டுள்ளான். அம்மம்மா வீட்டில் உள்ள அண்ணாதான் பேஸை திருடுமாறு பணித்தற்கு அமைய திருடியதாகவும் தான் தாலிக்குளத்தில் வசிப்பதாகவும் விசாரணையின்போது சிறுவன் தெரிவித்ததைத் தொடர்ந்து யாழ். பொலிஸார் வவுனியாப்பொலிஸாரின் துணையுடன் இச்சிறுவனை திருடத் தூண்டிய அந்நபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். (இ)

## தேசிய சுனாமி ஒத்திகை

ஊர்காவற்றுறை பிரதேச பிரிவில் உள்ள கரம்பன்மேற்கு ஜே/54 கிராம உத்தியோகத்தர்பிரிவில் இன்று பி.ப. 3.00 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் சுனாமி முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப்பயிற்சிச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் இது தொடர்பில் பொது மக்களை அமைதியாக இருக்கு மாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# பட்டப்பகலில் இருவீடுகளில் கொள்ளை

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் சுமார் 3 இலட்சம் பெறுமதியான நகைகள் மற்றும் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் மற்றும் சுதுமலை பிரதேசங்களில் நேற்று முன்தினம் பட்டப்பகலில் இக்கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக வீட்டு உரிமையாளர்கள் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

குறித்த இரு வீட்டு உரிமையாளர்களும் வெளியில் சென்ற போது, வீட்டினை உடைத்து, கமரா, டி.வி.டி பிளேயர் மற்றும் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் பெறுமதியான நகைகளையும் கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர்.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(25)

# தண்ணீர் எடுப்பதில் பிரச்சினை இளைஞரை கல்லால் தாக்கிய பெண்

தண்ணீர்ப் பிரச்சினையினால் பெண் ஒருவர் இளைஞரை கல்லால் தாக்கி காயப்படுத்திய சம்பவம் ஒன்று யாழ். குருநகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இத்தாக்குதலில் காயமடைந்த இளைஞரான ஜெயராஜ் (வயது 25) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றார்.

சம்பவம் தொடர்பாக தெரியவருதாவது, குருநகர் கடற்கரை வீதிப்பகுதியில் உள்ளகுடிநீர்த் தாங்கியில் தண்ணீர் எடுப்பதற்காக பாத்திரங்கள் வைப்பது வழக்கம். அதன்போது, பெண் ஒருவர் தண்ணீர் எடுப்பதற்காக பாத்திரத்தினை வைத்துள்ளார். யார் முன், பின் என்ற பிரச்சினையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தினால் குறித்த பெண், இளைஞரை கல்லால் தாக்கி காயப்படுத்தியுள்ளார்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (25)

## மீண்டும் ஒரு அதிஷ்டசாலி

சுன்னாகத்தில் மீண்டும் ஒரு அதிஷ்டசாலி தெரிவு செய்யப்பட்டுள்ளார். கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிஷ்டம் பார்க்கப்பட்ட ராசி அபிவிருத்திலொத்தரில் மூன்று இலக்கங்களும் கும்பம் ராசியும் பொருநதியதினால் சுன்னாகம் பிரிவைச்சேர்ந்த ஒருவர் பத்தாயிரம் ரூபா பரிசுக்குரியவரானார்.

சுன்னாகத்தில் அடிக்கடி பரிசுக்குவியல் சீட்டுக்களை விற்பனை செய்து வரும் காங்கேசன்துறை வீதியில் உள்ள வைத்தியலிங்கம் நடராசா என்னும் விற்பனை முகவரிடமே இவ்வதிஷ்டசாலியும் இவ் அதிர்ஷ்டச் சீட்டினைப் பெற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (137)


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

நியத்த ஜய
உத்தியோகபூர்வ முடிவு

| | |
|---|---|
| வெற்றி வாரம் - | 277 |
| திகதி - | 2014.07.29 |
| வர்ணம் - | மஞ்சள் |

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

02 19 50 58 V

பரிசுத் தொகை ரூபா. 10,000,000/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | - | - |
| [illegible] | 50,000/- | 10 | 500,000/- |
| [illegible] | 1,000/- | 179 | 179,000/- |
| [illegible] | 1,000/- | 355 | 355,000/- |
| [illegible] | 60/- | 8400 | 504,000/- |
| [illegible] | 40/- | 4425 | 177,000/- |
| [illegible] | 20/- | 110117 | 2,202,340/- |
| [illegible] | 20/- | 15907 | 318,140/- |
| [illegible] | 10,000,000/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 4,235,480/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 10,215,540/-

2014.08.01ம் திகதி வெள்ளிக்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்
வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
356, [illegible] கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk

(C/3722)

# உழவு இயந்திரங்களுக்கு ஒளித்தெறிப்பு ஸ்ரிக்கர்கள்

விபத்துக்களைத் தடுக்கும் வகையில் உழவு இயந்திரங்களுக்கான ஒளித்தெறிப்பு ஸ்ரிக்கர்கள் தற்போது ஒட்டப்பட்டு வருவதாக சுன்னாகம் போக்குவரத்து பொலிஸ் அதிகாரி சமீர கருணாரட்ண தெரிவித்தார்.

போக்குவரத்து பொலிஸாரின் மாதாந்த செயலமர்வு நேற்று மாலை யாழ்.பொது நூலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இரவு வேளைகளில் உழவு இயந்திரப் பெட்டிகளில் ஒளித்தெறிப்பு இன்மையால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான விபத்துக்களைத் தடுக்க மஞ்சள், சிவப்பு ஒளித் தெறிப்பு ஸ்ரிக்கர்கள் ஒட்டப்படு கின்றன. கண்டிப்பாக மேற்படி ஸ்ரிக்கர்கள் உழவு இயந்திரப் பெட்டிகளில் ஒட்டப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, சாவகச்சேரி பஸ் தரிப்பு நிலையத்தில் போக்குவரத்துப் பொலிஸார் சேவையில் தற்போது நிறுத்தப்பட்டுள்ளனர். இதனால் இப்பகுதியில் அடிக்கடி ஏற்படும் விபத்துக்களைத் தடுக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ, 25)

# குடிநீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முல்லைத்தீவுக்கு 2 மில்லியன் வழங்கல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது நிலவும் குடிநீர்த் தட்டுப்பாட்டினை நீக்கும் பொருட்டு பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் 2 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மேற்படி நிதியினைக் கொண்டு குடிநீர் வழங்கும் நடவடிக்கைகள் கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குடிநீர் வழங்கல் நடவடிக்கையில் மாவட்டச் செயலகத்துடன் இணைந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, மற்றும் பிரதேச சபைகள் ஆகியன மேற்கொண்டு வருகின்றன.

இந்த நடவடிக்கை, முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு, கரைத்துறைப்பற்று, மற்றும் வெலிஓயா ஆகிய 6 பிரதேச செயலக பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தக் குடிநீர் வழங்கலுக்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் இருந்து தொடர்ந்தும் நிதி கிடைக்கப்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் அடையாள அட்டைகளைப் பெறவில்லை

(கொழும்பு)

இம்முறை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு 280,000 மாணவர்கள் தோற்றுகின்ற போதிலும் அவர்களில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் இதுவரையில் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவில்லை என ஆட்பதிவுத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் பாக்கியா ஜயரட்ன தெரிவித்தார்.


பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இத்தகவலை அவர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

இம்முறை பரீட்சைக்குத் தோற்றவுள்ள 16 வயது பூர்த்தியான ஒரு இலட்சத்து 70 ஆயிரம் மாணவர்கள் தேசிய அடையாள அட்டைகோரி விண்ணப்பித்துள்ள போதிலும் அவற்றில் 3 ஆயிரம் விண்ணப்பங்கள் போதிய தகவல்கள் வழங்காமையால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

நிராகரிக்கப்படும் விண்ணப்பங்களை மீண்டும் மாணவர்களுக்கு அனுப்பி திருத்தம் செய்ய கால அவகாசம் போதாது. எனவே மாணவர்களுக்குப் பதிலாக அவர்களது பெற்றோர் எமது திணைக்களத்துக்கு வந்து உரிய தகவல்களை வழங்கித் துரிதமாக தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அயராது உழைப்பவர் அமைச்சர் டக்ளஸ்

## சனசமூக நிலையத் தலைவர் புகழாரம்



(சங்கானை)

இந்த மண்ணின் வளமான தோற்றப்பாட்டுக்காகவும் மேம்பாட்டுக்காகவும் மட்டுமல்லாது மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக அயராது உழைத்துக் கொண்டிருப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே என சங்கானை மத்தி தண்ணீர் தொட்டிலடி சனசமூக நிலையத் தலைவர் சிவதட்சணாமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சங்கானை மத்தி கண்ணன் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழாவில் நேற்று முன்தினம் தலைமையுரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் மனிதர்கள் ஒவ்வொருவரும் தம்மையும் மாற்றிக் கொள்ள வேண்டும்.

அதுமட்டுமன்றி கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களுடன் கூடியதாக அபிவிருத்தியையும் ஒருசேர முன்னெடுக்க வேண்டும்.

அந்தவகையில், மக்களின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளைச் சிறந்த முறையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திட்டங்களை வகுத்து அவற்றைச் செயற்படுத்துவதில் அதிக அக்கறை காட்டி வருகின்றார்.

அதுமட்டுமன்றி இந்த மண்ணின் வளமான தோற்றப்பாட்டுக்காகவும், மேம்பாட்டுக்காகவும் அவர் அயராது உழைத்து வருகின்றார் என்பதுடன், எதிர்காலத்திலும் அமைச்சரால் மட்டுமே சிறந்த அபிவிருத்திகளை மட்டுமல்லாது, மக்களது வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த முடியுமென்றும் சுட்டிக்காட்டினார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போது, கடந்த காலங்களில் எமது மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இருந்து வந்தது.

ஆனால், தற்போது அந்த நிலை மாற்றப்பட்ட அமைதியான சூழல் தோற்றுவிக்கப்பட்டுள்ள நிலையில், மக்கள் எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டு இருக்கின்றார்கள்.


எனவே, தற்போதைய அமைதிச் சூழலை மக்கள் பாதுகாத்துக் கொள்வதன் ஊடாகவே மேலும் முன்னேற்றங்களைக் காணமுடியுமென்றும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே சனசமூக நிலையத் தலைவர் சிவதட்சணாமூர்த்தி விடுத்த கோரிக்கைகள் தொடர்பில் கவனத்துடன் பரிசீலித்து நிச்சயம் தீர்வு காணப்படுமென அமைச்சர் தெரிவித்தார்.

முன்பதாக தொட்டிலடி சனசமூக நிலைய முன்றலிலிருந்து சிறார்களின் இசை அணிவகுப்புடன் மைதானத்திற்கு அழைத்து வரப்பட்ட அமைச்சர் ஆசியுரை வழங்கியதுடன், முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவையும் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இதில் சிறார்களுக்கு அமைச்சர் பரிசில்களை வழங்கி வைத்தார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் இணைப்பாளர் சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்), வடபிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபன சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரி ஜெயபாலன், வலிகாமம் வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரூபா உதயரட்ணம், சங்கானை பிரதேசசபை உறுப்பினர் செல்வகுமார், ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் மேற்கு மக்கள் சபையின் செயலாளர் குணசிறி ஆகியோரும் கலந்து கொண்டனர்.



ஓமந்தை கல்வி அபிவிருத்திப் பேரவையினால் ஓமந்தை மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட நிகழ்வில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 8A, C பெற்ற மாணவனை தமிழ் அறிஞர் கலாநிதி நா.அகளங்கன் பாராட்டிக் கௌரவிப்பதைக் காணலாம்.(11)





**சம்பத் வங்கியின் சாவகச்சேரிக் கிளையின் ஏற்பாட்டில் சாவகச்சேரி நகரசபை பொது நூலகத்தின் சிறுவர் பகுதி பாவனைக்கென கணனி, தளபாடங்கள், புத்தகங்கள் அதற்கான றாக்கைகளும் தவிசாளர் தேவசகாயம்பிள்ளையிடம் கையளிக்கப்பட்டது.**

**வங்கியின் பொது முகாமையாளர் தாரக்க ரன்வெல, தலைமை அதிகாரி திலக் அபேயசிங்க, சாவகச்சேரி கிளை முகாமையாளர் பா. ஸ்ரீதரன் ஆகியோருடன், கலந்து கொண்டவர்களையும் காணலாம். (11)**

# யாழ்.போதனா வைத்தியசாலையில் குருதி வகைகளுக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் எல்லா குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக வைத்திய கலாநிதி கார்த்திக் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியான குருதிப்பரிமாற்றம் காரணமாகவே இத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே குருதிக் கொடையாளிகள் இரத்த வங்கிக்கு சமூகம் தந்து இரத்த தானம் செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். (48)

# இரு இந்திய வியாபாரிகளுக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம்

சுற்றுலா விசாவில் வந்து புடவை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்திய வியாபாரிகள் இருவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த இருவரும் யாழ். வண்ணார் பண்ணைப் பகுதியில் புடவை வியாபாரத்தில் ஈடுபட்ட போது, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். மொபைல் பொலிஸார் இருவரையும் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட இருவரையும் நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போது இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிட்டதுடன், பொருட்களையும் மீண்டும் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (25, இ)

# 157 பேரையும் நாடு கடத்துவதற்கு இலங்கையுடன் பேசவில்லை

## அவுஸ்ரேலியா தெரிவிப்பு



இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்துவது தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் இதுவரையில் பேசவில்லை என அவுஸ்ரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் இந்தியாவிலிருந்தே அவுஸ்ரேலியா நோக்கிப் பயணித்துள்ளனர். எனவே, இந்தியாவிலிருந்து அவுஸ் ரேலியா நோக்கி படகு மூலம் பயணித்த புகலிடக் கோரிக்கையாளர்களை இலங்கைக்கு அனுப்பி வைப்பது குறித்து பேசுவதில் பயனில்லை என மொரிசன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் வாழ்ந்து வந்த அல்லது இந்தியாவிலிருந்து புறப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்களைக் கொண்ட படகே அவுஸ்ரேலியாவை வந்தடைந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த புகலிடக் கோரிக்கையாளர்களை மீள அழைத்துக் கொள்ளுமாறு இந்தியாவுடன் இரகசிய பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதனை ஒப்புக்கொள்வதாகத் தெரிவித்துள்ளார். மூன்று தீர்வுத்திட்டங்களின் அடிப்படையில் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அவுஸ்ரேலிய ஒரேஞ் பாதுகாப்பு படகுகளின் மூலமாக புகலிடக் கோரிக்கையாளர்களை திருப்பி அனுப்பி வைக்க திட்டமிடப்பட்டதாக என்ற கேள்விக்கு நேரிடையான பதில்கள் எதனையும் மொரிசன் வெளியிடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த புகலிடக் கோரிக்கையாளர்களின் புகலிடக் கோரிக்கைகள் அவுஸ்ரேலியாவிற்குள் அவர்களை தங்க வைத்துக் கொண்டு பரிசீலனை செய்யப்படாது என அவர் தெரிவித்துள்ளார். புகலிடக் கோரிக்கையாளர்கள் அவுஸ்ரேலியாவில் குடியேற்றப்படுவதற்கான சாத்தியங்கள் குறைவு என குறிப்பிட்டுள்ளார்.

# சர்வதேச கடன்களைச் செலுத்த சொத்துக்களை விற்கும் நிலை

## அமைச்சர் சம்பிக்க எச்சரிக்கை

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பெறப்பட்ட கடனுக்காக வருடாந்தம் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்த முடியாத இக்கட்டான நிலைமையை அரசாங்கம் எதிர்நோக்கியுள்ளதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதி வருமானம் மற்றும் அரச வருமானத்தை அதிகரிக்காது போனால், தேசிய மற்றும் சர்வதேசக் கடன்களை செலுத்த நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை கடன் சுமை குறைந்து கவர்ச்சிகரமான வளர்ச்சியை பெற்றுள்ளதாகக் கூறினாலும் அரசாங்கத்தின் முழு வருமானம் வருடாந்தக் கடனைச் செலுத்துவதற்கும் போதுமானதல்ல எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

கடனைத் திருப்பிச் செலுத்துவதில் பிரச்சினைகளை எதிர்நோக்கிய உக்ரைன், இத்தாலி போன்ற நாடுகள் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக பெறுமதியான நிலங்கள், துறைமுகம், ரயில் சேவை, மின்சார உற்பத்தி நிலையங்களை வெளிநாட்டவர்களுக்கு வழங்க வேண்டிய நிலைமையை எதிர்நோக்கின.

இதனால், கடன் செலுத்துவதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, நாட்டின் தேசிய வருமானம் மற்றும் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்காது போனால் இலங்கைக்கு அந்த நிலைமை ஏற்படும் எனவும் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார்.

### அனுமதிக்கப்பட்டோர்....

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் திருகோணமலை புல்மோட்டை வைத்திய சாலைக்கான கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விஜயத்தின் போது யுத்தத்தால் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்ட போது மக்கள் அளித்த சாட்சியங்களுக்கு அமைய தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் முல்லைத்தீவு மற்றும் புல்மோட்டை ஆகிய பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டதாகவும் எச்.டபிள்யூ.குணதாஸ குறிப்பிட்டுள்ளார்.

### இலங்கையுடனான...

எமது தூதரகத்தினால் நடத்தப்படுகிறது.

சீனாவும், இலங்கையும் மரபு ரீதியாக நட்புக்கொண்ட அண்டை நாடுகள். 1957 ஆம் ஆண்டு இராஜ தந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, இருநாடுகளும் பரஸ்பர அரசியல் நம்பிக்கை, பொருளாதாரத்துறையில் குறிப்பிடத்தக்க ஒத்துழைப்பு மற்றும் பரிமாற்றங்கள், வர்த்தகம், சுற்றுலா, கலாசாரம், கல்வி, இராணுவம் ஆகிய துறைகளில் வளர்ச்சியை அனுபவித்து வருகின்றன.

பிராந்திய, அனைத்துலக விவகாரங்களில், நெருக்கமான கலந்துரையாடல் மற்றும் கூட்டங்களையும் நடத்துகின்றன.

இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளில் பாதுகாப்பு ஒத்துழைப்பு, முக்கியமான பங்கை வகிக்கிறது.

அண்மைய ஆண்டுகளில், உயர்மட்ட இராணுவ அதிகாரிகளின் பயணங்கள், ஆட்களைப் பரிமாறிக் கொள்ளல், கப்பல்களின் பயணம், இராணுவப் பயிற்சிநெறிகள் மற்றும் ஏனைய துறைகளில் இருதரப்பு இராணுவ உறவுகள், என்பனவற்றில் இரு நாடுகளும் உறுதியான முன்னேற்றம் கண்டுள்ளன.

இருதரப்பினதும் கூட்டு முயற்சிகள், இருதரப்பு இராணுவ உறவுகளை உயர்ந்த மட்டத்துக்குக் கொண்டு செல்ல ஊக்குவிப்பதுடன், வினைத்திறன் மிக்க விளைவுகளையும் பெற்றுத்தரும் என்று உறுதியாக நம்புகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜ பக்ஷ கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

### இரண்டாம்...

லிம் பாடசாலைகள் மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கைகளுக்காக ஆகஸ்ட் முதலாம் திகதி திறக்கப்படவுள்ளன. க.பொ.த. உயர்தரப் பரீட்சை மண்டபங்களாக பயன்படுத்தப்படும் பாடசாலைகள் மாத்திரம் செப்ரெம்பர் முதலாம் திகதி திறக்கப்படவுள்ளன.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஆகஸ்ட் 5 ஆம் திகதி முதலும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை ஆகஸ்ட் 17 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வடக்கில்...

அதிகமாக நிகழ்ச்சிகள் நீடிக்குமாயின் ஒலிப்பெட்டிகளை மட்டுமே பயன்படுத்த முடியும் எனவும் ஆலய வீதிகள் மற்றும் விழா மைதானங்களைத் தவிர ஏனைய இடங்களில் ஒலிபெருக்கிகளைப் பொருத்துவது தவிர்க்கப்படல் வேண்டும் எனவும் தீர்மானம் எட்டப்பட்டது.

அத்துடன், விளம்பர வாகனங்களுக்கு மூன்று மாதகால அவகாசம் கொடுத்து உரத்து அலறும் சினிமாப் பாடல்களுக்குப் பதிலாக மெல்லிசையை ஒலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நடைமுறை வடமாகாண ரீதியில் அமுல்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கூட்டமைப்பின்....

மாவை சேனாதிராசா செல்வம் அடைக்கல நாதன் ஆகியோர் தெரிவித்துள்ளனர். கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் ஐந்து பேர் அடங்கிய குழுவினர் புதுடில்லிக்கு விஜயம் செய்யவுள்ளதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தது. இது குறித்து கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மேற்படி இருவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியாவிற்குப் பயணம் செய்ய ஆவலாக இருக்கின்றனர். எனினும் இதுவரையில் இந்திய மத்திய அரசிடமிருந்து எதுவிதமான அழைப்பும் கிடைக்கவில்லை. இந்திய பிரதமர் மோடியைச் சந்திப்பதற்கு கூட்டமைப்பு சந்தர்ப்பம் கோரியுள்ள நிலையில் அதற்கான வாய்ப்பினை இந்தியா வழங்கும் என்று நம்புகிறோம். அழைப்பு வந்தததும் கூட்டமைப்பின் இந்தியப் பயணம் குறித்து அறிவிக்கப்படும் என்று தெரிவித்தனர்.

# நல்லூர் உற்சவ கடமையில் 600இற்கும் மேற்பட்ட பொலிஸார்

நல்லூர் வருடாந்த உற்சவத்தில் அறுநூறுக்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாபபுக் கடமையில் ஈடுபடவுள்ளனர் என வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

வரலாற்றுப் புகழ்மிக்க நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு கொடியயேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இன்று நள்ளிரவு 12.00 மணி முதல் நல்லூர் கந்தன் ஆலயத்தைச் சுற்றியுள்ள பிரதான வீதிகள் யாவும் மூடப்படுவதுடன் 24 மணிநேரமும் பொலிஸாரின் பாதுகாப்பும் பணியும் குறிப்பிட்ட வீதித் தடை நிலையங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இன்று முதல் ஆலய சுற்றாடலில் அமைந்துள்ள நல்லூர் மாநகர சபையின் சுகாதார பணிமனையில் தற்காலிக பொலிஸ் நிலையம் ஒன்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் தலைமையில் உற்சவம் நடைபெறும் இருபத்தியாறு நாள்களும் இயங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆலய சுற்றாடலில் 24 மணி நேரமும் பொலிஸார் சிவில் உடையிலும் சீருடையிலும் கடமையாற்றவுள்ள்னர். தேவைக்கு ஏற்ப விசேட பொலிஸ் படையினரும் கடமையில் ஈடுபடவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மாங்குளம் பகுதிகளில் இருந்து ஆலய பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படுவதற்காக மேலதிக பொலிஸார் வரவழைக்கப்படவுள்ளனர் எனவும் யாழ். மாவட்டத்தில் உள்ள காங்கேசன்துறை மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட பதினேழு பொலிஸ் நிலையங்களில் இருந்தும் பொலிஸார் இச்சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். மேற்படி பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளும் கூட ஆலய உற்சவம் தொடர்பான பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (25)

### சுன்னாகத்தில்...

இதன்போது முகத்தை துணியால் மூடிக் கட்டிக்கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், அவரை வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

வாள் வெட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### மாதகலில்...

கொடுத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மாதகலில் கஞ்சாவுடன் மூன்று பேர் கைதுசெய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் மொத்த மதிப்பு 27 இலட்சம் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

மேலும் இந்தத் தகவலின் அடிப்படையில் வவுனியா பொலிஸ நிலைய பொறுப் பதிகாரி சன் அபயரெட்ன மற்றும் குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரி ஜெயதிலக ஆகியோரின் தலைமையில் சென்ற குழுவினரே மங்களேஸ்வரன், ஜெயசீலன், அன்ரனி தேவதாஸ் ஆகிய மூவரையும் கைது செய்ததுடன் கஞ்சாவையும் கைப்பற்றினர்.

மேலதிக விசாரணையை வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள். (70)

### முதலாவது....

இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை நடக்கவுள்ள பிரார்த்தனையில் தாம் பங்கேற்றால், இதன் தாக்கம், எதிரொலிக்கும் என்ற கவலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டுள்ளது.

கொமன்வெல்த் தலைவர்கள் மற்றும் பிரித்தானிய அரசியல்வாதிகள் இந்தப் பிரார்த் தனையில் பங்கேற்கின்றனர். ஆனால் அடுத்த ஆண்டுவரை கொமன்வெல்த் அமைப்பின் தலைவராக மகிந்த ராஜபக்ஷ பதவி வகிப்பார் என்ற போதும், அவர் இந்த நிகழ்வில் இருந்து ஒதுங்கி நிற்கவுள்ளார்.

புனித முன்கோஸ் தேவாலயத்தில் நடக்கும் பிரார்த்தனையில், இலங்கையின் சார்பில், பிரித்தானியாவுக்கான அதன் தூதுவர் பங்கேற்கவுள்ளார்.

### தமிழர் பிரச்சினை....

தெரிவிக்கும் வகையில் அனுப்பிவைத்துள்ள விளக்க அறிக்கையிலேயே சேஷாத்ரி சாரி மேற்கண்டவாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழர் விவகாரத்திற்கு தீர்வு காணப்பட்டாலே இலங்கை இந்திய வர்த்தக வாணிப நடவடிக்கைகளில் முன்னேற்றத்தைக் காண முடியும் என்று நான் தெரிவித்ததாக வெளியான செய்தி தவறானது. சிங்கப்பூரில் நடைபெற்ற கருத்தரங்கில் இவ்வாறு நான் எந்தக் கருத்தையும் தெரிவித்திருக்க வில்லை.

நான் கடந்த 20 ஆம் திகதி முதல் 22ஆம் திகதிவரை கொழும்புக்கு விஜயம் செய் திருந்த போது அங்கு இடம் பெற்ற கருத்தரங்கு மற்றும் நேர்காணல்களில் இலங்கை, இந்திய உறவு தொடர்பில் எனது நிலைப்பாட்டினை விளக்கியிருந்தேன்.

இலங்கை தமிழர் விவகாரமானது உள்நாட்டு விடயமாகும். இதனை சர்வதேச மயப்படுத்துவது கூடாது, இலங்கையின் வர்த்தக வாணிப செயற்பாடு தொடர்பில் உயர்ந்த எண்ணத்தையே நாம் கொண்டுள்ளோம்.

இருதரப்பு வர்த்தக வாணிப நடவடிக்கைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாயின், தமிழர் விவகாரத்திற்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று நாம் கூறியதாக வெளியிடப்பட்ட செய்தி தவறானது மட்டுமல்ல, வெறுப்பை ஏற்படுத்தக் கூடியதாகவும் அமைந் துள்ளது.

அத்துடன் இலங்கை-இந்திய உறவு தொடர்பான எனது நிலைப்பாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாக இருக்கின்றது எனத் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யு,லை 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.